56

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

ஏப்ரல் — 1955
மலர் - 2 இதழ் - 12

56
2-55
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 APR 1955
MADRAS
JL
N55 . 2 . 12
19721

அழகிற்கு
அழகு

மனதிற்கு
மகிழ்ச்சி

உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள

வைரம்
தங்க
நகைகள்

வெள்ளி
பாத்திரங்களுக்கு

T. கோவிந்தராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28, நேதாஜி
சுபாஷ் சந்திரபோஸ் ரோடு
மதராஸ் - 1


MADE IN INDIA
MADRAS
1955-ம்
ஆண்டிற்கு
தேர்ந்தெடுங்கள்
புதிய
(801 ரெகுலர்)
வாட்டர்மன்ஸ்
பேனா
ஸன்ஷைன்
"க்ளிப்-காப்"புடன் கூடியது
ஆறு அழகிய நிறங்களில் கிடைக்கும்

எல்லா வலி, நோவுகளையும்
மாயமாய்ப் போக்கடிக்கும்
ORIENTAL BALM
இதில் மாயா ஜாலம் ஒன்றும் கிடையாது. 70 ஆண்டுகளின் அனுபவ அடிப்படையில் அமைந்த சரியானசெய்முறைதான் தடவியதும் வலி, நோவுகளை போக்கடித்து இதமளிக்கச் செய்கிறது. தலைவலி, சிதளம், முடக்கு வாதம் மற்றும் எல்லா தசை வலிகளுக்கும் இன்றியமையாத நிவாரணி.
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்

விநியோகஸ்தர்கள் :

சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் : } ராஜா பிலிம்ஸ் மதராஸ்-2.
மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி : எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை;
திருச்சி & தஞ்சாவூர் : வீ. ஆர். பிலிம்ஸ் லிட், புதுக்கோட்டை;
கோயம்பத்தூர் & நீலகிரி : மஜீத் & ஆனந்தா பிக்சர்ஸ், கோயம்பத்தூர்.
சேலம் : எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம்.
பெங்களூர் மைசூர் & கூர்க் : தல்லம் பிக்சர்ஸ் சர்கூட், பெங்களூர்.

மற்ற விபரங்களுக்கு :

எம். ஏ. வி. பிக்சர்ஸ், சென்ட்ரல் ஸ்டூடியோஸ், கோயம்பத்தூர்.

குளிர்ச்சிக்கும் கூந்தல் வளர்ச்சிக்
கும் சிறந்தது

பிரசிடெண்ட் வெஜிடபிள்
ஹேர் ஆயில்

★

முகத்தின் பருக்களை அகற்றி
அழகை அளிப்பது

பிரசிடெண்ட் ஸ்னோ

★

நறு மணத்துடன் கவர்ச்சியைத்
தருவது

மலபார் பொக்கே
டால்கம் பவுடர்

இலங்கை, பர்மா, மலேயாவுக்கு
ஏஜன்ஸி தேவை

★

தயாரிப்பவர்கள :

RATHOD TRADING CO. MADRAS. I.

AMARCHAND SOBACHAND
POST BOX. 518 .... MADRAS. 3

தமிழை ஆட்சி மொழியாக்குவதே
நமது முதல் லட்சியம்

உமா

செடி 2 மலர் 12	ஏப்ரல் 1955	ஜய ௵ பங்குனி ௴

பொருளடக்கம்

ஆந்திர அரசியல் நிலவரம்	தலையங்கம்	 9
ஒரு முனை வரி வேண்டும்!	உப தலையங்கம்	 11
நெசவாளர் வாரம்	,,	... 12
தம்பிக்கு	'பதி'	... 13
குங்குமப்பூ	க. பஞ்சாபகேசன்	 15
அலை ஓய்ந்தது (தொடர் கதை)	ர. சண்முகம்	 23
நமக்கிடையில் நறுந்தேன்		... 31
'எளிதாகச் சொன்னவரும்...'		 32
ஒரு துளி அமுதம்	'மகுடி'	... 34
கவிஞர் தரும் காட்சி	ந. சஞ்சீவி, எம். ஏ.	 39
வேப்பமரத்து மோகினி	எஸ். வி. ரமணி	... 44
துயர் (கவிதை)	ஸ்ரீ வேணுகோபாலன்	 50
மனக் கதவு	வே. ரங்கராஜன்	... 51
மனப் புயல் (தொடர் கதை)	யோகி சுத்தானந்த பாரதியார்	... 59
நாட்டு நடப்பில் ஒரு சின்னக் கதை	'பிரணதார்த்தி'	... 65
செய்திச் சுவைகள்		 67
மதிப்புரை		 68
கறுப்புப் பூனை (பாப்பா உமா)	வி. ஆர். பாலன்	 70
பிரதிபலிப்புகள்		 73
'விளம்பரப் படங்கள்!'—பட உலகம்		 75
நடனமணிகள் வரிசையில்	'எம்பிஎஸ்'	 80

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



197211

அலையில்லா நீர்ப்பரப்பைப் பாரீரையா! — அதில்
வலை விரித்து மீன் பிடிக்க வாரீரையா!

போட்டோ : ஸி. சீதாபதி

ஆந்திர அரசியல் நிலவரம்

ஆந்திர ராஜ்யத்தில் தேர்தல் முடிந்து அமைச்சர் குழுவும் அமைந்து விட்டது. திரு. கோபால் ரெட்டியார் முதல் அமைச்சராகவும் திரு. சஞ்சீவி ரெட்டியார் துணை முதல் அமைச்சராகவும், மற்றும் அறுவர் அமைச்சர்களாகவும் பதவி ஏற்றிருக்கின்றனர். இவர்களில் இருவர் தவிர, மற்ற அறுவர் அமைச்சர் பதவியில் இருந்து கடந்த காலத்தில் போதிய அனுபவம் பெற்றவர்கள்.

முதல் அமைச்சராக வந்துள்ள திரு. கோபால் ரெட்டியார் 1937-ல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் பதவி ஏற்ற காலத்திலிருந்து, 1952-வரை அமைச்சர் பதவியிலிருந்து பல்வேறு இலாகாக்களை நிர்வகித்து நல்ல அனுபவம் பெற்றவர். ஆகவே அவரது தலைமையில் அமைந்துள்ள புதிய அமைச்சர் குழு ஆந்திர ராஜ்யத்தை நல்ல முறையில் நிர்வகிக்குமென்று நம்புகிறோம்.

சமீபத்திய தேர்தலில் ஆந்திரவலதுசாரி அரசியல்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டது. அமைச்சர் குழு அமைப்பதிலும் அந்த ஒற்றுமை நன்கு பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஒற்றுமை ஆந்திர காங்கிரஸ்காரர்களிடமுள்ள நல்ல குணங்களால் ஏற்பட்டதா, அல்லது அதிகாரம் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் போய் விடக் கூடாதே என்ற அச்சத்தால் ஏற்பட்டதா? இதில் எது உண்மை என்பதை எதிர்காலம் தான் நிரூபிக்க வேண்டும்.

காரணம் எதுவாயினும் ஒற்றுமை நீடித்து நிலைத்திருக்க வேண்டும். இல்லையேல் தேர்தலில் தேசீயவாதிகளுக்குக் கிடைத்த வெற்றி அதிவிரைவில் தோல்வியாக மாறிவிடக் கூடிய அபாயம் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. வாக்காளர்களில், மூன்றில் ஒரு பங்கினர் கம்யூனிஸ்ட் கட்சியிடம் உறுதியான பற்றுதல் வைத்திருக்கின்றனர் என்பது சமீபத்தில் நடந்து விட்ட தேர்தலில் தெரிந்து விட்டது. அசெம்பிளிக்கு உரிய மொத்த ஸ்தானங்களில் நூற்றுக்கு எட்டு ஸ்தானங்களைத் தான் கம்யூனிஸ்ட்களால் கைப்பற்ற முடிந்தது. ஆனால் பதிவான வாக்குகளில் நூற்றுக்கு முப்பத்தோரு சதவிகிதம் வாக்குகள் கம்யூனிஸ்ட்களுக்குக் கிடைத்திருக்கின்றன. மேலும் பதிவான வாக்குகளில் சரிபாதிக்குக் குறைவான வாக்குகள் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கின்றன.

காங்கிரஸ்—கிருஷிக்லோக்—பிரஜா ஆகமூன்று கட்சிகள் ஒன்று சேர்ந்தும், அகில இந்தியாவிலுமிருந்து பிரசார பீரங்கிகளையும் பண மூட்டைகளையும் உதவி பெற்றும் பதிவான வாக்குகளில் சரி பாதி கூட காங்கிரஸ் முன்னணியார் பெற முடியவில்லை என்றால் இதை அலட்சியப் படுத்துவதற்கில்லை. ''தேசீயம்—கம்யூனிஸம்'' ஆகிய இரண்டு

சக்திகளை முன்னதற்கு ஆதரவு தேய்ந்தும், பின்னதற்கு ஆதரவு வளர்ந்தும் வருகிறதென்பதற்கான அறிகுறிகள் ஆந்திராவில் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆகவே பதவி ஏற்றுள்ள அமைச்சர்கள் தங்களுடைய பழைய சரித்திரத்தை மக்கள் மறந்து போகும் வகையில் சாதனைகள் புரிய வேண்டும். ஆந்திராவில் தேசீயம் தேயவும், கம்யூனிஸம் வளரவும் காரணமாக இருந்து வந்த கோஷ்டிச் சண்டைகள் அடியோடு தொலைய வேண்டும். வெறும் பிரசார அளவிலுள்ள 'சோஷலிச பாணி'யை மக்கள் புரிந்து கொண்டு போற்றும் அளவுக்கு அதிவிரைவில் செயலாற்ற வேண்டும்.

ஆந்திர ராஜ்யத்துக்கும், சென்னை ராஜ்யத்துக்கும் எல்லையோரத்தில் சச்சரவுகள் இருந்து வருகிறது. இந்த இரு ராஜ்யங்களிலும் உள்ள அமைச்சர்களிடையே பரஸ்பரம் அன்பும் உறவும் இருக்கலாம். ஆனால் இரு ராஜ்யங்களின் மக்களிடையே சுமுகமான உறவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். தேர்தலுக்கு முன்பு இருந்த பிரகாசம் அமைச்சர் குழு சித்தூர் தமிழ்ப் பகுதிகள் பற்றிய விஷயத்தில் சென்னை அரசாங்கத்தோடு சமரசம் பேச மறுத்து விட்டது. எல்லைக் கமிஷன் நியமிப்பதென்ற மத்திய அரசினரின் யோசனையையும் எதிர்த்து வந்தது. அதே நேரத்தில் சித்தூர் தமிழர்கள் தங்கள் தாய்மொழி மூலம் கல்வி கற்கவும் கடைக்கணக்கெழுதவும் பஞ்சாயத்துப் போர்டுகளை நிர்வகிக்கவும் அனுமதிக்க மறுத்தது. இதன் விளைவாக ஆந்திர-தமிழர் பகை அதிகரித்து வந்ததைத்தான் கண்டோம்.

புதிதாக முதலமைச்சர் பதவிக்கு வந்துள்ள திரு. கோபால் ரெட்டியார், பிரகாசம் அளவுக்குப் பிடிவாதக்காரர் அல்ல, தமிழ் நாட்டு மக்களிடம் நல்லெண்ணம் உடையவரென்று கூட அவருடன் நெருங்கிப் பழகிய தமிழ்த் தலைவர்கள் கூறுகின்றனர்; பிடிவாதக்காரரான பிரகாசம், மந்திரி சபையில் இடம் பெறவில்லை. ஆகவே கூடிய விரைவில் ஆந்திர—தமிழக எல்லைப் பிரசினையை முதல் அமைச்சர் கோபால் ரெட்டியார் இரு ராஜ்யங்களின் மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் தீர்த்து வைப்பாரென்று நம்புகிறோம்.

ஆந்திர கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஒரு கடமையுண்டு. அசெம்பிளித் தேர்தலில் தோற்றுப் போனதற்காக ஆத்திரப்படாமல் ஆக்க வழிப்பட்ட எதிர்க் கட்சியாக அது இலங்க வேண்டும். விவசாய-தொழிலாள வட்டாரங்களில் தனக்குள்ள செல்வாக்கை உபயோகித்துக் காங்கிரஸ் அமைச்சர் குழுவினர் தவறு செய்யாதபடி பார்த்துக் கொள்ளுவதோடு சோஷலிசப் பாதையில் வேகமாக முன்னேறும்படியும் தூண்ட வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சியாயினும் சரி, காங்கிரஸ் அல்லாத கட்சிகளில் வேறு எந்தக் கட்சியாயினும் சரி ஆளும் கட்சியாக வர விரும்பும் ஒரு அரசியல் கட்சி முதலில் கொஞ்ச காலம் ஆக்க வழிப்பட்ட எதிர்க்கட்சியாக இருந்து பாடுபட வேண்டும். அப்படிக்கின்றி எடுத்த எடுப்பிலேயே ஆளும் கட்சியாக இருந்து விட முயல்வதால்தான் எதிர்க்கட்சிக்குரிய இடத்தைக் கூட இழந்து விட வேண்டியதாகிறது. கம்யூனிஸ்ட் கட்சி இதைக் கவனத்தில் வைத்து ஆக்க வழிப்பட்ட எதிர்க் கட்சியாக இயங்குமாக.

ஆந்திர அசெம்பிளியில் பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள எதிர்க் கட்சியாக விளங்குகிறது. நடைபெற்ற தேர்தலில் அசெம்பிளிக்குரிய மொத்த ஸ்தானங்கள்

196-ல் 13 ஸ்தானங்களைத்தான் பி. சோ. கட்சியால் கைப்பற்ற முடிந்திருக்கிறது. அதிலும் 9 ஸ்தானங்கள் கட்சித் தலைவரான விஜயநகரம் ராஜாவின் சொந்த ஜில்லாவில் அவரது சொந்த முயற்சியால் கிடைத்திருக்கின்றன. மற்ற ஜில்லாக்களில் அந்தக் கட்சிக்குக் கொஞ்சம்கூடப் பலம் இருப்பதாகத் தெரியவில்லை; சுருங்கச் சொன்னால் விஜயநகர ராஜாவின் பலம் தான் ஆந்திர பி. சோ. கட்சியின் பலம்! ஒரு அரசியல் இடதுசாரிக் கட்சிக்கு ஜமீன்தாரின் பலத்தைத் தான் பலமாகக் கொண்டிருப்பது வளர்ச்சிக்கு வழியல்ல. காங்கிரஸின் பால் அதிருப்தி கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியையும் ஆதரிக்க முடியாத நிலையிலிருக்கும் தேசியவாதிகள் நாட்டில் ஏராளமாக இருக்கின்றனர். அவர்களை யெல்லாம் பி. சோ. கட்சியில் இழுத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அக்கட்சியின் நிர்வாகிகளுக்கு அந்தச் சாமர்த்தியம் இல்லை. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பி. சோ. கட்சியும் ஆக்கவழியில் செயல்படுமென்று நம்புகிறோம்.

ஆந்திரம், தனியரசு மாகாணம் தான், அதன் லாப நஷ்டங்களில் தமிழ் நாட்டுக்குப் பங்கில்லைதான் என்றாலும், தமிழ் நாட்டின் அண்டை மாகாணம், இந்தியக் குடியரசின் ஒரு அங்க மாகாணம் என்ற வகையில் ஆந்திராவில் உறுதியான அமைச்சர் குழு ஏற்பட்டதற்கு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஒரு முனை வரி வேண்டும்!

குடந்தையில், சென்ற வாரத்தில், வர்த்தகத்துறையைச்சேர்ந்த பிரமுகர்களின் ஒரு முக்கியமான மகாநாடு கூடியது. 'வியாபார அபிவிருத்திக்காகவும், வியாபாரிகளின் ஒருமித்த நலனுக்காகவும், பண்டங்களை வாங்கும் பொது மக்களின் சௌகரியத்துக்காகவும் அரசாங்கத்தார் ஒரு முனை வரிக்கு இணங்க வேண்டும்' என்ற அடிப்படைக் கோரிக்கையைத் தெரிவித்துத்தான் மேற்படி மகாநாடு நடைபெற்றது.

இதுவரை அரசாங்கத்தார் விதித்துக் கொண்டு வந்திருக்கும் விற்பனை வரியின் உண்மை நிலையை அறிய வேண்டுமானால், மற்றவர்களின் மொத்த வருவாய்களுடன் இந்த விற்பனை வரி அம்சத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு தெரிய வரும். சென்னை அரசாங்கத்தின் மொத்த வருவாயில் நில வரி 13.8 சத விகிதமும், வருமான வரி 14.16 சத விகிதமுமாக இருக்கின்றன. ஆனால் விற்பனை வரியினால் வருகிற வருமானமோ 23.35 சத விகிதம் ஆகிறது என்று கணக்கிடப் பட்டிருக்கிறது, அதாவது ஒரு பண்டம் 3 அல்லது 4 முறை கை மாறும்போது, ரூபாய்க்கு 1 அணா விற்பனை வரி ($6\frac{1}{4}$ சத விகிதம்) என்று போய்க்கொண்டே போவதால்தான் இந்த விளைவு. இவ்வாறு உயர்ந்து கொண்டே போவதனால் பண்டங்களின் விலைவாசியும் உயர்ந்து கொண்டே போவதில் அதிசயமில்லை. இதனால் வியாபாரிகள் சோர்வடைந்து விடுவதல்லாமல், பண்டங்களை வாங்கும் பொதுமக்களின் மனத்திலும் விலையைப் பற்றிய கசப்பு தோன்றி விடுகிறது.

குடந்தையில் கூடிய பலமுனை வரி எதிர்ப்பு மகாநாட்டில் வர்த்தகப் பிரதிநிதிகள் இந்த அம்சத்தை நன்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். முன்பெல்லாம் அரசாங்கத்திற்கு வருவாய்த் துறைகளில் நிலவரி வருமானம்தான் அதிகமாயிருந்தது. இப்போதோ விற்பனை வரி அதை மிஞ்சிவிட்டது. இதனால் வியாபாரிகள் மட்டுமல்லாமல் அவர்கள் வியாபாரமும் பொதுமக்களும்பாதிக்கப்படுகிறார்

கள் என்பதையே மகாநாட்டில் நன்ருகப் புள்ளி விவரங்களுடன் அவர்கள் சுட்டிக் காட்டினுர்கள்.

அரசினருக்கு வருமானம் வரக் கூடாது என்று எவரும் சொல்ல முடியாது; அரசாங்கத்தின் வருமானத்தைப் பொறுத்துத் தான் நாட்டின் சுபிட்சம் என்பதைப் பலரும் ஒப்புக் கொள்வர். ஆனல் பல முனையிலும் விற்பனை வரி விதித்துப் பண்டங்களின் விலை உயர்வுக்கும் மக்களின் அயர்ச்சிக்கும் காரணமாவதைவிட, ஒரு முனையில் வரி விதிப்பது நல்லது என்பது ஒப்புக் கொள்ளக் கூடிய கோரிக்கை. இது விஷயத்தில் குடந்தையில் கூடிய வியாபாரிகள் 'ஒருமுனை வரியினுல் நிதி நிலைமை பாதிக்கப் பட்டு விடுமோ என்று அரசினர் சந்தேகிக்க வேண்டியதில்லை; விதிக்கப்படும் ஒரு முனை வரி சற்று உயர்ந்த விகிதமாக விதிக்கப்பட்டாலும் நாங்கள் வரி செலுத்தத் தயார்' என்று கூறியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய கோரிக்கை.

பல முனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக்கும் விஷயத்தில் அரசினரும் வியாபாரப் பிரதிநிதிகளும் சேர்ந்து ஒரு உயர்தரக் கமிட்டியை நியமித்து ஆராய வேண்டும் என்று மகாநாடு தீர்மானித்திருக்கிறது. அப்போது பிரசினைகளை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துத்தாராளமாக விவாதிக்கலாம் என்பதில் சந்தேகமில்லை.

நெசவாளர் வாரம்

விவசாயமும் கைத்தறி நெசவும் நம் நாட்டின் தலையாய தொழில்கள். இவ்விரண்டு தொழில்களையும் நம்பித்தான் நாட்டில் முக்கால் வாசிப்பேர் ஜீவனம் நடத்தி வருகிருர்கள். ஆகவே அரசினரும் சரி, மற்ற தலைவர்களும் சரி— இவ்விரண்டுக்கும் பெருமதிப்புக் கொடுக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

சமீபத்தில் அகில இந்திய கைத்தறிவாரம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தொழிலுக்கு மதிப்புத் தரும் நோக்கத்தில் கைத்தறிவாரம் கொண்டாடப்பட்டது மட்டுமல்லாமல், சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் சங்கத்திலும், இதர பாகங்களிலும் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகள்தேங்கிவிட்டனவாதலால் இவற்றைக் கூடிய மட்டும் விற்பனை செய்வதற்குமாகக் கைத்தறி வாரம் கொண்டாடப்பட்டது.

கைத்தறித் துணிகள் பெருவாரியாகத் தேங்கிக் கிடக்கும்போது அவற்றை மேற்கொண்டு உற்பத்தி செய்ய முடியாது. உற்பத்தி இல்லாமற் போனுல், நெசவுத் தொழிலை நம்பியிருக்கும் லட்சக் கணக்கான நெசவாளர்களுக்கு வேலையில்லாமற்போகும். ஆகவே கைத்தறி வாரத்தில் துணிகளை வாங்குபவர்களுக்கு ரூபாய்க்கு இரண்டணு தள்ளுபடி செய்து விற்கிருர்கள். இத் தள்ளுபடியினுல் உண்டாகக்கூடிய வருவாய்க் குறைவை, மில்துணிகளுக்குப் பிரத்யேக வரிவிதித்து இதன் மூலம் வரும் வருவாயைக்கொண்டு ஈடுசெய்ய அரசினர் முனைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

பொதுவாக இந்த வாரத்தில்' அரசினர், கூட்டுறவு விற்பனைச் சங்கத்தினர், இதர வியாபாரிகள் யாவரும் கைத்தறித் துணிகளைப் பெருமளவுக்கு விற்பனை செய்ய முயற்சித்திருப்பது நெசவாளர் துயர் தீர வழி செய்ததாகும். இவர்கள் யாவரும், பண்டைய காலத்திலிருந்து நம் நாட்டில் வேரூன்றி யிருக்கும் தொழிலுக்கு மதிப்புத் தந்து தங்கள் பெருமையையும் உயர்த்திக் கொண்டிருக்கிருர்கள்.

மாணவர் நிலை

அன்புள்ள தம்பி,

உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டி எழுதியிருக்கும் உன் கடிதம் கிடைத்தது. உன் போன்ற அநேக மாணவர்கள் பள்ளிக்கூட, சர்வகலாசாலைப் பரீட்சைகளில் மட்டுமின்றி, மத்திய அரசினரும் மாகாண அரசினரும் நடத்தும் பரீட்சைகளிலும் வெற்றி பெற்றும் தகுதியான உத்தியோகம் கிடைக்காமல் அவதியுறும் நிலையைப் பற்றி எழுதியிருக்கிறாய்.

'எங்களுடைய எதிர்காலம் மேம்பட்டு இருக்கும் என்று எத்தனையோ ஆசையுடன் ஊக்கமாகப் படித்தோம்; பட்டமும் பெற்றோம். வேலைகளுக்காக மனுக்களைப் போட்டுக் கொண்டிருக்கும் நிலையின் நடுவில், அவ்வப்போது அரசினர் நடத்தும் போட்டிப் பரீட்சைகளுக்கு முன் கூட்டியே பணம் கட்டிப் படித்து ஆஜரானோம்; அவற்றிலும் வெற்றி பெற்றோம். ஆனால் வேலையுத்தரவு வாராமல் ஆவலும் கவலையும் கலந்தவராய், இவ்விளம் வயதிலேயே வாழ்க்கையில் ருசியில்லாமல் காலம் கழிக்கிறோம். எங்களைவிட அறிவிலும் தகுதியிலும் குறைந்தவர்களுக்கெல்லாம் வாய்ப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், எங்களுக்கு மட்டும் அவை கிட்டாமல் போவது எத்துணை வருந்தத் தக்க விஷயம், என்றெல்லாம் உன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாய்.

தம்பி, தற்கால வாழ்வில் 'கல்வி' என்பது நம்மிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு அம்சமாகப் போய் விட்ட போதிலும், தற்போது பள்ளிக்கூடங்களிலும், சர்வகலாசாலைகளிலும் போதிக்கப்படும் கல்வியின் போக்கும் தரமும் சரிதானா, தற்கால வாழ்க்கை நிலையையொட்டியதுதானா என்று கல்வி நிபுணர்கள் கூடச் சரியாக ஆராய்ந்து தெளிந்திருக்கவில்லை. மாணவர்களுடையமனப்போக்கையொட்டியபடி அவரவருக்குத் தொழிற் கல்வி அமைய வேண்டிய வசதிகள் நம் நாட்டில் இன்னும் பரிபூரணமாக அமையவில்லை.

இந்த நிலைமைக்கு ஓரளவு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அதற்குப் பரீட்சாதிகாரிகளும் அரசினரும் 'தகுதி–தகுதியின்மை' விஷயத்தில் தீர்மானமானதொரு முடிவு ஏற்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும்.

உதாரணமாகப் பள்ளிக்கூடத்தில் சிறு வகுப்புகளிலிருந்து படித்து வரும் மாணவரில் சிலருக்கு 'இலவசப் படிப்பு வசதி' (ஸ்காலர்ஷிப்) கிடைக்கிறது. 'ஸ்காலர்ஷிப்' இரு அடிப்படைகளைப் பொறுத்து வழங்கப் படு

இவ்விதழில் வெளியாக விருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களின் **'புறநானூற்றுக் கட்டுரைகள்'** 'உமா' ஆண்டு மலரிலிருந்து துவங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

கிறது. ஒன்று, குறிப்பிட்ட மாணவர் மிகவும் ஏழையாக இருப்பார்; அதனால் அவருக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைக்கிறது. மற்றொன்று, ஒரு மாணவர் வகுப்பில் மிகக்கெட்டிக்காரராயிருப்பார். அதனால் அந்தமாணவருக்கு இலவசப் படிப்பு வசதி கிடைக்கும்.

பிறகு கல்லூரிப் படிப்பும் முடிந்து, வேலைகளுக்காக அலையும் தருணத்தில் மத்திய அரசினரும் மாகாண அரசினரும் நடத்தும் அனேக பரீட்சைகள் பலவிதத்தில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுவந்தாலும், அவற்றுக்கும் பணம் கட்டி மாணவர்கள் பரீட்சை எழுத வேண்டியிருக்கிறது. பரீட்சை தேறியிருக்கும்; இறுதிப் பரீட்சையான 'பேட்டிப் பரீட்சை'க்கு வெற்றி பெற்ற மாணவர்களைக் கூப்பிடாமலிருப்பார்கள் அப்படிப் 'பேட்டிப் பரீட்சை களுக்குக் கூப்பிடப்படும் மாணவர் களிலும் ஒரு சிலருக்குத்தான் குறிப்பிட்ட வேலை கிடைப்பதில் வெற்றி கிடைக்கிறது. மற்றவர் 'சிபார்சின் மூலமாக எல்லாமே நடக்கிறதோ' என்று நினைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அயல் நாடு சென்று படித்ததற்குரிய 'இலவசப் படிப்புவசதிகளை' மத்திய அரசினர் ஒரு சில மாணவருக்கு வழங்கும் ரீதியில் ஓரளவுக்கும் மேலே சிபார்சுகள் பயன் படுகின்றன.

தம்பி, இன்றைக்கு ஆங்காங்கு தகுதியற்றவர்கள் வகித்துக் கொண்டுவரும் பதவிகளைப் பற்றிச் சொன்னால் இந்தக் கட்டுரை விரியும். தான் வகித்து வரும் பதவியைச் சம்பந்தப் படுத்தியிருக்கும் தொழிலில் தேர்ந்த அறிவும் அனுபவமும் இல்லாதவர்களெல்லாம் இன்று அந்தந்தப்பதவிகளில் உலவி வருகிறார்கள். இவர்களில் கல்வி அறிவு நிறைய உடையவர்களும் அநுபவம் மட்டுமே செறிந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் சந்தர்ப்பங்கள், சிபார்சுகள் ஆகியவை துணை செய்ததைப் போல வேறெதுவுமே துணை செய்திருக்க முடியாது என்பது உண்மை. தொழிலுக்கு எப்போதுமே பெருமையுண்டு. நீ கற்கும் கல்வியை உன் மனம் விரும்பும் எந்தவொரு தொழிலிலாவது ஈடு படுத்திப் படித்தாயானால், 'கற்றதனாலாயபயனை' நன்குபெறுவாய்.

உன் அன்புள்ள,
தமையன்.

மேலட்டைச் சித்திரம்,

சித்திரத்துக்குள் தெரியும் அருமையான சித்திரம்! இளமையான காலை நேரம். கானப் பறவையான வானம்பாடி கலகலெனப் பாடுகிறது; தூரத்து அருவியிலிருந்து ஆற்று நீர் இனிய ஓசை எழுப்பி வருகிறது; இதை ரசித்துக்கொண்டு அன்னப் பட்சி அழகு உலா வருகிறது.

இத்தனையும் சித்திரத்துள் தெரியும் சித்திரம்தான்; உதய கால வேளையில் வீணை ஏந்தி, மலர் விரல்களை அதில் நடனமிடச் செய்து, அந்த நங்கை பூபாள ராகம் பாடுகிறாள். அந்தச் சுக சங்கீதத்தில்அவள் உள்ளத்திலே காலைப் பண்ணின் சூழ்நிலை எத்தனை அழகாக உருவெடுத்திருக்கிறது!

"ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!"

—பாரதியார்

சந்திலாவுக்கு, நம் அருமைத் தமிழ் மொழியின் தேனினுமினிய வார்த்தைகளின் சரியான உச்சரிப்பைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் என் மனைவி மரகதம். ‘அழகு’, ‘பண்பு’ என்ற இந்த வார்த்தைகளை அந்தப் பெண் சந்திலா உச்சரித்த போது, அவளுடைய அழகிய முகத்தில் அந்த வார்த்தைகளின் உண்மையான குணமே ஒளிவிட்டது என்று சொல்ல வேண்டும்.

தமிழ் பேசத் தெரியாமல் அந்தப் பெண் சந்திலா எத்தனை ஆதங்கப்பட்டாளோ, அத்தனைக்குக் கோவா பாஷையான கொங்கணியையும் பேசத் தெரியாமல் என் மனைவி ஆதங்கப்பட்டாள். என்னவோ தெரியவில்லை, இந்த இரண்டு பேருக்குள்ளும் அசாத்தியமான நட்புறவு தொடங்கிவிட்டது, நான் அந்த ஊருக்கு மாற்றலாகிப் போனவுடனேயே.

முதலில் மாற்றல் உத்தரவு வந்தபோது அது எனக்குப் பிடிக்கவே இல்லை. ‘எங்கிருந்து எங்கே மாற்றுகிறார்கள்!’ என்றுதான் நினைத்தேன். சென்னையிலிருந்த என்னை, போர்த்துகீசிய ராஜ்யமான கோவாவின் தலைவாசலில்—எல்லையில்—இருந்த காஸில்ராக் ரயில்வே ஸ்டேஷனுக்கு மாற்றினார்கள், உதவி ஸ்டேஷன் மாஸ்டராக. வயிற்றுப் பிழைப்பென்றால் போய்த்தானே ஆகவேண்டும்? என் மனைவி மரகதத்துக்கு ஒரே சந்தோஷம். தெரியாத ஊருக்கு—தேசத்தின் எல்லைக்குத் தன் இளங் கணவரோடு செல்கிறோம், அதிலும் உறவு மனிதர்களின் சிந்தனையில் ‘தூரத்துப் பச்சையாக’ விளங்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி அவளுக்கு.

குந்தக்கல்லிலிருந்து ஹூப்ளி சென்றோம். ஹூப்ளியிலிருந்து பூனா வழியாகப் பம்பாய் செல்லும் பாதையில் ‘லோண்டா’ என்றொரு ஜங்ஷன் இருக்கிறது. அங்கே இறங்கி, மர்மகோவாவுக்குச் செல்லும் கிளை ரயிலில் சென்று காஸில்ராக் ஸ்டேஷனை அடைந்தோம்.

இதயத்துள் ஒலிப்பது நாதம். வாய்ப் பூட்டுப் போட்டாலோ வாத்தியத்தைப் பற்றிக் கொண்டாலோ அந்த இசை ஒடுங்கிவிடாது.

காஸில்ராக்தான் இந்திய யூனியன் எல்லையைக் காட்டிற்று அங்கு. அதற்கப்புறம் கோவா; போர்த்துகீசிய ராஜ்யம். அதனால் காஸில்ராக் ஸ்டேஷன் ஒரு சுங்க பரிசோதனை இடமாக இருந்ததில் வியப்பில்லை.

லோண்டா ஜங்ஷனைத் தாண்டி ரெயில் மலைப் பாதையில் சென்று கொண்டிருந்தபோது மரகதம் இரு பக்கமு மிருந்த ரமணீயமான காட்சியைப் பார்த்து வியந்து கொண்டிருந்தாள். கைக்கு எட்டி விடும்படியான இடத்தில் தொங்கிக்கொண்டிருந்த பலாப் பழங்களும், நீளமான விசிறிகளைப் போன்றிருந்த இலைகளுட னிருந்த மலை வாழைகளுமாகக் கண்ணுக்கு வெகு குளிர்ச்சியாக இருந்தது.

''இங்கேயே இப்படி என்றால் அவர்கள் ராஜ்யத்தில் எப்படியோ?'' என்றாள் மரகதம்.

''எவர்கள் ராஜ்யத்தில்?''

''கோவாவில் தான்....''

''அது அவர்கள் ராஜ்யம் என்று யார் சொன்னார்கள்? வாழையும் கமுகும் பலாவும் நம் பாரதத்துக்கே சொந்தம். இன்னும் கொஞ்ச நாளில் பாரேன். சத்தியாக்கிரகத்தில் வெற்றி கண்டு, கோவா நம்மோடு ஐக்கியமாகிறதா இல்லையா என்று பார்!'' என்றேன் நான்.

அங்கே போய் வேலையை ஒப்புக்கொண்ட ஒரு வருஷ காலத்துக்குப் பிறகு உண்மையில் சத்தியாக்கிரகம் துவங்கிவிட்டது. பக்கத்தில் 'பெல்காம்' என்ற இடத்திலிருந்து இந்தியத் தொண்டர்கள் வந்து சென்ற வண்ண மிருந்தனர். காஸில்ராக் ஸ்டேஷனில் சுங்க விதிக் கட்டுப்பாடுகள் மிக மிகப் பலமா யிருந்து, என்னுடைய தினசரி வேலைகளையும் விசுவரூபம் எடுக்கச் செய்து வந்தன.

இந்தச் சமயத்தில்தான் சந்திலா, என் மனைவி மரகதத்துக்குச் சினேகிதமானாள். கோவாவில் பிர பல வியாபாரி ஒருவரின் மகள் சந்திலா. அந்த வியாபாரி தம்முடைய தொழில் சம்பந்தமாக இந்தச் சமயம் பார்த்து மேனாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யப்போயிருந்தார். சந்திலா, காஸில்ராக் ரெயில்வே ஸ்டேஷனில் சுங்க ஆபீஸில் வேலை பார்த்து வந்த தன் சிற்றப்பனின் வீட்டுக்கு வந்திருந்தாள். பக்கத்துக் 'குவார்ட்டர்ஸ்'; மரகதமும் சந்திலாவும் சகோதரிகளைப் போலப் பழக ஆரம்பித்தார்கள்.

மரகதம் சந்திலாவைவிட நாலைந்து வயது பெரியவள்தான். இருந்தாலும் இரு குழந்தைகளைப் போலப் பழகினார்கள் அவர்கள். சந்திலாவின் பாஷை கொங்கணி; ஆனால் அது அவள் தாய்ப் பாஷையல்ல என்பதை அவளே அறிவாள். அவள் தந்தை வெகு காலத்துக்கு முன்பு இந்தியாவிலிருந்து கோவாவுக்குச் சென்று ஒரு கோவா மாதையும் கல்யாணம் செய்து கொண்டார். பிறகு அவருக்குச் சந்திலா பிறந்தாள். இருந்தாலும் கொங்கணி பாஷை சந்திலாவின் தாய் பாஷைதான் என்று தீர்மானமாகச் சொல்லிவிடுவதற்கில்லை.

சந்திலாவின் அழகைக் குறித்து அதிகம் சொல்லவேண்டியதில்லை. கோவா மாதர்களின் அழகு நல்ல பிரசித்தமானது. ''அந்தப் பெண் தான் எத்தனை அழகாய் இருக்கிறது!'' என்று மரகதமே என்னிடம் சொல்லியிருக்கிறாள். அழகான, நீண்ட இரட்டைப் பின்னல்; நடுவகிடோடு லட்சணமாகத் தெரியும் சுருளான கூந்தல்; சூரியகாந்திப் பூவின் நிறம்; கறுப்புத் திராட்சைப் போன்ற கண்கள்.... மற்றபடி வேறெதுவும் சொல்லாமல், 'வாலைப் பருவம்' என்று சொல்லிவிட்டால் போதும்.

நல்ல, அடக்கமான பெண் சந்திலா. மற்றவருடைய நாகரிகத்தை நன்றாக அறிந்து தெளிந்து நடக்க வேண்டும் என்ற சித்தம் அவளுக்கு இருந்தது. என் மனைவி

யைக் கண்டதும் அவளுக்குப் பிடித்துப் போனதற்கு முதற் காரணம் இதுதான்.

ஒரு நாள் அதிகாலையில், என் வீட்டு முன் வாசலில் ஈஸிசேரில் படுத்துக்கொண்டு அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தேன். கோவா சத்தியாக்கிரகத்தைப் பற்றிய கெடுபிடிகள் பத்திரிகையில் வெளியாகியிருந்தன. இந்தியாவிலிருந்து போன பத்திரிகைகளை மர்மகோவா ஸ்டேஷனில் பகிரங்கமாக எரித்த செய்திகள் வெளியாகியிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலே குறிப்பிட்டதொரு செய்தி என் கவனத்தைக் கவர்ந்தது.

''மர்மகோவா ரெயில்வே ஸ்டேஷனில், கையில் ஒரு பிடில் வாத்தியத்தோடு வந்து இறங்கிய ஒரு இந்தியத் துறவியிடமிருந்து மேற்படி பிடில் வாத்தியம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பிடிலோடு அத்துறவி கோவாவின் கிராமங்களுக்குள் சென்று, விடுதலைக்கான சுதந்திர கீதம் பாடுவார் என்று சந்தேகிக்கப்படுகிறது. மேற்படி துறவி கோவாவில் இருக்கிறவரை தம் வாயைத் திறக்கக் கூடாது என்று சட்டமும் போடப்பட்டிருக்கிறது!''

இந்தச் செய்தி எனக்கு வியப்பை அளித்தது. கையிலிருந்த பிடில் வாத்தியத்தை அகற்றிவிட்டால் ஒருவருடைய சங்கீதத்தைத் தடுத்துவிட்டதாக ஆகும் என்று நினைக்கும் தேசத்தினருக்கு எப்படிப்பட்ட கலைஞானம் இருக்கும் என்று நினைத்து வியந்தேன்!

அப்போது உள்ளேயிருந்து இனிய சங்கீதக் குரல் கேட்டது. என் மனைவி மரகதத்தின் இனிய சங்கீதக் குரல். காலை நேரத்துக்குத் தகுந்தபடி பூபாள ராகத்தில், ''கடலின் மீது கதிர்களை வீசிக் கடுகி வான்மிசை ஏறுதி ஐயா!'' என்ற பாரதியாரின் பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள்.

> மனிதனுடைய தவறுகளுக்கு மறதி ஒரு காரணமல்ல. மறந்தும் இறைவன் மனிதனுடைய மனத்தில் மறதியைப் புகுத்தவில்லை.
>
> —எட்மண்ட் பிருய்ட்

அப்போது சந்திலா மரகதத்தின் அருகில் இருந்து கொண்டு அந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்ததும் எனக்குத் தெரியும். எந்தத் தேசத்தில், இந்திய சங்கீதம்கூட நுழையக் கூடாது என்று தடை விதிக்கிறார்களோ, அந்தத் தேசத்தைச் சேர்ந்தவள்தான் சந்திலாவும். இவளுக்குமட்டும் எப்படிப்பட்ட ரஸிக்யம் மரகதத்தின் பாட்டில் இப்படி விழுந்துவிடும் என்று எனக்குப் புரியவில்லை.

கொஞ்ச நேரம் சென்றது. பூபாள ராகத்துக்கான அதிதேவதையையே என் கண்முன் நிற்கச் செய்த மரகதத்தின் பாட்டு முடிவுற்றது.

''நீ பாடு'' என்றாள் மரகதம், சந்திலாவைப் பார்த்து. இதுவரை சந்திலா பாடி நான் கேட்டதே இல்லை. அவளுக்குப் பாடத் தெரியுமா? பாட வருமா? மற்றவர் சங்கீதத்தின் அருமை, பெருமைகளை உணராத ஒரு தேசத்தைச் சேர்ந்த பெண்—வெறும் அரசியல் நோக்கத்துக்காக வாத்தியம் கொண்டு வந்தவரின் வாய்க்குப் பூட்டுப் போடும் ஒரு தேசத்தைச் சேர்ந்த பெண்—என்னதான் இப்படிப் பாடிவிடுவாள் என்று நினைத்தேன் நான்.

முதலில் சந்திலா சிணுங்கினாலும், மரகதம் மேலும் மேலும் வற்புறுத்தவே, 'சரி' என்று ஒத்துக்கொண்டு பாட ஆரம்பித்தாள்.

மரகதத்தின் குரலைவிடவும் இனிமையாயிருந்தது சந்திலாவின் குரல். முதலில் அசட்டையாகக் கேட்க ஆரம்பித்தவன் அந்த அற்

> சோகம் வாழ்க்கையின் பிறப்புரிமை. இந்த நினைப்புடன் கூடக் காரியங்களைச் செய்யப் போனால், நம் காரியங்களைச் சோக மயமாகாதபடிச் செய்ய முயற்சிக்கலாம்.
>
> —ஆஸ்கார் ஒயில்ட்

புதமான இசையைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

தமிழில் நல்லதொரு நாட்டுப் பாடலைக் கர்நாடக இசைமெட்டில் அமைத்து, பிரசித்தி பெற்ற வித்துவாம்சினி யொருவர் கோவா கொங்கணி பாஷையில் மொழி பெயர்த்துப் பாடுவதைப் போலிருந்தது. பாட்டின் சாகித்தியப் பொருளைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது தான். இருந்தாலும் அந்த இசை என்னைச் சூழ உணர்ச்சி நிறைந்த சித்திரமுள்ள ஒரு கோட்டையைச் சிருஷ்டித்தாற் போலிருந்தது. தமிழ் நாட்டில், கரிகால்வளவன் காலத்தில், அவன் சபையில் பாட வந்த புலவரொருவர் மாலை நேரத்தில் காலைப் பண்ணைப் பாடிக் காலைச் சூழ்நிலையையேகொண்டு வந்தாரே, அதை போலவே சந்திலா பாடியது இசையின் நாதத்துக்கு எந்த விதமான பேதா பேதமும் இல்லை, அது பரிசுத்தமானது என்று என்மனத்தில் தோன்றச் செய்தது.

அந்தச் சமயத்தில் சந்திலாவின் முகம் தான் எத்தனை அழகாயிருந்தது! இனிய குரலும் அழகும் சேர்ந்த ஒரு பெண்—வேறொரு தேசத்தில் இருக்கிறாள் என்ற நினைப்பையே என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. சந்திலாவைப் போன்ற எத்தனைப் பெண்கள் இம்மாதிரி கோவாவில் வளைய வருகிறார்களோ!

அவளை புகழ வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமல்ல. உபசாரத்திற்காகவும் ஒரு வார்த்தை சொல்ல நான் விரும்பவில்லை. இருந்தாலும் என் மனக்கிடைக்கையைச் சொல்ல விரும்பினேன்.

பாட்டு முடிந்தது. கையிலிருந்த தினசரிப்பத்திரிகையுடன் உள்ளே

அவர்களிருந்த இடத்துக்குப் போனேன். வெட்கத்தால் சந்திலாவின் முகம், கோவா தேசத்துச் சிவந்த ஆப்பிள்களைப்போலச் சிவந்தது.

''இவ்வளவு அழகாகப் பாட்டு பாடுபவர்கள் கோவாவில் இருக்கக் கூடாது. இதற்காகவாவது கோவா, இந்தியாவுடன் சீக்கிரத்தில் இணைந்தே ஆகவேண்டும்'' என்றேன் மரகதத்தைப் பார்த்து. நான் சொன்னதை சந்திலா புரிந்துகொண்டாலும், தன் நன்றியையோ மன உணர்ச்சியையோ எடுத்துச் சொல்லுவதற்கு அவளுக்குத்தான் எங்களது பாஷை தெரியாதே.

கணவனிடம் குதர்க்க வாதம் செய்ய விரும்பாத மனைவியை எந்தத் தேசத்து எல்லையிலும் பார்த்துவிட முடியாது தானே? மரகதம், ''இசையை விரும்பாத எந்தத் தேசமும் இருக்காது. நீங்கள் இதற்கு ஏன் ஒரு தேசம் இன்னொரு தேசத்துடன் இணையவேண்டும் என்று கூறுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''இந்த செய்தியைப் பார்!'' என்று தினசரிப்பத்திரிகையிலிருந்த அந்தக் குறிப்பிட்ட செய்தியை மரகதத்திடம் காட்டினேன். அவள் படித்தாள். முடிந்த மட்டில், தமிழிலும் கொங்கணியிலுமாகப் பத்திரிகையிலிருந்த செய்தியை வெகு சிரமபட்டுச் சந்திலாவுக்குச் சொன்னாள்.

இதைக் கேட்டதும் சந்திலாவின் கண்கள் சிவந்தன; உடல் படபடப்போடு துடித்ததைப் போலிருந்தது. 'இந்தியாவிலிருந்து வந்த துறவியின் பிடில் வாத்தியத்தைப் பற்றிக்கொண்டு அவர் தம் வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கோவாவில் அவர் பாடவிடாதபடிச் செய்ததால் ஒருவருடைய சங்கீதத்துக்குத் தடை விதித்ததாகுமா? உள்ளத்தில் கனன்று எழும் நாதத்தை யாரால் தடை போட்டு நிறுத்த முடியும்?'— எண்ணங்கள் அவள் மனத்தில் குமிழியிட்டனவோ என்னவோ.

அவள் 'படபட' வென்று இரண்டு வார்த்தைகள் கொங்கணியில்சொன்னாள். 'சில அறிவில்லாத

யானைப்பாகன் : (யானை மேலிருப்பவரைப் பார்த்து) ஏங்க! இப்படி உக்காந்தா எப்படி ஆவுது? யானை தலைப் பக்கமாப் பாத்து உக்காருங்க! திரும்புங்க!

மேலிருப்பவர் : எப்படியப்பா திரும்புவது? பயமாக இருக்கே! உன் யானையைத்தான் திரும்பி நிற்கச் சொல்லேன்!

வர்கள் செய்யும் காரியத்துக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை' என்ற பொருள் அவள் பேசியதில் தொனித்திருக்க வேண்டும்.

எனக்கு அன்று மாலை நாலு மணிக்கே 'டியூடி' முடிந்துவிட்டது. நேரே வீட்டுக்கு வந்தேன். மரகதம் காப்பி வைத்துக்கொண்டு நன்றாக 'டிரஸ்' பண்ணிக் கொண்டு தயாராக இருந்தாள். அவள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள் சந்திலா.

''எங்கே?'' என்றேன் காப்பி சாப்பிட்டுக் கொண்டே.

''நீங்களும் தான் வருகிறீர்கள். பக்கத்தில் 'சொனாலிம்' அருவி வரைக்கும் வேடிக்கையாகப்போய் விட்டு வரலாமே. இருட்டுவதற்குள் திரும்பி வந்து விடலாம்'' என்றாள் மரகதம். அவர்களோடு நானும் புறப்பட்டேன்.

'சொனாலிம்' அருவிக்கரையும் கோவா-இந்திய எல்லைகளுக்கு எடுத்துக் காட்டாகத் தான், மெல்லியதாய் அழகாய் இனிப்பான நீருடன் விழுந்து கொண்டிருந்தது.

அருவிக் கரையில் நாங்கள் பல விஷயங்களைப் பற்றி வெகு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பேச்சுக்களையும் குரல்களையும் மலை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அந்தி மெதுவாய்ச் சூழ்ந்து கொண்டிருந்தது. 'புறப்படலாம்' என்ற எண்ணத்துடன் புறப்பட்டோம். மலைப் பாதையில் எதிரே வந்த ஆசாமியைப் பார்த்துத் திகைத்தோம். ஒரு துறவி. அவர் கையில் ஒரு ஹரிக்கேன் விளக்கும் இருந்தது.

அருகில் வந்தவர் என்னைப் பார்த்து ஸ்பஷ்டமான தமிழில் பேசினார்: ''நம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களோ?''

''ஆமாம். தாங்கள்.........''

''செய்திப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்களே? நானே தான்'' — மரகதமும் சந்திலாவும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு மலைத்து நின்றார்கள்.

''தங்கள் பிடில்...பாட்டு........''

''என் பிடிலை அவர்கள் வைத்திருக்கிறார்கள். கோவாவின் எல்லையைத் தாண்டுவதற்கு இன்னும் பதினைந்தடி தூரந்தான் இருக்கிறது. அதற்குப் பிறகு நான் பாடலாம்'' என்று சொல்லிச் சிரித்தார் துறவி.

அவரை என் வீட்டுக்கு அழைத்தேன். அவரும் மனமுவந்து வந்தார். இந்திய யூனியன் எல்லையை அடைந்து எங்கள் வீட்டுக்குப் போனோம்.

துறவியைப் பாடச் சொன்னேன் மெல்லிய குரலில் வெகு அழகாகப் பாடினர் அவர். சந்திலா கண்களை மூடிக்கொண்டு ரசித்துக் கொண்டிருந்தாள்; அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்திருந்தது. பாஷை தெரியாத பெண் — சாகித்தியத்தின் அருமை புரியாத பெண் — நாதத்துக்கு அடிமையாகிக் கொண்டிருந்தாள்! அதிலும் எப்படிப்பட்டவள்! இசை பாட வந்த இந்தியத் துறவிக்குத் தடை விதிக்க வந்த தேசத்துப் பெண்!

பாட்டு முடியும் வரை நாங்கள் 'பாரறியோம், விண்ணறியோம்.' பாட்டு முடிந்தது.

"இந்தப் பெண் யார்? என் பாட்டு இவளை இவ்வளவு உருக்கி விட்டதா!" என்று சந்திலாவைப் பார்த்துக் கேட்டார் துறவி.

நான் சொன்னேன். துறவி உணர்ச்சி வசமாகி விட்டார்.

"ஐயா! இனிக் கவலை வேண்டாம். கூடிய விரைவிலேயே கோவா, இந்தியாவுடன் இணைந்து விடும். பாரதத்தின் அந்தரங்க அடிமையாகிருள் என்ருல் அந்த நாடு என்றைக்கும் அன்னியருக்கு அடிமையாகி இருக்க முடியாது!" என்ருர் துறவி.

உணர்ச்சி வசப்பட்ட நான் என்ன பேசுவதென்று தெரியாது தவித்தேன். மரகதமும் அப்படித்தான். சந்திலாவின் உள்ளத்தைப் பாஷை தடை செய்தது. அதற்குக் காரணம் எல்லைகள் சேராமல் இருப்பது தான்.

துறவி புறப்பட்டார், ஹரிக்கேன் லாந்தரில் தீபம் ஏற்றிக்கொண்டு.

ஏட்டிக்குப் போட்டி!

பிரபல ஆசிரியர் ஸிங்க்லேர் லூயிக்கு ஒரு வழக்கறிஞர் இப்படிக் கடிதம் எழுதினர்:

"அன்புமிக்க ஸிங்க்லேர் லூயி அவர்களே! தங்கள் நூல்கள் சில படித்தேன். உங்களைப் பற்றிய சில விவரம் எனக்குத் தெரிய வேண்டும். நீங்கள் இதுவரை எழுதிய கதைகள், உங்களுடைய மாதிரிக் கையெழுத்து, உங்கள் போட்டோ, உங்கள் வாழ்க்கையை வர்ணிக்கும் ஒரு கடிதம் ஆகியவை தேவை, உங்கள் மனைவி எப்படி? குழந்தைகள் எத்தனை?

—ஜே. ஜே. ஜோன்ஸ்."

இதற்கு லூயி இப்படிப் பதில் எழுதினர்:

"அன்புள்ளவரே! உங்கள் கடிதம். உங்களை நான் இதுவரை பார்த்திரா விட்டாலும் என்னிடம் உங்களுக்கு இருக்கும் அன்புக்கு நன்றி. நான் இதுவரை ஒரு போட்டோவும் எடுத்துக் கொண்டது கிடையாது! ஆனல் உங்களுக்காக இப்போது ஒரு ஸ்டுடியோவுக்குப் போய் எடுத்து அனுப்புகிறேன்.

அதிருக்கட்டும், உங்களுக்கு விவாகமாகி விட்டதா? மனைவியின் குணம் எப்படி? குழந்தைகள் எத்தனை? வழக்கறிஞர் ஒருவரின் வாழ்க்கை நிலையை யொட்டி ஒரு கதை எழுதத் தீர்மானித்திருப்பதால் கேட்கிறேன். —லூயி."

வழக்கறிஞர் பதில் வரையவில்லை!

--ரீடர்ஸ் டைஜஸ்ட்.

'கூட்டத்தில் பேசுவது எப்படி?' என்ற புத்தகத்தை எழுதிய ஒரு துறவி அதை அரங்கேற்றி வைத்துவிட்டு ஒரு வேண்டுகோள் விடுத்தார்:

''என்னுடைய புத்தகத்தைப் படித்துவிட்டு அடுத்த முறை இங்கே யாராவது ஒருவராவது மேடை முன் பேச வந்தாலும் போதும்! என்னுடைய முயற்சி வெற்றி பெற்றதாகும்!''

அடுத்த முறை பேச வந்தபோது, ஒரே ஒரு பெண்மணி மட்டும் மைதானத்தில் இருந்தாள். துறவியின் பூர்வாசிரமத்தில் அவருடைய மனைவியாயிருந்தவள் அவள்!

''உங்கள் புத்தகத்தைப் படித்தேன். உங்களிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றாள் அந்தப் பெண்மணி.

''உனக்கு யாரோ இலவசப் பிரதி கொடுத்திருக்கிறார்கள்! இலவசப் பிரதி கிடைத்தவர்கள் பேசுவதற்கு அருகதையானவர்களல்ல!'' என்று சொல்லிவிட்டுப் போயே போய்விட்டார் துறவி!

அதை அவர் சந்திலாவின் கையில் கொடுத்துக்கொண்டே, 'இதை தினசரி பாலில் போட்டுக் காய்ச்சிக் குடித்தால் உன்னுடைய பாட்டு இன்னும் நன்றாகத் தெரிந்து வரும், அம்மா; கண்டத்தின் இனிமையில் சுருதி சுத்தம் தவறாமல் குரல் குழைந்து வரும். இசையைப்பற்றி உன் தேசத்தாருக்குத் தெரியுமோ தெரியாதோ, உனக்கு நன்றாய்த் தெரிகிறது. குங்குமப் பூவை மறந்தால் நீ சங்கீதத்தை மறந்து விடுவாய்; சுதந்திர இந்தியாவில் இணைய வேண்டிய தாகத்தையும் மறந்து விடுவாய்!'' என்றார்.

அவர் கூறியது பூராவும் சந்திலாவுக்குப் புரிந்திருக்காது தான். குங்குமப் பூப் பொட்டலத்தை அவர் தன் கையில் வாங்கிக் கொண்டாள். தங்கத்துக்குச் சுங்கவரி விதிக்கிறார்கள்; குங்குமப் பூவையும் அவர்கள் சும்மா விட்டு விடப் போவதில்லை. ஆனால் எந்த சுதந்திர உள்ளத்திலும் சங்கீதத்துக்கு வரி விதித்து விட முடியுமா?

''சாட்டைக்கு நடுவே என்றைக்கும் ரோஜாவும் மனிதரும் கசங்கி விட முடியாது. சாட்டை அதன் சுழற்சியிலேயே மாயமாக மறைந்து போகும். கோவாவும் இந்தியாவும் இணைந்தே தீரும்: அழகான ரோஜாவும் அதன் நிறத்தையும் மணத்தையும் ஒத்த மனிதரும் நிச்சயம் விடுதலை பெறுவர், இந்தப் பெண்ணைப் போல!'' என்று சொல்லிக் கொண்டே துறவி தமது காவி ஜிப்பாவின் பைக்குள்ளிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தார்.

பொட்டலம் நிறையக் குங்குமப் பூ இருந்தது. தங்கத்துக்கு எடை போட்டு வாங்க வேண்டிய ரீதியில் தானே குங்குமப்பூவுக்கும் எடை போட்டு வாங்கவேண்டும்? இந்தத் துறவிக்கு எதற்காகக் குங்குமப் பூ?

துறவி தூரத்தில் மறைந்தார். அவர் கையிலிருந்த ஹரிக்கேன் லாந்தரின் ஒளி மினு மினுத்தது.

''கோவா விடுதலை அடைந்தால், துறவிக்கு நீ என்ன பரிசு தருவாய் சந்திலா? உங்கள் தேசத்தில் விளையும் குங்குமப் பூவையா கொடுப்பாய்?'' அவளுக்குப் புரியும் படியாகக் கேட்டாள் மரகதம்.

'' அவர்கள் அவரிடமிருந்து பற்றிக் கொண்டிருக்கும் பிடிலைத் திரும்பி வாங்கி அவரிடம் சேர்ப்பேன் '' என்றாள் சந்திலா.

அலை ஓய்ந்தது

ர. சண்முகம்

11

கனகசபை மறுபடியும் உலாவிக் கொண்டே "ஆமாம், கல்யாணச் சாப்பாடுதான். அந்தப்பெண் சாவித்திரி..." என்று ஏதோ சொல்லத் தொடங்கிய கனகசபையை ஆரோக்கியம் போட்ட கூச்சல் தடுத்து நிறுத்தியது.

"சீச்சீ... என்ன இது..." என்று அவன் கத்தினான். அவன் முகத்தில் கோபக்குறி தோன்றியது.

இந்த நிலையில் அவனைக் கனகசபை ஒரு நாள் கூட பார்த்ததில்லை. ஆகவே திகைத்து விட்டார்.

ஆரோக்கியம் ஒரு டம்ளர் தண்ணீரை அருந்தி விட்டு டம்ளரை கீழே வைத்துவிட்டு அங்கே கிடந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தான். பிறகு தாழ்ந்த குரலில் "ம்.... அவள் தெய்வம்.... நான் கேவலம் மனிதன். எனக்கும் அவளுக்கும் கல்யாணமா?..." என்று முணுமுணுத்துக் கொண்டான்.

கனகசபை தனக்குத் தானே சிரித்துக்கொண்டார். ஆரோக்கியம் தன்னுடைய வாயினாலேயே சாவித்திரியைக் காதலிப்பதாகவும், விரைவில் திருமணம் செய்துக் கொள்ளப் போவதாகவும் பல தடவை கூறியிருப்பது அவருக்கு நினைவுக்கு வந்தது. ஆரோக்கியத்தை ஒரு தடவை கூர்ந்து கவனித்தார். அவன் கைகளால் தலையைத் தாங்கிக் கொண்டு மெய்மறந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

"தம்பி, ஆரோக்கியம்... என்ன நடந்தது?" என்று ஆதரவுடன் கேட்டார் கனக சபை.

அவன் தலை நிமிராமலே பதிலளித்தான். "சாவித்திரியின் தந்தை இறந்துபோய் விட்டார். அவள் இந்தக் குழந்தைகளை என்னிடம் ஒப்படைத்துக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டாள்."

"அப்படியானால் அவள் நிலைமை?" என்று வினவினார் கனக சபை.

"கடவுளுக்குத்தான் தெரியும். அவளை அவ்வளவு சுலபத்தில் புரிந்துக் கொள்ள முடியாது" என்று ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் கூறினான் ஆரோக்கியம்.

இதைச் சொல்லி முடித்ததும் அவனுக்கு சாவித்திரி தன்னிடம் பெற்ற வாக்குறுதி நினைவுக்கு வந்தது. கூடிய விரைவில் கனகசபையைத் தன் அறையை விட்டு அகற்ற வேண்டும். இது எப்படி சாத்தியம்! முகத்திலடிப்பது போல் அவரிடம் நேரிலேயே சொல்லி விடுவது நல்லதா? இந்த சிந்தனைகள் மனதில் சுழல அவன் கனக சபையை நோக்கினான். அவரும் இவன் என்ன சொல்லுகிறான்

என்பதை எதிர்பார்ப்பது போல ஆவலாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மனதில் இருப்பதை வெளியே சொல்லும் துணிவு ஆரோக்கியத்திற்கு வரவில்லை; இரண்டுதடவை பேசுவதற்காக வாயைத் திறந்தவன் ஒன்றும் சொல்லாமலே மௌனமாகி விட்டான்.

அவனுடைய சங்கடத்தை கனக சபை புரிந்து கொண்டார். ''தம்பி, ஏதாவது சொல்ல வேண்டுமானால் தாராளமாகக் கூறு. என்னால் இந்தச் சமயத்தில் உனக்கு உதவி ஏதாவது தேவைப் பட்டால் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

''உதவி ஒன்றும் வேண்டியதில்லை. ஆனால் ஒன்று சொல்ல வேண்டும். அதற்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. நாளை இரவு கூறுகிறேன்'' என்றான் ஆரோக்கியம்.

கனகசபை அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு எதைப்பற்றியோ சிந்தித்தார். பிறகு ஆரோக்கியத்தின் மனதிலிருப்பதைப் புரிந்து கொண்டது போன்று தனக்குத்தானே மெல்ல சிரித்துக் கொண்டார்; பின்னர் அவனை நோக்கி ''தம்பி, இன்றிரவு தான் நாம் ஒருவர்க்கொருவர் சந்தித்துக் கொள்ளும் கடைசி நாள் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் என் லட்சியம் நாளை இரவு அனேகமாகப் பூர்த்தியாகிவிடும். அப்புறம்....'' வாக்கியத்தை முடிக்காமலே மௌனமாகி விட்டார் கனக சபை. அனுவசியமாக அதையெல்லாம் இவனிடம் எதற்குச் சொல்கிறோம் என்று நிறுத்திக் கொண்டமாதிரி இருந்தது அவருடைய செயல்.

அவருடைய பேச்சின் கடைசிப் பகுதி ஆரோக்கியத்தின் மனதில் எத்தனையோ கலவரங்களைக் கிளறிவிட்டது.

பயங்கரமான அமைதிக்கு இடையே அரவமே அற்ற சுடுகாட்டின் நடுவில் தன்னந்தனியாக அமர்ந்திருப்பது போன்ற பீதி நிறைந்த மனதோடு தன் அறைக்குள் வளைய வளைய வந்து கொண்டிருந்தார் திருவரங்கநாதர். மறுநாள் தூக்கு மேடையேறத் தயாராக இருக்கும் கைதியின் உணர்ச்சி தான் அவரது இதயமெங்கும் பரவி நின்றது. அதாவது தனது பயங்கர வீழ்ச்சி நிச்சயிக்கப்பட்டுவிட்டதென்றும் அதை இனி யாரும் தடுத்து நிறுத்த முடியாதென்றும் அவர் திடமாக உணர்ந்தார்.

பானுமதியைப் படுகொலை செய்தது யார் என்று தெளிவாகப்புரியவில்லை. அதைப்பற்றி அவர் கவலைப்படவும் இல்லை. அவள் தொலைந்தது நியாயம்தான் என்றே அவர் கருதினர்; இவ்வளவு நாள் அவள் செய்த பாவத்துக்குக் கடவுள் கூலியாகத் தண்டனையைக் கொடுத்திருக்கிறர் என்று அவர் மனம் திருப்தியடைந்தது.

அத்துடன் தன்னுடைய நிலைமையையும் அவரால் தீர்மானத்துக் கொள்ள முடிந்தது.

பானுமதியின் மார்பில் பாய்ந்த கத்திக்கும் தனக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது என்பதை அவர் புரிந்துகொண்டார். நேற்று பானுமதி என்றல், இன்றே அல்லது நாளையோ தன்னுடைய முறை வரலாம்; அதை எப்படியும் மாற்ற முடியாது. இந்தத் தன்னுடைய நிலையை திருவரங்கநாதர் குறைத்து மதிப்பிட்டு விடவில்லை.

ஆனால் இந்தத் தைரியத்துக்காக மட்டுமே அவர் மனம் கலங்கவில்லை. இப்போதுஉயிராசை அவருக்கு இல்லை. உயிரைக் காப்பாற்றிக் கொண்டு இந்த உலகில் நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்ற கனவெல்லாம் கிடையாது; போக போக்கியங்களில் இருந்த சித்தம் வெகுநாட்களுக்கு முன்பே இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. சொல்லப்

போனல் அவர் தானகவே தன் உயிரை இழக்கத் தயாராக இருந்தார் என்றே கூறலாம்.

திருவரங்கநாதருக்கு இருந்த மனக்குறை ஒன்றே ஒன்றுதான்; அது தான் இப்பொழுது அவர் மனதைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது. அது சாவித்திரியைப் பற்றிய எண்ணந்தான் அவர் மனதில் கடைசியாக நட்புக் கொண்டிருந்த பந்த பாசம் எனலாம்.

அன்று மலைப் பங்களாவில் சாவித்திரியைச்சந்தித்துத்தன் மனதில் நிறைந்து கிடந்த வாழ்வின் ரகசியங்கள் அத்தனையும் கொட்டிப் பேசினரல்லவா? அவற்றைக் கேட்ட உடனே சாவித்திரி மனமாற்றமடைந்து தன்னை மன்னிப்பதோடு தன்னேடு மீண்டும் வாழ்க்கை நடத்த வந்து விடுவாள் என்று திருவரங்கநாதர் எதிர்பார்த்தார். அப்படி அவள் மனமாற்றம் அடைவாளானல் கையிலிருக்கும் செல்வத்தைத் திரட்டியெடுத்துக் கொண்டு எங்காவது தொலைவில் ஒரு பட்டணத்திற்குச் சென்று சாவித்திரியின் பரிவு தவழும் ஆதரவோடு அமைதியாக வாழ்க்கை நடத்தலாம் என்று அவர் கனவு கண்டார்.

சாவித்திரியோ எதிர் நேர் மாருக நடந்து திருவரங்கநாதரைத் திகைக்க வைத்து விட்டாள்: அவள் எதிர்த்துப் பேசித் திட்டிப் பார்த்தால் கூட அவர் மனம் எவ்வளவோ ஆறுதலடைந்திருக்கும். ஒரு பதிலும் பேசாது அவள் மௌனமாக எழுந்து சென்றதின் மூலம் திருவரங்கநாதரின் உள்ளத்தில் ஒரு படு காயத்தை உண்டாக்கி விட்டுப் போய் விட்டாள்.

சாவித்திரியின் தந்தை இறந்து விட்ட செய்தி காதில் விழுந்த உடனே அவளுக்கு ஏதாவது உதவி செய்யக் கருதி, திருவரங்கநாதர் தன்னை வந்து உடனே பார்க்கும்படி ஓர் ஆள் மூலம் செய்தி அனுப்பினர். முருகானந்தத்தின் மனைவியால் சாவித்திரிக்கு ஏற்பட்டிருக்கும் வேதனையே ஒரு வேளை அவளைத் தன்னேடு இணைத்துக் கொள்ள உதவலாம் என்ற அற்ப ஆசை அவர் மனதில் தலை காட்டியது; ஆனல் சாவித்திரி அவரைச் சந்திக்க மறுத்து விட்டதாக அவர் திரும்பி வந்து தந்த தகவல் அந்த அரை குறை ஆசையின் வாயிலும் மண்ணைப் போட்டு விட்டது! உடனே அதே ஆளிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தனுப்பி கைச் செலவுக்கு வைத்துக் கொள்ளும்படி தனியாகச் சொன்னர்; சென்ற வேகத்திலேயே அந்த ஆள் திரும்பிப் பார்த்துத் தான் கொண்டு சென்ற பணத்தை அவர் முன்னல் வைத்து விட்டு அதைச் சாவித்திரி பெற்றுக் கொள்ள விரும்பவில்லை என்ற செய்தியை அறிவித்தார்.

> பனித் துளியைப் போல ஆத்மா எப்போதும் பரிசுத்தமாக இருக்கிறது. ஆத்மாவின் வழி நடந்தால் அதுவே கடவுளின் வழியாகும்.
>
> —மாக்ஸிம் கார்க்கி

இதைக் கண்டதும்தான் திரவரங்கநாதர் அதிர்ச்சி யடைந்து விட்டார். சாவித்திரியின் பிடிவாத குணம் எதைப் பிரதிபலிக்கிறது என்று அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னுடைய தொடர்பை அவள் ஒரேயடியாகத் துண்டித்துக் கொள்ள விரும்புகிருள் என்று யூகித்தார்.

சாவித்திரியின் ஆதரவற்ற நிலை அவருக்குப் புரிகிறது. தங்கைகள் இருவர் அவளுக்குக் கால் கட்டாக இருப்பதும் அவருக்குத் தெரியும். உருப்படியான வருவாய் இல்லை; இந்த நிலையில் தன்னை ஒரேயடியாகத் தனிமையில் ஆழ்த்திக் கொள்ள விரும்பும் அவள் மனதில் என்னதான் இருக்குமோ?

சாவித்திரியின் ஆதரவைக்கடைசிக் காலத்திலும் பெற முடியவில்லையே என்ற ஒரே ஏக்கந்தான் அவர் மனதில் எஞ்சி நின்றது. மற்ற எல்லாத் தொல்லைகளையும்

அவர் அறவே மறந்து விட்டார். ஆனால் அவருடைய முரட்டுத்தனமான போக்கிற்குப் பிறகு வேறு என்ன தான் செய்ய முடியும்?

தன் வாழ்வின் இறுதி நிலையைப் பற்றி இரண்டு விதமான தீர்மானங்கள் அவர் மனதில் நிலை பெற்றிருந்தன. பானுமதியைக் கொலை செய்தது யாராக இருக்கலாம் என்பதை அவர் ஓரளவு யோசித்து வைத்திருந்தார். அந்த மனிதனின் நோக்கமும் தெளிவானது தான். எந்த நிமிஷமும் அவன் தன்னைச் சந்திக்கலாம். ஆனால் அவன் கத்திக்கு மார்பைக் காட்டி உயிரை விடும் அளவுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமா? அதற்குள் தம் வாழ்வைத் தாமே முடித்துக் கொண்டால்.........!

தற்கொலையைப் பற்றி நினைவு தோன்றிய பிறகு தான் அவருக்கு சாவில் பயம் தோன்றவில்லை. இந்த மனப் பக்குவம் தனக்கு ஏற்பட்டிருப்பது அவருக்கே வியப்பை அளித்தது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். மணி பன்னிரண்டாகியிருந்தது. ஜன்னல் வழியே கவனித்தார்.

நல்ல இருள். இந்த நேரத்தில் குன்றின் பக்கம் சென்று உலாவி வர வேண்டும் போல அவருக்குத் தோன்றியது.

முன்பெல்லாம் பகலில் கூட தனியே செல்ல அவருக்குப் பயமாக இருக்கும். இரவில் பக்கத் துணை இல்லாமல் வீட்டை விட்டு ஒரு அங்குலம் கூட நகரமாட்டார். கொஞ்ச காலமாக இந்த நிலையிலிருந்து புரட்சிகரமாக மாறுபட்டிருந்தார். சில சமயங்களில் இரவு முழுவதும் கூட குன்றின் பக்கம் சுற்றிக் கொண்டிருந்து விட்டுப் பொழுது விடியும் தருவாயில் வீடு



திரும்புவார். ஆகவே அன்றும் குன்றின் பக்கம் உலாவப் போக வேண்டுமென்ற எண்ணம் தோன்றியவுடனே, ஒரு நீண்ட போர்வை எடுத்துப் போர்த்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

குன்றுக்குப் போகும் வழியில் தான் சாவித்திரியின் வீடு இருந்தது. அந்த வீட்டைத் தாண்டும் போது திருவரங்கநாதர் சற்று நின்று யோசித்தார். திடீரென அவருடைய மனதில் மீண்டும் சாவித்திரியைப் பற்றிய எண்ணம் ஊசலாடியது. வாசல் கதவைக் கவனித்தார். கதவு மூடப்பட்டிருக்கவில்லை. பாதியளவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே புகுந்து சாவித்திரியைச் சந்திக்கலாமா என்று ஒருகணம் தீவிரமடைந்தார். ஆனல் தன்னை சமாளித்துக் கொண்டார். சாவித்திரி தன்னை வெறுக்கிருள் என்று தெரியும்போது வீணுக அவளை விரட்டி அவளுக்கு மனச் சஞ்சலத்தை ஏன் விளைவிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு மேலே நடக்கத் தொடங்கும் போது "இந்த நேரத்தில் எங்கே போகிறீர்கள்?" என்று யாரோ கேட்கவே அதிர்ச்சி அடைந்து நின்று திரும்பினர்.

வாசல் கதவைத் திறந்து கொணடு சாவித்திரி வெளியே



வந்து கொண்டிருந்தாள். இதைத் திருவரங்கநாதர் எப்படி எதிர்ப் பார்க்க முடியும்? என்ன செய்வ தென்றே தோன்ருமல் திகைத்துப் போய் நின்ற இடத்திலேயே நின் ருர்.

''தெருவில் எதற்காக இப்படி நிற்க வேண்டும்? வீட்டுக்குள் வாருங்கள்'' என்ருள் சாவித்திரி. அன்புமிக்க மந்திர சக்தியால் அழைக்கப்படுபவர் மாதிரி சாவித் திரியை நோக்கி வந்தார். 'உள்ளே போகலாம். வாருங்கள்' என்று கூறிவிட்டுச் சாவித்திரி கதவை அகலத் திறந்து விட்டு உள்ளே செல்லத் திரும்பினுள்.

''வீட்டுக்குள்ளா? நாஞ?.......'' என்று ஒன்றுமே புரியாமல் வின வினுர் திருவரங்கநாதர்.

சாவித்திரி திரும்பி வந்து திரு வரங்கநாதரின் கையைப் பிடித்துக் கொண்டு மௌனமாக உள்ளே சென்ருள்.

உள்ளே கூடத்தில் மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. குழந்தைகள் ஒரு பக்கமாகக் கீழே படுத்து தூங்கிக் கொண்டிருந்தார் கள். சாவித்திரி ஒரு கோரைப் பாயை எடுத்து தரையில் விரித்து விட்டு ''உட்காருங்கள்'' என்ருள்.

திருவரங்கநாதர் உட்கார்ந்து அந்த சூழ்நிலையில் கண்களை ஓட்டி ஞர். சற்று தொலைவில் சிறு தட்டு ஒன்று. ஏதோ சிற்றுண்டி மாதிரி இருந்தது. சாவித்திரி அப் பொழுது தான் சாப்பிடத் தொடங்கியிருக்க வேண்டுமென்று யூகித்தார்.

''இது என்ன அதிசயம் ...... இராத்திரி பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட ஆரம்பித்திருக்கி ருய்'' என்று கேட்டார் திருவரங்க நாதர்.

''இராத்திரி பன்னிரண்டு மணிக் குப் பிறகு நீங்கள் ஊர் சுற்றப் புறப்பட்டதை விட இது ஒன்றும் அதிசயமில்லையே!'' ஒன்று கூறி விட்டுச் சிரித்தாள் சாவித்திரி.

அந்தச் சிரிப்பிலே ஒரு தெளிவு இருப்பதாக திருவரங்கநாதருக்கு தோன்றியது. அவள் முகத்தை உற்றுப் பார்த்தார். இது கனவா, அல்லது நனவா என்று திகைத்து விட்டார். சமீப காலமாக அவர் சாவித்திரியின் முகத்தைக்கவனித் திருக்கிருர். அதில் தேங்கி நின்ற வேதனை நிறைந்த சோகத்தைக் கண்டு அவர் மனம் எவ்வளவோ சங்கடப் பட்டிருக்கிறது. ஆனல் இப்பொழுதோ அவள் முகத்தில் கவலையின் துன்பமோ வேதனை யின் அறிகுறியோ ஒன்றுமில்லா மல் தெளிவாக இருந்தது. திரு மணத்திற்கு முன் அவளை முதல் முதலாகச் சந்தித்தபோது சாவித் திரி எப்படி விளங்குவாளோ அப் படி இப்பொழுது அவள் காட்சி யளிப்பது போலத் தோன்றியது, இவ்வளவு நாட்களாக மனத்திலி ருந்த அழகும் இளமையில் குதித்து விட்டதா என்று திரு வரங்க நாதர் ஐயப்பட்டார்.

''என்ன ஒரேயடியாகச் சிந்தனை யில் ஆழ்ந்து விட்டீர்களே சாப் பிடுங்கள்..........'' என்று சாவித் திரி சொன்ன பிறகு தான் அவர் சிந்தனையிலிருந்து விடுபட்டார். அவர் முன் நடு இலையில் சிற் றுண்டி வைக்கப்பட்டிருந்தது.

''என்ன! எனக்கா.........இந்த நேரத்தில் எதற்கு?........'' என்று திருவரங்கநாதர் எடுத்துப் பார்த் தார்.

சாவித்திரி அவர் ஓரமாக வந்து உட்கார்ந்து கொண்டு பிடி வாதம் பிடிக்கும் ஒரு குழந்தையை சமாதானம் செய்வது போன்ற அன்பு தவழும் குரலில் ''இன்று நீங்கள் இன்னும் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள் என்று நன்ருகத் தெரி யும். இந்தச் சாப்பாட்டு விஷயத் தில் மட்டும் நீங்கள் பெண்களை ஏமாற்றி விட முடியாது.......வீண் பிடிவாதம் பாராட்டாமல் சாப் பிடுங்கள்.......'' என்ருள்.

திருவரங்கநாதர் வாய்பேசாமல் சாப்பிட்டார். இடையிடையே அவர் கண்கள் சாவித்திரியின் மனதிற்

குள் என்ன தான் இருக்கும் என்று ஆராய விரும்புவது போல அவள் முகத்தை ஊடுருவி நோக்கும்.

சாப்பிட்டு முடிந்து கையலம்பு வதற்காக முற்றத்தின் பக்கம் சென்றவர் எதிர்பாராததைதை மேலே அண்ணாந்து பார்த்தார். மாடியில் இவ்வளவு நேரமாகக் கீழே குனிந்து பார்த்துக் கொண் டிருந்த ஒரு உருவம் சட்டென்று தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டது. திருவரங்கநாதருக் குப் பகீரென்றது.

மறுபடியும் பாயில் உட்கார்ந்து அவசர அவசரமாக சாவித் திரியை நோக்கி ''மேலே யார் இருக்கிறார்கள் ?........'' என்று கேட்டார்.

சாவித்திரி அலட்சியமாகச்சிரித் துக்கொண்டே ''யார் இருந்தால் என்ன? நான் இருக்கும் வரை உங் கள் பரம விரோதிகள் கூட உங் கள் மீது கை வைக்க முடியாது. அது நிச்சயம்'' என்றாள். இதைச் சொல்லும் போது அவள் சற்று உரக்கச் சத்தமிட்டுக் கூறியமாதிரி யிருந்தது,

''நான் இருக்கும் வரை என்று அவள் எதற்காகக் கூற வேண்டும். தன்னுடைய சிறு உதவியைக் கூட ஏற்றுக் கொள்ள மறுக்கும் அவள் அப்படி ஏன் கூற வேண்டும்? இவள் ஒரு மர்மப் பெண்ணாக அல்லவா காட்சி யளிக் கிறாள்.......! திருவரங்கநாதர் திணறினார்.

''இப்பொழுது எங்கே போவ தாக உத்தேசம்'' என்று கேட்டாள் சாவித்திரி.

''குன்றுப் பக்கமாகச் சென்று மன அமைதி பெற உலாவி விட்டு வரலாம் என்று எண்ணினேன் ஆனால்....''

''ஆனால்........என்ன !''

''நடுவழியிலேயே மனம் அமைதியடைந்து விட்டது. என்றா லும் வீட்டுக்குப் போகப் பயமாக இருக்கிறது. ஏனென்றால் சிரமப் பட்டுப் பெற்ற மன அமைதியை வீடு கலைத்து விடும். ஆகவே குன்றுப் பக்கமே போகலாமா என்று யோசிக்கிறேன்.......''

''நான் ஒருவழிசொல்லட்டுமா?''

''என்ன வழி ?''

''இங்கேயே தங்கி விடுங்க ளேன்.......''

''இங்கேயா.......'' என்று துள்ளி எழுந்து கேட்டார் திரு வரங்கநாதர்.

ஓடிவரும் ஆள் : உங்க எஜமான் எங்கேப்பா? அவர் சம்சாரம் ஆஸ்பத்திரியிலே ஒரே பிரசவத்திலே நாலு குழந்தைகள் பெத்திருக் காங்க !

வேலையாள் : அவரு மாடியிலே சவரம் பண்ணிக் கிட்டிருக்காரு. இந்த விஷ யத்தை இப்போ போயி சொன்னேன்னா மூஞ்சி யெல் லாம் காயப்படுத்திக்குவாரு !

மற்றவருக்கு ஏதாவது நலன் செய்வதன் மூலம் இன்புற்றிருக்க முடியும். தன் முயற்சியால் தேடியதைக் கொண்டு பட்டினியாகக் கிடப்போருக்கு உணவு அளிக்கும் போதுதான் மனிதனுக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படுகிறது.

—விநோபா பவே

''இப்படி நீங்கள் அதிர்ச்சியடைய என்ன நடந்தது என்று'' சிரித்துக் கொண்டே கேட்டாள் சாவித்திரி.

''இல்லை அது நடக்காது'' என்று தடுமாறும் குரலில் கூறினார் திருவரங்கநாதர்.

''என்ன அப்படி!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சாவித்திரி.

''சாவித்திரி, உன்னை நான் ஓரளவு புரிந்து கொண்டுவிட்டேன்! என்னுடன் இனி ஒட்டுவதை நீ அறவே விரும்பவில்லை என்று தெரியாமலில்லை. எனக்கு இது வேண்டிய சரியான தண்டனை தான். என் இறுதிக்காலம் நாள் கணக்கில் தான் இருக்கிறது. இந்த என் இறுதி நாட்களில் நான் தன்னந்தனியாகத் துடிதுடித்து உயிர் விட வேண்டும் என்பது என் தலைவிதியாகி விட்டது. இதை நான் மாற்றிக் கொள்ளவே விரும்பவில்லை. ஆனால் நீசனான என் நிழல் உன் மீது படவே கூடாது. உன் காலடியில் வீழ்ந்து கிடக்கும் தகுதி கூட எனக்குக் கிடையாது. உன் புனிதத் தன்மைக்கு ஊரார் மாசு கற்பிக்கும் நிலையை நான் அனுமதிக்கப் போவதில்லை. இந்த நேரத்தில் நான் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருப்பதே மகா பாதகம். நான் வீட்டுக்கே போய் விடுகிறேன்........'' என்று ஒரே மூச்சில் படபடவென்று வார்த்தைகளை உதிர்ப்பவர் போலக் கூறி விட்டு திருவரங்கநாதர் எழுந்தார்.

சாவித்திரி சிரித்துக் கொண்டே அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு ''இங்கே வசதியற்ற இடத்தில் தங்க, நீங்கள் விரும்பவில்லை. இந்த நேரடியான காரணத்தை மறைக்க, சம்பந்தமில்லாத எதைபற்றியோ பிரசங்கம் செய்து தீர்த்து விட்டீர்கள். நான் உங்களை தடுக்கவில்லை. ஆனால் நீங்கள் குன்று பக்கம் நிச்சயம் போகக் கூடாது. நேரே வீட்டுக்கே போங்கள் தெரிகிறதா'' என்றாள்.

இருவரும் வெளியே வந்தனர். அதுவரை சாவித்திரி அவரது கைகளைப் பிடித்துக் கொண்டே அழைத்து வந்தாள். திருவரங்கநாதர் தெருவில் இறங்கியதும் ''மறந்து விட வேண்டாம். வீட்டுக்கே போங்கள்'' என்று மீண்டும் ஒரு தடவை எச்சரிக்கை செய்தாள்.

திருவரங்கநாதர் தலையை அசைத்து விட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

திருவரங்கநாதர் தமது மாளிகையை அணுகிய போது அது இருளில் மூழ்கிக் கிடந்தது. தலை வாசலில் உட்கார்ந்து அரைத் தூக்கத்தில் ஆடி விழுந்து கொண்டிருந்த காவல்காரன் திருவரங்கநாதரைக் கண்டதும் அடித்துப் புடைத்து எழுந்து வணங்கினான்.

அவனைக் கடந்து உள்ளே சென்று மாளிகையை அடைந்தார். தான் வெளியே புறப்பட்ட போது அறைக் கதவைப் பூட்டி விட்டுப் புறப்பட்டதாக இவருக்கு நினைவிருந்தது. இப்பொழுது கதவில் பூட்டைக் காணோம். கதவு மூடப்பட்டிருந்தது! தான் பூட்டிவிட்டுப் போனதாக எண்ணியதுதான் தவறு என்று கருதிக் கொண்டு கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்தார்.

உள்ளே இருளாக இருந்தது. தடவிக் கொண்டே மின்சார விளக்குப் பொத்தான் இருக்குமிடம் சென்று தட்டியவுடன் அறையெங்கும் ஒளி பரவி நின்றது. உடம்பில் போர்த்திக் கொண்டிருந்த போர்வையை எடுத்துப் படுக்கையில் போடுவதற்காகத் திரும்பியவர் ''ஆ'' என்ற ஒரு அலறலுடன் திகைத்துப்போய் நின்றார்.

(தொடரும்)

'உமா' மார்ச் இதழில் சேர்க்கப்பட்ட புது அம்சங்களைப் பாராட்டி வாசக நேயர்கள் அன்புக் கடிதங்கள் எழுதிய வண்ணம் இருக்கிறார்கள்; எழுத்தாள அன்பர்கள் பூரிப்பு அடைந்து நேரிலும் கடிதங்கள் மூலமும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிய வண்ணமிருக்கிறார்கள். எல்லோருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியும் வணக்கமும்.

நமக்கிடையில் நறுந்தேன்

மனிதனுடைய நாகரிக வளர்ச்சிக்குப் போட்டிபோட்டுக்கொண்டு எண்ணங்கள் அவன் மனத்திடை முகிழ்த்து எழுகின்றன. ஒவ்வொரு புது மாதிரியான எண்ணம் சம்பவிக்கும்போதும், அதன் வழி செயல்பட்டு, மனிதன் உயர்கிறான். 'உமா' அடைய வேண்டிய வளர்ச்சியில், இந்த ரீதியில்தான், நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

அன்னை மொழிக்கு ஆக்கம் தருவதற்கு அல்லும் பகலும் உழைத்து வரும் தலைவர் ம. பொ. சிவஞானம் புறநானூறு பற்றி இவ்விதழில் தம் அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் துவக்கியிருக்கிறார். ம. பொ. சியின் எழுத்துக்களில் தமிழர் சமுதாய நலனே இலட்சியமாகத் திகழ்வதை நேயர்கள் பெரிதும் விரும்புவார்கள்.

எண்ணங்களுக்கு அழகான மெருகு கொடுப்பது கற்பனை. இதைக் 'கற்பனைத் தேனிதழாள்' என்று அருமையாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார் பாரதியார். 'கற்பனைத் தேன்' இவ்விதழில் நாலு அழகான சிறு கதைகளாகத் துளிர்த்துள்ளது. எஸ். வி. ரமணியின் 'வேப்ப மரத்து மோகினி, எதிர்பாராத முடிவைக் கொண்டதொரு கற்பனையாகும். 'மனக் கதவு' எழுத்தாளர் வே. ரங்கராஜனுடைய அகம் தன் வகையில் கண்ட பண்பின் இலக்கணத்தை நன்கு எடுத்துரைக்கிறது. 'ருடால்ப்பாமாச்'சின் 'ஒரு துளி அமுதம்' சிறு கதை, உலக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளதாகும். 'மகுடி' செவ்வனே தமிழில் ஆக்கித் தந்திருக்கிறார். க. பஞ்சாபகேசனின் 'குங்குமப் பூ'வின் பின்னணியில், கோவா சத்தியாக்கிரகத்தின் எதிரொலி தொனிக்கிறது.

வளமான தமிழ் மொழியில் எளிமையும் ஆற்றொழுக்கும் நிறைந்த நன்னடையில் அரிய இலக்கியக் கட்டுரைகளை எழுத வல்லவர் புலவர் ந. சஞ்சீவி. அவர் இவ்விதழில் 'கவிஞர் தரும்காட்சி'யைத் தொடங்குகிறார்.

சென்ற இதழில் அறிமுகப்படுத்தப்பட்ட அம்சங்களுடன், 'செய்திச் சுவைகள்' என்ற மற்றொரு புதிய அம்சமும் இவ்விதழில் தொடங்கப்பட்டிருக்கிறது.

'உமா'வுக்கு இவ்விதழோடு இரண்டாண்டுகள் இனிது நிறைவேறுகின்றன; அடுத்து வரும் மே மாத இதழ், மூன்றாவது ஆண்டின் துவக்கமாக, ஆண்டுமலராக அமையும். ஆண்டு மலரில் வெளியாகப் போகும் சிறப்புகளைப்பற்றிய விவரங்கள் இவ்விதழில் பிறிதோர் இடத்தில் காணலாம்.

எந்த வகையிலும் வாசக அன்பர்களுக்கு நல்லிலக்கியத் தொண்டு செய்ய வேண்டுமென்பதே 'உமா'வின் விருப்பம். வணக்கம்.

— ஆசிரியர்

எளிதாகச் சொன்னவரும்...

"மத்தியதர வகுப்பைச் சேர்ந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுடைய குறைகளைக் கவனித்து வேண்டுவன செய்வதற்கு ஒரு தனி மந்திரி இருக்க வேண்டியது அவசியம்.''

—டாக்டர் ஏ. ராமசாமி முதலியார்

'பட்டி மாடுகள்' என்ற ஒரு வகை மாடுகள் பாட்டுப் பாடினல்தான் பால் கறக்குமாம்; பாட்டை நிறுத்தினுல் உதைக்குமாம்.

— ஒரு நிருபர்

அமெரிக்கா, ரஷ்யா நாடுகளிடம் இருக்கும் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுக் குவியல்கள் யாவும் அழிக்கப்பட வேண்டும். அப்போது தான் உலக சமாதானத்துக்கு வழியேற்படும்.

— ஐ. நாவுக்கு ரஷ்யாவின் அறைகூவல்

''இதுவரை ரயில்வே இலாகா சிற்றுண்டிச் சாலைகளைத் தானே ஏற்று நடத்தும் ஏற்பாட்டை நீடிப்பது தெற்கே தட்சிண ரயில்வேயில் சிலருக்குப் பிடிக்கவில்லை.''

— ரயில்வே மந்திரி ஓ. வி. அளகேசன்

சீவகாருண்யத்தைப் போதிக்கும் பௌத்த மத நாடான இலங்கை, அமெரிக்காவின் அணு குண்டுப் பரீட்சைக்குக் குரங்குகளை அனுப்பி வைக்கும் மகா பாதகத்தைத் தேடிக் கொள்ளக் கூடாது.

— இலங்கைப் பத்திரிகைகள்

துணிகள் ஏற்றுமதி வரி ஆறேகால் சத விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் உயர்ந்த ரகத் துணிகளுக்குக் கஜம் 1-க்கு மூன்று பைசாவும், நடுத்தர ரகத் துணிகளுக்குக் கஜத்திற்கு ஆறு பைசாவும் தீர்வை உயர்த்தப்பட்டுள்ளது.

— மத்திய அரசினர் பட்ஜெட்

"கால் பந்தாட்ட விளையாட்டில் பூரண நிபுணத்துவம் பெற்றவர்கள் சோவியத் கோஷ்டியினர். அவர்கள் முறை தவறி (பவுல்) விளையாடுவது அபூர்வத்திலும் அபூர்வம்.''

— இலங்கையில் உபசரிப்பு

''எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடித்தவர் இந்தியாவின் பிரதமர் நேருஜிதான்.''

— சர்வீஸ் கமிஷன் பரீட்சையில் மாணவர்

...விளங்க வைத்து எழுதியவரும்

அப்படி நியமிக்கப்படும் தனி மந்திரி ஒரு மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவரா யிருந்தால் நல்லது என்று சொல்ல வேண்டியதில்லை.

— ஒரு சம்சாரி

பாடுவதைச் சுருதி சுத்தமாகப் பாட வேண்டுமா, பிரபல வித்து வான்கள்தான் பாடவேண்டுமா அல்லது இளம் வித்துவான்களுக்கும் 'சான்ஸ்' உண்டா என்பதை மேற்படி ரசிக மாடுகளைக் கேட்க விரும்புகிறேன்.

— ஒரு சங்கீத வித்வான்

அழிப்பதென்றால் தம் தலையிலே போட்டு அழிப்பதா அல்லது மற்றவர் தலையில் போட்டு அழிப்பதா என்ற பிரசினை தீராதவரை மேற்படி குண்டுகள் அஞ்ச வேண்டியதில்லை; உலக சமாதானமும் அவசரப்பட வேண்டியதில்லை.

— கீழ்நாட்டு வேதாந்தி

இட்டிலி சாம்பாரின் உண்மையான மகத்துவத்தை – ருசியை – அறிந்திருக்கும் தென்னவருடைய நியாயம் இந்த வகையில் மந்திரி யாருக்கு அவசியம் தெரியுமல்லவா ?

— போசனப் பிரியர்

அப்படிக் குரங்குகளை அனுப்பி வைத்தாலும், அணுகுண்டுகளை மேற்படிக் குரங்குகளே மனிதர் தலையில் போட்டால், சீவகாருண்யத் துக்கு எந்தவிதக் கேடும் செய்ததாகாது.

— ஓர் அனும பக்தர்

நியாயம்தானே! 'ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்' என்ற பழமொழிக்குப் பதிலாக 'ஏற்றுமதி வசதி இல்லாத துணி என்ன துணி?' என்ற புது மொழி பிறக்க வேண்டியதுதானே ?

— ஒரு பழமொழிப் பிரியர்

அப்படி அவர்கள் தப்பித் தவறிப் 'பவுல்' விளையாட்டு விளை யாடினாலும், 'அவர்கள் விளையாட்டே சரியானது' என்று சாதிக்கும் சில 'ரெபரீத்' தோழர்களும் இங்கே இருக்கிறார்கள்!

— அரசியல்வாதி

'எவரெஸ்டு சிகரத்தை யாருமே எட்டிப் பிடிக்கவில்லை' என்ற புளுகுப் பிரசாரத்தை மேனாட்டுப் பத்திரிகை யொன்று பரப்பிவிட் டதைவிட மேற்படி மாணவர் ஒன்றும் அபத்தமாய்ப் பதில் எழுதிவிட வில்லை.

— பரீட்சைக் கணக்கர்

ஒரு துளி அமுதம்

மூலம் : ரூடால்ப் பாம்பாச் ★ ★ தமிழில் : 'மகுடி'

கடற்கரையில் அந்தி கழிந்து மெதுவாய் இருட்டுச் சூழ்ந்து கொண்டு வந்தது. அங்கிருந்து வீட்டுக்குப் போவதற்கு மனமில்லாதபடிச் செய்துகொண்டிருந்தது இளந்தென்றல்.

"புறப்படலாமா? நேரமாகிக் கொண்டு வருகிறதே?" என்றாள் அநசூயா—அவர் மனைவி.

"எனக்கும் பசிக்கிறது. சீக்கிரம் போய்ச் சாப்பிட வேண்டும்." என்றாள் அருகில் உட்கார்ந்திருந்த அவர்கள் பெண்.

குணநாதனுக்கு அந்த அழகான சூழ்நிலையைவிட்டு அதற்குள் போக மனமில்லை.

"இன்னும் கொஞ்ச நேரமிருந்தால்தான் உடம்புக்கு நல்லது" என்றார் குணநாதன். மனைவியைப்பார்த்து தொடர்ந்து, "உன் இளமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், தினசரி இப்படிக் கடற்கரைக்கு வந்து போய்க்கொண்டிருந்தால்மட்டும் போதாது. இங்கே கொஞ்சநேரம் நீடித்துத் தங்க வேண்டும்" என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு பெஞ்சியில் இன்னும் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"எப்போதுமே நாம் சிறுசுகளாக இருந்துவிட முடியுமா? அப்படி ஆசைப்படுகிறது தவறு" என்றாள் அவர் மனைவி அநசூயா. பெண்ணோ, சிரித்தாள்.

குணநாதன் சொன்னார்: "சரி, எப்படியும் எனக்கு இங்கே இன்னும் ஒரு மணி நேரம் இருக்க வேண்டும். உங்களால் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. நான் ஒரு கதை சொல்கிறேன், கேட்கிறீர்களா?"



கதை என்றவுடன் சின்னப் பெண்ணுக்கு ஒரே சந்தோஷம்: ''சரி, அப்பா! சொல்லுங்கள்! கேட்கிறோம்!'' என்ருள் அவள், ஆர்வம் ததும்பி வழிந்த படபடப்புடன்.

'என்றைக்கும் இளமையோடு இருக்க முடியாதா ?'-ரூடால்ப் பாம்பாச் கதையில் பதில் சொல்லுகிருர். சென்ற இதழில் வந்த 'மரணம் வெறும் பொய்'க்கு எதிரொலி இக்கதை

''இளமையை என்றும் நிலையாக வைத்திருக்க முடியும்....'' என்று பீடிகை போட்டுக்கொண்டே தன் கதையை ஆரம்பித்தார் குணநாதன்.

* * *

வசந்த காலம் உலகத்தை மட்டும் இளமையுள்ளதாகச் செய்யவில்லை; மனிதர்களையும் கூட இளமையுள்ளவர்களாகவே செய்துவிடுகிறது அது.

நல்ல வெயில் நேரம். சுற்றிலும் பசுமை பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்ததால், வெயிலின் கடுமை தெரியவில்லை. அப்போது தன் தலையில் சோற்றுக் கலத்தைத் தாங்கிக்கொண்டு போய்க் கொண்டிருந்தாள் ஒரு யுவதி. வசந்த காலம் சுற்றிலும் பூத்திருந்தது என்ருல், அது அவளுடைய அழகிய வதனத்திலும்தான் பூத்திருந்தது என்று சொல்ல வேண்டும்.

வனத்தின் நடுவில் அவளுடைய கணவன் விறகு பிளந்துகொண்டிருந்தவர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்காக மத்தியான்னச் சாப்பாட்டுடன் போய்க்கொண்டிருந்தாள் அவள்.

இப்போது வனத்துக்குள் புகுந்துவிட்டாள் அவள். வெளியே வெயில் அடித்துக் கொண்டிருந்ததாகவே தெரியவில்லை; அத்தனை குளிர்ச்சிகுடி கொண்டிருந்தது அங்கே. காட்டு மலர்களிடையே வசந்தம் பூத்திருந்த காட்சி காண கண்கொள்ளாததாயிருந்தது. பட்சி இனங்களின் 'குக்கூ, 'குக்கூ' என்ற நாதம் 'வசந்தமே! நீ எங்களை விட்டுப் போகாதே'

என்று ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் போய்க் கொண்டிருந்தாள், இளமையே வடிவமாக. இதோ இன்னும் பத்து நிமிஷத்துக்குள் தன் கணவனை அடைந்து விடுவாள் அவள். ஆனால் அதோ கோகிலப் பட்சியின் குரல் அவளுக்குக் கேட்கிறது! உயர்ந்து வளர்ந்திருந்ததோர் மா மரத்தின் கிளையொன்றின் தாழ்ந்த கொம்பு மீது அந்தக் கோகிலப் பட்சி உட்கார்ந்துகொண்டு அவளை நோக்கிச்சொன்னது:

"பெண்ணே! உன்னிடம் இருக்கும் அழகு என்றைக்குமே உன்னிடம் இருக்கும் என்று எண்ணிவிட்டாயா?" — தெளிவாகப் பேசியது கோகிலப்பட்சி.
யுவதி நின்றாள், ஆச்சரியத்தில் மூழ்கி எழுந்தவளாய். அவளையுமறியாமல், "ஏன்?" என்றாள்.

"என்றும் இப்படியே நீ இளமையுடன் இருக்க வேண்டுமானால்,

ஒரு வழியுண்டு. பக்கத்தில் ஒரு மலையூற்று இருக்கிறது. அதிலிருந்து ஒரு சீசா நிறையத் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய் உன் வீட்டில் பத்திரப்படுத்திவை. வாரத்தில் ஒரு நாள் ஒரு சொட்டு அந்தத் தண்ணீரில் குடி. நீ என்றும் மாறாத இளமையுடன் இருப்பாய்!"

கோகிலப் பட்சி இப்படிச் சொல்லி முடித்தவுடனே, யுவதிக்கு உடனே அந்த மலையூற்றுக்குப் போகவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. ஆனால் ஒரு கணம் அவள் யோசித்தாள்: தான் மட்டும் இளமையோடிருந்து விட்டால் போதுமா? தன் கணவன் அப்படி இருக்க வேண்டாமா?
"கொஞ்சம் இரு. என் கணவனையும் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்றாள் அவள்.

"சரி" என்றது கோகிலப்பட்சி.

அவளுடைய கணவனும் ஒரு யௌவன புருஷன். மனைவி கொண்டு வந்த சாப்பாட்டை மிகவும் ஆவலோடு சாப்பிட்டான் அவன். அவன் சாப்பிட்டு முடிந்த பிறகு விஷயத்தைச் சொன்னாள் அவள். "சரி, வா போகலாம்" என்று புறப்பட்டான் அவனும்.

கோகிலப் பட்சி அந்த இளந் தம்பதிகளை அந்த அதிசய ஊற்றுக்கு அழைத்துக்கொண்டு போயிற்று. கையில் கொண்டு போயிருந்த பெரிய பாட்டிலில் தண்ணீரை மொண்டுகொண்டாள் யுவதி. பாட்டிலின் கார்க்கை மூடினாள்.

கோகிலப் பட்சி கூறியது: "ஞாபகமிருக்கட்டும்! சீசாவிலிருக்கும் தண்ணீரை வாரத்திற்கு ஒரு முறை, ஒவ்வொரு சொட்டாக இருவரும் அருந்த வேண்டும். தண்ணீர் முழுவதும் தீர்ந்து போகிற வரை, மறுபடியும் இந்த ஊற்றுப் பக்கமே வரக்கூடாது! அப்படி நீங்கள் வந்தாலும், இந்த ஊற்று இருக்குமிடம் உங்களுக்குத் தெரியவே தெரியாது!"

அவர்கள் அன்று வீட்டுக்குத் திரும்பியபோது மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடுதான் திரும்பினார்கள்.

ஒரு வாரம் சென்றது. அன்று அவர்கள் அந்த 'இளமை அமுதத்தைப்' பருக வேண்டிய நாள். கணவன் அதிகாலையில் எழுந்து, அலமாரியில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சீசாவை எடுத்து அழகு பார்த்தான். கை நழுவிப் பாட்டில் கீழே விழுந்து சுக்கு நூறாகிவிட்டது! 'இளமை அமுதம்' பூராவும் கீழே விழுந்து கொட்டி விட்டது!

அவன் பார்த்தான். துடிதுடித்துப் போய்விட்டான். இது தன் மனைவிக்குத் தெரிந்தால், ஐயோ! ......அதைப்பற்றி அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை! அவளிடம் இப்போது இருக்கும் இளமையும் அறவே அகன்று விடும்! மனம் உருகிப்போய் விடுவாள்!....

'மடமட' வென்று ஒரு காரியம் செய்தான் அவன். கண்ணாடிச் சீசா விழுந்து உடைந்த இடத்தைச் சுத்தம் செய்தான். அதே மாதிரி வேறொரு கண்ணாடிச் சீசாவைக் கொண்டு வந்தான். கிணற்று நீரை அதில் ஊற்றி வைத்துக் 'கார்க்கை' மூடி, முன் இருந்த இடத்திலேயே வைத்து விட்டான். அன்று அவர்கள் இருவரும் கண்ணாடிச் சீசாவிலிருந்ததிலிருந்து ஒவ்வொரு சொட்டாக, இரு சொட்டுகள் 'அமுதம்' அருந்தினர்.

வாரங்கள் நகர்ந்தன. மாதங்களும் முடிந்து கொண்டு வந்தன. தன் மனைவியின் முகத்தை உற்று நோக்கினான் அவன். முன் இருந்ததைவிட இளமை அவள் முகத்தில் தோன்றியதாகப் படவில்லை அவனுக்கு.

இருந்தாலும் ஒரு சமயம் அவள் கேட்டபோது "போன மாதத்தைவிட இந்த மாதம் உன் முகத்தில் களை அருமையாக வீசுகிறது!" என்றான் அவன்.

> தைரியம் இல்லாதவர்களிடம் விவேகம் இருந்து பிரயோசனமில்லை. தைரியமும் விவேகமும் சேர்ந்து இருப்பவருக்குத் தாம் செய்யும் காரியங்களில் நம்பிக்கை இல்லாவிட்டால் அந்தக் காரியங்கள் கெட்டுப் போகும்.
>
> — லூதர்

வேறொரு சமயம், "தினசரி பழரசம் அருந்துபவளைப் போலல்லவா இருக்கிறாய் நீ! எத்தனைத் தளதளப்பு! அப்பப்பா!" என்பான்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் அவள் தன் கணவன் இல்லாத சமயம் அந்தப் பாட்டிலைக் கீழே போட்டு உடைத்துவிட்டாள்! என்ன செய்வதென்று தெரியாமல் துடிதுடித்தாள். இந்த விஷயத்தை அறிந்தாலே கணவன் தன்னுடைய மனம் உடைந்து போய்த் தன் மனத்தெம்பை இழந்து விடுவானே என்று அவளுக்குப் பயம்.

அவளும் அவன் செய்த அதே காரியத்தைச் செய்தாள். அதே மாதிரி இன்னொரு கண்ணாடிச் சீசாவை எடுத்தாள். கிணற்று நீரை அதில் அடைத்து அதே இடத்தில் வைத்துவிட்டாள்.

ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்ததனால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள். இதனால் நாளாவட்டத்தில் ஒருவருக்குள் ஒருவர் பொய் சொல்லிக் கொள்ளும்படியான சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே தம்பதிகள் இருவரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர்தான் கண்ணாடி.

கண்ணாடிச் சீசாவிலிருந்த அமுத நீர்— உண்மையில் 'கிணற்று நீர்' — ஒரு தினம், பூராவும் தீர்ந்து

விட்டது. அப்போது அவளுக்கு வயது நாற்பத்தி ஐந்து; அவனுக்கு ஐம்பது.

"இன்றைக்கு மலை ஊற்றுக்குப் போகவேண்டும்" என்றாள் அவள். குரலில் தயக்கம் இருந்தது.

"ஆமாம், போக வேண்டும். எப்போது புறப்படலாம்?" என்றான் அவன். அவனுடைய குரலில் தயக்கத்தோடு, விவரம் புரியாத பயமும் இருந்தது.

"போகலாமா?"

"ஓ, புறப்படலாம்!"

முன் ஒரு சமயம் கோகிலப் பட்சி குரல் கொடுத்த இடத்தை அவர்கள் அடைந்தார்கள். ஒருவர் முகத்தில் முதுமை படர்ந்திருந்தது இன்னொருவருக்குத் தெரியும். இருந்தாலும் அதுவரையும் ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொண்டு தான் வந்திருந்தார்கள் அவர்கள்.

கோகிலப் பட்சி கிளையில் வந்து குதித்தது.

"ஓ, நீங்களா?" என்றது.

"ஆமாம், நாங்கள் தான்" என்றார்கள் இருவரும்.

"அமுதம் இருந்த கண்ணாடிச் சீசாவை இரண்டு பேருமே தலைக்கு ஒருமுறை கீழே போட்டு உடைத்திருக்கிறீர்கள். இதை ஏன் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளவில்லை?"

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நீயுமா?"

"நீங்களுமா?"

ஒருவரை யொருவர் ஆச்சரியம் ததும்பக் கேட்டுக்கொண்டார்கள். கோகிலப் பட்சி உயர்ந்த குரலில் சிரித்தது. "நீங்கள் இருவரும் இளமையோடு இருப்பதாகவே ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் இதிலிருந்து மீள ஒரு வழியுண்டு!" என்று சொல்லிற்று கோகிலப் பட்சி.

"அது என்ன?" என்று இரண்டு பேரும் ஒரே சமயத்தில் ஆவலோடு கேட்டார்கள்.

"அந்த மலையூற்றுக்கு அழைத்துப் போகிறேன், வாருங்கள். அதில் இருவரும் ஸ்நானம் செய்து எழுந்தீர்களானால், நல்ல இளமையும் அழகும் பெறுவீர்கள்!" என்றது கோகிலப் பட்சி.

ஒரு கணம் அவர்கள் இருவரும் யோசித்தார்கள். பிறகு ஒரே சமயத்தில், "அது எங்களுக்கு வேண்டாம். நாங்கள் வருகிறோம்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள்.

* * *

குணநாதன் சொன்ன கதை முடிந்தது.

"ஏன் அப்பா அவர்கள் ஊற்றில் குளிக்கவில்லை?" என்று கேட்டாள் சின்னப் பெண்.

குணநாதன் சொன்னார்: "இப்போது நானும் அம்மாவும் அந்த ஊற்றில் குளித்தோம் என்று வைத்துக்கொள். பதினெட்டு வயதுப் பெண்ணாக உன் அம்மாவும், இருபது வயதுப் பிள்ளையாக நானும் வந்தால் உனக்குப் பிடிக்குமா?"

"ஐயே!" என்றாள் சின்னப் பெண்.

அவர் மனைவி அநசூயா கேட்டாள்: "ஒருவருக்கொருவர் ஊக்கம் கொடுத்துக் கொண்டதனால்தானே அவர்களால் திடமாக வாழ முடிந்தது?"

"ஆமாம் இளமையின் ரகசியம் அதில் தான் இருக்கிறது. மனிதனுடைய மனம் ஊக்கம் பெறுகிறதில் தான் இளமையின் ரகசியம் இருக்கிறது" என்றார் குணநாதன்.

கவிஞர் தரும் காட்சி

1. திருமுருகாற்றுப்படையில்

ந. சஞ்சீவி, எம்.ஏ.

பழந்தமிழ் இலக்கியங்களான சங்க கால நூல்களைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்று பாகுபடுத்தினர் பழந்தமிழ்ச் சான்றோர். அம் மூவகைப்பட்ட முப்பத்தாறு நூல்களுள்ளும் முதன்மை பெற்றது மூத்தோர் பாடியருளிய பத்துப்பாட்டு. அப்பத்துப் பாட்டுள்ளும் தலைமை பெற்றது திருமுருகாற்றுப்படை. முந்நூற்றுப் பதினேழு வரிகளைக் கொண்ட இந்த அருள் நூலின் ஆசிரியர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். 'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று திரிபுரம் எரித்த சிவனார் முன் நின்றும் துணிந்து கூறும் நெஞ்சத் திண்மையும், நாவீறும் படைத்த நற்றமிழ் கவிஞர் அவர்.

எனவே சங்கப் புலவோருள் முதன்மை பெற்ற நக்கீரனார் செய்தருளிய திருமுருகாற்றுப் படை கடைச் சங்க நூல்களுள் எல்லாம் முதன்மை பெற்று விளங்குவது பொருத்தமே அன்றோ? தலை சிறந்த இலக்கிய நூலாகவும், பக்தி நூலாகவும், பாராயண நூலாகவும் ஒரே சமயத்தில் திகழும் பெருமை திருமுருகாற்றுப் படைக்கே உரிய தனிச் சிறப்பாகும். இத்தகைய பெருமை வாய்ந்த நூலில் தொன்று தொட்டு தமிழ் மக்களின் 'உள்ளம் கவர்ந்த கள்வனா'கிய முருகப் பெருமானின் பெருமையும், புகழும் விரித்துப் பேசப் படுகின்றன. முருகன் மலை நாட்டின், குறிஞ்சி நிலத்தின் கடவுள்; கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த தமிழ்க் குடியும் போற்றி வழிபட்ட அழகுத் தெய்வம்; அறிவுத் தெய்வம்; அன்புத் தெய்வம்; ஆண்மைத் தெய்வம்; அருட் தெய்வம்.

பழமை சான்ற தமிழ்த் தெய்வத்தின் புகழ்பாடும் தன் நூலை ஆசிரியர் நக்கீரனார் ஆற்றுப்படை



இலக்கணம் அமைய அழகுறப் பாடியுள்ளார். ஆற்றுப்படை என்ற தொடருக்கு வழிகாட்டுதல் என்பது பொருள். 'இந்த வழியே போ; அந்த ஊருக்குப்போகலாம்; அவரைக் காணலாம்' என்று மற்ருெருவனுக்கு வழி காட்டும் முறையில் அமைந்துள்ளமையால் 'ஆற்றுப்படை' என்று அந்நூல்கள் வழங்கப் பெறும். இந்த ஆற்றுப் படைக்கு உரிய இலக்கணத்தைப் பழம்பெரும் இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியரே தெளிவாகக் கூறுகிருர். சங்க காலத்தில் வாழ்ந்த சிறந்த கலைஞர்களாகிய கூத்தர், பரணர், பொருணர், விறலியர் என்பவர் வழியிலே எதிர்ப்பட்ட தம் இனத்தவரை—வறுமையால் வாடும் கலைஞரை—எந்த வள்ளலிடம் சென்று தாம் பரிசு பெற்று மகிழ்ந்தார்களோ அந்த வள்ளலிடமே போகும்படிச் சொல்லி வழிகாட்டுவது என்பதே ஆற்றுப் படையின் இலக்கணம்.

அவ்வாறு வழிகாட்டி அனுப்பும் போது வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளை எல்லாம் மக்களின் வாழ்க்கைப் பாங்கை எல்லாம்-வள்ளலின் பெருமையை எல்லாம்—கலைச்சுவை மலியக் கூறுவது புலவர் மரபு. இத்தகைய ஆற்றுப்படை நூல்கள் தான் ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழ் மொழியில் கவிதை வடிவில் தோன்றிய இலக்கியச் சுவை ததும்பும் இன்பப் பிரயாண நூல்கள்; 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற பெருங் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அழியாத் தமிழ்ச் செல்வங்கள்; தமிழகத்தின் மண் வளத்தையும், தமிழ் மக்களின் மன வளத்தையும் உண்மை ஒளி வீசப் புனைந்து காட்டும் சொல்லோவியக் கூடங்கள்; பழந் தமிழகத்தின் நாகரிகத்தையும் வரலாற்றையும் துருவிக் காணப் பெருந்துணை புரியும் ஒளி விளக்குகள்.

பண்பும் பயனும் சேரப்படைத்த 'ஆற்றுப்படை' இலக்கணம் அமைய நக்கீரர் செய்த நூலுக்கும் பிற ஆற்றுப்படைகட்கும் சில வேற்றுமைகள் உண்டு. அவற்றுள் முக்கியமானது ஒன்று. பிற ஆற்றுப்படைகளெல்லாம் யாரைப் பார்த்துப் புலவர் கூறுவதாக இருக்கிறதோ அவரோடு சேர்ந்த பெயரையே பெற்றிருக்கும். சான்ருக ஒரு புலவர் மற்ருெரு புலவருக்கு வழி காட்டுவதாக இருந்தால் அதற்கு 'புலவராற்றுப் படை' என்ற பெயர் அமையும். ஆனால் திருமுருகாற்றுப்படையோ யாரைப் போற்றுவதற்காகப் பாட்டு உண்டாயிற்ருே அந்த பாட்டுடைத் தலைவனாகிய முருகனுடைய பெயரோடேயே சேர்ந்து புகழ் பெற்றுள்ளது. 'முருகனிடத்திலே ஆற்றுப்படுத்துவது' என்ற பொருளுடையதே திருமுருகாற்றுப் படை என்ற அழகிய சொற்ருெடர்.

அறுமுகப் பெருமானாகிய திருமுருகன் கோயில் கொண்டு அடியவர்கட்குக் கருணை புரியும் இடங்களாக ஆன்ருேர்களால் போற்றப்படும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலைமலை ஆகிய ஆறுபடை வீடுகளின் அருமை பெருமைகளையும் அவற்றை ஒட்டிய பிற செய்திகளையும் அழகுறப் பாடும் ஆறு பகுதிகளைத் தன்பாலுடையது திருமுகாற்றுப்படை நூலின் முதற் பகுதியில் முருகக் கடவுளுடைய திருவுருவச் சிறப்பும், அவர் அணியும் மாலைகளின் அழகும், மாண்பும், சூரர் மகளிர் செயல்களும், முருகப் பெருமான் சூரனைக் கொன்ற வென்றியும், மதுரையின் பெருமையும், திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளனும் இயம்பப்படுகின்றன.

இரண்டாவது பகுதியில் முருகன் அடியவர்க்கு அருள எழுந்தருளும் யானையின் இயல்பும் அவருடைய ஆறு திரு முகங்களும், பன்னிரு திருக்கரங்களும் ஆற்றும் செயல்களும், திருச்சீரலைவாயில் அவர் எழுந்தருளுவதும் தெரிவிக்

கப்படுகின்றன. மூன்றும் பகுதியில் முருகவேளை வழிபடும் முனிவர்களுடைய திறமும், தேவருடன் திருமுருகனைத் தரிசிக்க வரும் மகளிர் இயல்புகளும், திருமால் முதலியவர் பற்றிய செய்திகளும் விளக்கப்படுகின்றன. நான்காவது பகுதியில் அந்தணரியல்பும் அவர்கள் அறுமுக வேளை வழிபடும் முறைமையும் அறிவிக்கப் படுகின்றன.

ஐந்தாவது பகுதியில் குன்றக் குரவையின் நிகழ்ச்சியும், பாடுமகளிர், ஆடு மகளிர் ஆகியோரின் பண்பு நலனும், அவர்கள் அணி, ஆடை, செயல் முதலிய சிறப்புக்களும் கூறப்படுகின்றன. ஆறுவது பகுதியில் முருகன் எழுந்தருளும் இடங்களும் தேவராட்டி அவரை ஆற்றுப்படுத்தும் முறையும், அவரை வணங்கும் வழியும், அவர்பாற் சென்று அருள் பெறும் நெறியும் அவருடைய தொண்டர்களின் நல்லியல்புகளும், அவர் அருள் சுரக்கும் பான்மையும் பழமுதிர் சோலையிலுள்ள அருவியின் அழகும் விரிவாகப் பேசப்படுகின்றன. இவ்வளவு நிறைந்த செய்திகளைப் பரக்கப் பேசும் பாட்டாக, நூலாக விளங்கும் திருமுருகாற்றுப்படை சங்ககாலத் தமிழ் மக்களின் சமய வாழ்வினைப் பற்றி அறிந்துகொள்ளப் பெருந்துணை புரியும் கருத்துக் கருவூலமாய்க் காட்சி தருவது இயற்கை அன்றோ?

சங்கத் தமிழ் மணம் கமழ—தெய்வத் திறம் விளங்க—திருமுருகனின் அருள்போற்றும் இந்நூலின் ஆறுவது பகுதியாக விளங்கும் பெருமை பெற்றது பழமுதிர் சோலை ஆகும். சங்க கால சமய—சமுதாய வாழ்வினையும் மக்கள் மனக் கருத்துக்களையும் தன் செஞ்சொல் திறத்தால் உள்ளவாறு படம் பிடித்துக் காட்டும் ஒப்பற்ற திறம் படைத்த நக்கீரனார் நூறு வரிகள் கொண்ட இப்பகுதியில் கூறும் செய்திகளைக் கற்போர் உள்ளம் உருகும்; உணர்வு பெருகும்; அறிவு தெளியும்; அருள் சிறக்கும்.

> அன்பான வார்த்தைகள், கருணை ததும்பும் செயல்கள், பிறரை நோகச் செய்யாத மனோபாவம்—இந்தக் குணங்கள் அத்தனை கடினமானவையல்ல; ஆனால் இவை தரும் பலன் சிரஞ்சீவியானது.
>
> —ராபர்ட்சன்

குமரவேள் கருணையே வடிவமானவன். நாளும் புதுமைக் கோலம்கொண்டு நல்லடியார்க்குக் காட்சி தரும் அவன் அனைத்துயிர் கட்குமுரிய பொதுமைத் தெய்வம். பழமைக்கும் இளமைக்கும் மணத்திற்கும் மாண்பிற்கும் உறைவிடமாய் விளங்கும் அவனை எல்லோரும் வழிபடுகிறார்கள்; எங்கெங்கும் வழிபடுகிறார்கள்; எவ்வெவ்வாறோ வழிபடுகிறார்கள்; அவர் அனைவர்க்கும் பழமுதிர்சோலை அருவி போல் பொங்கி வரும் கருணையோடு பொருந்தி அருள் புரிகின்றான் முருகப் பெருமான். இப் பேருண்மையினை நக்கீரர் பெருமான் தன் அன்பிற்குரிய இரவலனுக்கு அழகுற விளக்கிக் காட்டுகின்றார்.

தமிழ் நாட்டில் ஊர் தோறும் விழா எடுப்பார்கள். ஊக்கமும் உயர்வும் மிகுந்த அவ்விழாக்களில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய வேலவனுக்கு கூடை நிறைய தினை அரிசியைப் பற்பல மலர்களோடு கலந்து வைத்துப் படைப்பார்கள்; ஆட்டை அறுத்து பலியிடுவார்கள்; முருகனுக்குரிய கோழிக்கொடியை உயர்த்துவார்கள்; விழாவுக்குரிய களத்தை நிறுவுவார்கள். இத்தகைய விழாக்களிலெல்லாம் முருகன் அடியவர் அன்புக்கு ஆட்பட்டு எழுந்தருள்வான். ஊரூர் தோறும் இவ்வாறு எழுந்தருளும் முருகன் உள்ளம் உருகி ஆர்வலர்கள்-அன்பர்கள் - ஏத்தி வழிபடும் இடங்களிலும் - அவர்கள் இதயங்களிலும் தவறாது கோயில் கொள்வான். அதோடு பூசாரியாகிய வேலன் வெறியாடுமிடத்திலும் வீற்

றிருப்பான். மாந்தர்கள் வழிபடும் இடங்களிலன்றி இயற்கை அன்னை எழில் கூத்து ஆடும் இடங்களில் எல்லாம் அவன் அமர்ந்திருப்பான். காடுகளில், கனி யுதிர் சோலைகளில் — நாற்புறமும் நீர் சூழ்ந்த தீவுகளில் — ஆறுகளில் குளங்களில் இது போன்ற பற்பல இடங்களில் அழகுத் தெய்வமாகிய அவன் ஆர்வமுடன் குடிகொண்டு இருப்பான். அம்மட்டோ? நான்கு தெருக்கள் கூடும் சதுக்கங்களிலும் புதுமலர் பூத்துக் குலுங்கும் கடம்ப மரங்களிலும், மன்றங்களிலும் ஊர்க்குப் பொதுவான இடங்களிலும் உள்ளன்போடு உறைவான்.

இத்தகைய பெருமானை யாவர்க்கும் எங்கும் அருள் புரியக் காத்திருக்கும் கடம்பனை-கந்தவேளை-குறமகள் ஒருத்தி வழிபாடு செய்கிறாள். ஆவேசம் வந்து வெறி ஆடுவதால் அவளை வெறி ஆட்டி என்றும், தேவராட்டி என்றும் மக்கள் அழைப்பர். முருகனுக்குக் கோயிலொன்று இருக்கிறது. அக் கோயிலில் விழாவுக்குரிய ஏற்பாடுகள் விரைவாக நடைபெறுகின்றன.

இதோ குறமகளும் நீராடி வந்து விட்டாள். முருகன் கோயிலில் நிலை வாயிற்படி, சுவர், திருவாயில் முதலிய இடங்களிலெல்லாம் நெய்யோடு வெண்கடுகையும் வாரி அப்பி மலர் தூவிக் கோலம் செய்கிறாள். உள்ளொன்றும் புறமொன்றுமாக இருவேறு நிறமுடைய ஆடைகளை அவள் உடுத்திக் கொள்கிறாள். ஆட்டை வெட்டி அதன் ரத்தத்தோடு நல்லவெள்ளை அரிசியை சிறு பலியாக இடுகின்றாள். பல கூடைகள் நிறைய பிரப்பரிசி படைத்து சிறிய பசும் மஞ்சளோடு நறிய வாசனைப் பொருள்களைத் தெளித்துப்பெரிய குளிர்ந்த செவ்வலரி மலரால் ஆகிய மாலையை ஒரே அளவுடையதாக அறுத்து ஆங்காங்கே தொங்கக் கட்டி மக்கள் யாவரும் துன்பம் நீங்கி இன்பம் நிறைந்து வாழ அக் குறமகள் வழிபாடு ஆற்றுகின்றாள்.

'பசியும் பிணியும், பகையும் நீங்கி பாரக மடங்கலும் சீராக வாழ்க' என்று செறிந்த மலைச் சாரல்களில் உள்ள நல்ல நகர்களை எல்லாம் வாழ்த்துகின்றாள். தீபம் ஏற்றி, தூபம் காட்டி, குறிஞ்சிப் பண் இசைத்து, அருவி முழக்கத்தோடு இன்னிசைக் கருவிகள் யாவும் இணைந்தொலிக்க, கண்டோர் கலங்குமாறு ரத்தம் கலந்த சிவந்த தினை அரிசியைப் பரப்பிப் பன்நிற மலர்களையும் தூவி முருகன் விரும்பும் இசைகள் யாவும் முழங்க 'தெய்வம் இல்லை' என்பாரும் நெஞ்சு நடுங்க அத் திருக் கோயிலில் முருகனை எழுந்தருளுமாறு செய்கின்றாள் குறக்குல மங்கை.

இத்தகைய மெய்சிலிர்க்க வைக்கும் காட்சிகள் நிறைந்த கோயிலில்—வெறியாடும் இடத்தில் —குறிஞ்சி நில மக்கள் மலைகளிலெல்லாம் சிலையோடட பற்பல பாட்டுகளையும் பாடுகிறார்கள்; கொம்பு கொண்டு ஊதுகிறார்கள். ஒலியால் கொடுமையுடைய மணிகளை ஓங்கிஒலிக்கின்றார்கள். போர் வல்ல முருகனுக்குரிய புறங் காட்டா பேராண்மை படைத்த 'பிணிமுகம்' என்னும் யானையைப் போற்றி வாழ்த்துகிறார்கள்.

இங்ஙனம் வகை வகையான மக்கள் வித விதமான வரங்களைப் பெற எத்தனை எத்தனையோ இடங்களில் எவ்வெவ்வாறோ வழிபாடு செய்கிறார்கள். என்றாலும் பரங் கருணைப் பெருங் கடவுளாகிய முருகனே வேண்டினர் வேண்டியாங்கு எய்த ஆங்காங்கும் எழுந்து அருள் புரிகின்றான். மக்களின் மனங்கவர்ந்த தெய்வமாய் விளங்கும் மாமுருகனின் இத்தகைய பெருமைகளை யெல்லாம் தன்னை மறந்து பேசி வந்த நக்கீரருக்குத் தன் முன்னே நிற்கும் அறிவும் ஆர்வமும் நிறைந்த புலவன் நினைவுக்கு வருகிறான். வேல் முருகனின் திருவருளுக்குப் பாத்திரமாகும் முறையில் அவனுக்கு வேண்டிய அறிவுரை கூறி வழி காட்ட வேண்டிய தன் கடமையை

அவர் உணர்கிறார்; உணர்ந்து பேசுகிறார்: 'ஐயனே! முருகன் உறையும் இத்தனை இடங்களையும் கூறினேன். அது கேட்டு நீ மயங்க வேண்டாம். உனக்கு எந்த இடம் விருப்பமோ, எந்த இடம் வாய்க்குமோ அங்கே போ! இதயம் கலந்த அன்போடு மட்டும் செல்; அவன் அருள் உனக்குத் தவறாது கிட்டும். அப்பா! முருகனை வணங்குவதற்குரிய இடத்தில் முகமும் அகமும் மலர்ந்து இரு; கரங்களைக் குவித்துப் புகழ்ந்தும் காலிலே விழுந்து வணங்கியும் வழிபாடு செய்.''

இவ்வாறு உய்ய வழி காட்டும் நக்கீரர் வாய் பெற்ற பயனெல்லாம் வாய்க்க முருகன் திருப்புகழை நாவார மனமார நவின்று, பயனடையும் நெறியினையும் புலமை நலங்கனிந்த சொற்களால் விளக்குகிறார். 'உயர்ந்த உச்சியையுடைய இமயத்தில் நீல நிறப் பசுஞ்சுனையில் ஐம்பூதத் தலைவருள் ஒருவன் ஏற்றுக் கொடுக்க முனிவருடைய மனைவியர் அறுவர் பெற்றெடுத்த ஆறு திருவுருவத்தோடு கூடி அமர்ந்த செல்வமே! கல்லால நிழலில் வீற்றிருக்கும் கடவுளின் திருமகனே! மன்னுமோர் இமயமலையின் மகளுக்கு வாய்த்த மகனே! மாற்றார்க்கு ஒரு கூற்றுவனே! வெல்லும் பேரரையுடைய துர்க்கையின் வீரமகனே! அணிகளின் சிறப்பும் பழமையின் பெருமையும்படைத்த பராசக்தியின் குழந்தையே! விண்ணவரும் வணங்க வில்லேந்திய படையின் வீரத் தலைவனே! இன்பமாலை அசைந்தாடும் அழகிய மார்புடையோனே! நூல்கள் யாவுமறிந்த நிகரில்லாப் புலவனே! இணையில்லா போர் வீரனே! இளமையும் வெற்றியும் நிறைந்தவனே! அந்தணர்கள் போற்றும் பெறல் செல்வமே! மெய்யுணர்வாளர் மொழியும் சொற்களெல்லாம் தொக்க தொகுதியாய்த் திகழ்பவனே! வள்ளிக்கும் தெய்வயானைக்கும் வாய்த்த ஒரு கணவனே! வீரமிக்காருள் ஆண் சிங்கம் போன்றவனே! வேல்

ஹோட்டல் சொந்தக்காரர்.— (பாட்டுக் கச்சேரியில், பக்கத்தில் ஒரு குடும்பஸ்தரிடம்) பாகவதர் பாடுவது கல்யாணி ராகம் என்று நீங்க சொல்றீங்க; நான் பூரிகல்யாணின்னுவாதாடறேன்! உங்களுக்குப் பெண்ணின் கல்யாண ஞாபகம்; எனக்கோ நாளைக்கு ஹோட்டலில் பூரிமசாலுக்கான ஆயத்தங்களைப் பற்றிய ஞாபகம்!

தாங்கிய பெருங் கைகளால் விளையும் பெரும் செல்வத்தின் தலைவனே! கிரௌஞ்ச மலையை அழித்த குன்றாத வெற்றியையுடைய குமரனே! வான் முட்டும் மலைகள் நிறைந்த குறிஞ்சி நிலத்தின் கோமானே! வேறுபட்ட புலவோர் பல்லோரும் ஒன்றுபட்டுப் புகழும் நன்மொழிப் புலவரேறே! பொற்கருமுத்திச் செல்வத்தையுடைய முருகனே! விரும்பி வந்தவர் விரும்பியதெல்லாம் அளிக்கும் பெரும் புகழாளனே! பெரியோர் போற்றும் பெரும் பெயர்க் கடவுளே! சூரன் குலத்தை வேரறுத்த தீரனே! தலைவனே!' இப்படியெல்லாம் போற்றி வாயார வாழ்த்த வேண்டுமாம். இக்கருத்துக்கள் யாவும் அமைய புலவர் பெருமானாகிய நக்கீரர் முருகனைக் குறித்து மனமுருகிப் பாடி இருக்கும் திருமுருகாற்றுப்படை அடிகளைத் தினமும் ஓதுவார் நெஞ்சம் நெய்போல் உருகுவது திண்ணம்.

(தொடரும்)

இளந்தேன் நிலவின் கீழ், பசுமரத்தடியில் பார்வைக்கு கொள்ளை இன்பமாய் பாவை நிற்கிறாள். அணுக முடியாத அழகி; மோகினிப் பிசாசு அவள்! ஆனால் அவனை அணுகி விட்டாள்!

★ எஸ். வி. ரமணி ★

இரவு மணி மூன்று இருக்கும். பிறை நிலவின் மெல்லிய ஒளி எங்கும் பட்டும் படாமலும் லேசாகப் பரவியிருந்தது. தெரிந்தும் தெரியாமலும் கன்னமிட்டு வீட்டினுள் நுழையும் 'அமெச்சூர்' திருடனின் உள்ளத்தை என் மனத் திரையில் ஒட்டிக் காட்டியது அந்த காட்சி. எதிரில், பக்கத்து வீட்டு மாடியின் அருகில் உராய்ந்து நிற்கும் வேப்ப மரத்தின் இலைகள் லேசான காற்றில் அசைந்து சலசலத்தன.

அந்த மங்கிய நிலவொளியில் ஓர் உருவம் மொட்டை மாடியில் நின்றபடி வேப்ப இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி அப்படியும் இப்படியும் நகர்ந்து, கிளைகளைத் தாழ்த்திப் பரபரப்பாகப் பறித்துக் கொண்டிருந்தது. என் உள்ளம் மருண்டது. நாலு குடித்தனம் இருக்கிற வீட்டில் இருக்கிறோம் என்ற தைரியம். இன்னும் கொஞ்சம் கவனமாகப் பார்க்கத் தூண்டியது என்னை. அதிலும் அது ஒரு பெண்ணாகவும் தோற்றியது. அந்த அசைவுகளிலிருந்து அந்தப் பெண் ஓர் இளமங்கையாகத் தான் இருக்க வேண்டும் என்றும் விளங்கியது. எப்படிப் பெண்ணாக இருக்க முடியும்? மூன்று மணி அகால வேளையில் எந்தப் பெண் வேப்ப இலை பறிப்பாள்? வேப்ப இலை பறிக்க வேண்டிய அவசியம்?

இந்தக் கேள்விகள் அனைத்தும் என் உள்ளத்தில் அந்தச் சமயத்தில் எழுந்தன. எதற்கும், எந்த விதத்திலும் சரியான விடை கிடைக்கவில்லை. மனம் குழம்பியதுதான் மிச்சம். அந்தச் சமயத்தில் இளமையில் கண்டிருந்த அந்த கொள்ளிவாய்ப் பிசாசுச் சம்பவம், பலர் சொல்லக் கேட்ட ருசிகர பயங்கர சம்பவங்கள் எல்லாம் மனத்தில் மலர்ந்தன. எதுவும் திட்ட வட்டமாகக் காணமுடியாத சஞ்சல நிலையில், அந்தச் சம்பவங்களே உருவம் எடுத்துக் காட்சி யளித்தன. அந்த நிலையில் இதுவும் பிசாசு வகைதான்; 'வேப்பமரத்து மோகினி' என்று என் மனம் என்னைக் கலந்து கொள்ளாமலேயே முடிவு செய்து விட்டது.

'வேப்பமரத்து மோகினி.......!'

ஆம். என் மனம் முடிவு செய்து கண்ட இந்தப் பெயர் என்னை ஆட்டியது. கால்கள் தள்ளாட, கண்கள் இருள, தேர்ந்த உண்மை தேய மீண்டும் என் படுக்கையில் வந்து படுத்தேன். அவ்வளவுதான். இத்தனையில் சுழன்ற உள்ளம் சிறகடித்து நிமிஷத்துக்கு நிமிஷம் காத தூரம் பறந்தது. அதன் வேகத்தின் சுழற்சிலே நான், என் உடல் எல்லாம் செயலற்று அதன் இழுப்புக்குச் சென்று வந்தோம்.

பொழுது விடிந்தது. பகலவன் தோன்றி பகட்டாக்கினான் பாரை. இருந்தும் என் மனம் விடிவு காண முடியவில்லை 'வேப்பமரத்து மோகினி' என் உள்ளத்தில் சல

னத்தையும் அதனூடே உடலில் அயர்ச்சியையும் தோற்றுவித்துக் கொண்டிருந்தாள், ஏதோ பிரமை பிடித்தவன் போல் இருந்தேன்.

மத்யானம் இலையில் போட்ட சாதத்தைச் சாப்பிடாமல், எதையோ பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது என் தாயார் 'என்னடா இப்படி மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்! என்ன பலமான யோசனை' என்று விசாரித்தாள். நான் கல்யாணம் ஆகாமல் கலங்குகிறேனே என்ற கவலை அவளுக்கு.

நாட்கள் தேய்ந்து பத்து இரவும் பகலும் நகர்ந்தன. காரியாலயத்திருந்து வந்த நான் வீட்டில் என் தாயாரைக் காணாமல் வெளி முற்றத்திலேயே நின்று கொண்டிருந்தேன். வேப்பமரக் காற்று லேசாக என் உடலை வருடி, நிழலாட்டமாகக் காட்டியது. வேப்பமர மோகினி நின்று பறித்த கோலம் அகக் கண்ணுக்குத் தெரிந்தது, இருந்தாற் போலிருந்து பக்கத்து வீட்டிலிருந்து ஏகக் கலாட்டாவும் பாத்திரங்களின் ஒலியும் வேகமாகக் கேட்டன. எனக்குப் பகீர் என்றது. குடியில்லாத வீட்டில் எப்படி இந்த மாதிரி சப்தம் வருகிறது. இது எதுவோ வீட்டு மோகினி விஷயமாக இருக்குமோ என்று எண்ணினேன்.

இந்த தர்ம சங்கட சமயத்தில் என் தாயார் வந்தாள். ''ஏண்டா இங்கேயே நின்றுக் கொண்டிருக்கிறாய்? சும்மாத் தான் பூட்டை மாட்டி வைச்சிருக்கேன். உள்ளே போய் 'டிரஸ்'ஸைக் கழட்டி விட்டு காபியை எடுத்துச் சாப்பிடக் கூடாதோ? என்னமோ அவசரத்திலே கூப்பிட்டா, போயிட்டேன் நீ வர சமயத்துலே......'' அவள் மேலே சொல்லிக் கொண்டே உள்ளே போய்க் கொண்டிருந்தாள்.

என் மனம் துடித்தது. நேரே தாயாரிடம் போய், ''ஏம்மா, எந்த வீட்டுக்குப் போயிருந்தே? பக்கத்து வீட்டிலே என்னமோ சத்தம் கேக்கறதே என்ன அது? அங்கே யாரும் குடி வந்தாச்சா என்ன?'' என்று கேட்டேன்.

குடி வந்தாச்சே. பதினைஞ்சு நாளுக்கு மேலே ஆறது. அவாத்துக்குத் தான் போயிட்டு வந்தேன் பாவம், முதல்லே குழந்தைக்கு உடம்பாயிருந்தது. இப்போ அந்த பெண்ணுக்குப் பாவம், உடம்பு சரிப்படவில்லை. என்னவோ பயந்துடுத்தாம். மந்திரக்காரரைக் கூப்பிட்டா. பெண்ணுக்கு அப்பாவும் ஜாகையை மாத்துட்டு உடனே 'காம்பு' போயிட்டராம். பிரசவம் ஆன பொண்ணு ஒண்ணு. ஜுரப் பொண்ணு ஒண்ணு, என்ன செய்வா, பாவம். அந்த மாமி என்னவோ, என்னாலானது ரெண்டு வாய் வார்த்தை, 'தைரியம் சொல்லுங்கோன்னு கூப்பிட்டா' அம்மாளுக்கு என்னவோ அந்த வீடு ராசியில்லை போலிருக்கு ....'' எனக்கு எதிரில் இருந்த காபி ஐஸ்கிரீம் மாதிரியிருந்தது. அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டே, ''அவருக்கு என்ன வேலையாம்?'' என்று கேட்டேன்.

''என்னவோ, காம்பு கிளார்க் வேலையாம். ஊர் ஊரா போகணுமாம்..............அது சரி, நான் கோயிலுக்கு போயிட்டு வர்றேன்..........நாலு நாளா கோயில் பக்கமே போகலை........''

கையில் கறுத்துச் சிறுத்த ஜப மாலையை உருட்டிக் கொண்டே தாயார் கோயிலுக்குக் கிளம்பி விட்டாள். என் மனம் இந்தச் சம்பவத்தையும் பின்னிப் பார்த்தது. நான் கண்ட இருட்டு உருவம் ....அதனால் என் உடலும் உள்ளமும் சோர்ந்திருக்கிறது. ஒரு பெண்ணையும்........... அவள் குமரியோ, குழந்தையோ, தெரி

யாது...அவளையும் பயமுறுத்திப் படுக்கையில் கிடத்தியிருக்கிறது.''

இந்தச் சமயத்தில் என் உள்ளம் மீண்டும் வேப்பமர மோகினி வேலை தான் இது என்று தீர்மானமாக அலறியது. வேப்பமர மோகினியின் சொரூபத்தையும் சக்தியையும் தயாரித்துக் காட்டி அவற்றுக்குத் துணை கொண்டது, ஆம்! வேப்பமரத்து மோகினி தான்!

கும்பகர்ணப் படலம் முடிந்து, நான் பிரஷ்ஷும் கையுமாய் வெளி முற்றத்தில் நின்று, பல் விளக்கிக் கொண்டிருந்தேன். இப்பொழுதெல்லாம் அடிக்கடி வேப்பமரம் என் திருஷ்டியை இழுத்து வந்தது. ஆனால் அன்று காலை என் உள்ளத்திலும் புறக் கண்ணிலும் பட்டது வேப்பமர மோகினியின் மாயைத் தோற்றம் அல்ல. இருபது வயதுக்குள் இருக்கும்; வாலைப் பருவ மங்கை யொருத்தி, ஈரமான தலை மயிரைக் கோதி, அள்ளிச் சொருகி கொஞ்சம் கறுத்துப் படர்ந்த செந்தாமரை முகத்தில் சின்னஞ்சிறு இயல்பான நெற்றிப் பொட்டுடன் துல்லிய வெள்ளை ஜார்ஜெட்டு இடைத் துவட்சியை வரையறுத்துக் காட்ட, இளமையின் பூரிப்பை இறுகிய 'சோலி' ரவிக்கை விசுகித்து வெளிப்படுத்த மந்தகாச மதி வதனத்தில் மலர, ஈரத்துணிகளை மொட்டை மாடி இருந்த கொடியில் உலர்த்திக் கொண்டிருந்தாள். ஆம். உண்மையிலேயே வேப்பமரத்தின் ஈர்ப்புச் சக்தியை விட ''அவள்'' ஆகர்ஷண சக்தி அதிகமிருந்தது.

என் கண்ணால் அவளைப் பார்த்தேன். அவளும் பார்த்தாள். நானும் பார்த்தேன், அடுத்த கணம், அவள் கண்ணைத் தாழ்த்தி உடல் முழுவதையும் ஒரு திருப்பு. அந்தத் திருப்பத்திலே அவளின் இயற்கை லாகவம், இடைத் துவட்சி, மடமான சாயல், அங்க பாவிப்பு எல்லாம் என் உள்ளத்தில் படிந்தது. ஆம், அந்தச் சந்திப்பு. கணநேரமானாலும் என் பிரம்மச்சாரியத்தையே அல்லவா குலைத்து விட்டது! எனக்குத் தெரியாது; உள்ளத்தில் காதல் அலைகள் மோதவில்லை. ஆனால் அவள் உள்ளத்தில் காதல் அலை இளம்பி மோதிக் கரை புரண்டு என் தாயாரிடமும் அவள் தாயாரிடமும் 'மணந்தால் இவரையே தான் மணப்பேன்' என்று சொன்னாளோ என்னவோ!

இந்தச் சந்திப்புக்கு அடுத்த ஒரு வாரத்துக்கு எல்லாம் என் தாயார் என்னைக் கேட்டாள்.

''ஏண்டா ரகு, அவாத்துக் கல்யாணியை உனக்குத் தரப் பிரியப் பிரியப்படறா. ஜாதகம் எல்லாம் பேஷாப் பொருந்தியிருக்கு, நீ என்ன சொல்றே, கல்யாணம் பண்ணிக்கிறயா?''

அந்தச் சந்திப்பிலே கண்ட கவர்ச்சி அடுத்த நிமிஷம் என்னைச் சம்மதிக்கச் செய்தது. கல்யாண ஏற்பாடு ஆயிற்று.

கல்யாணி என்னுடன் வாழ்க்கை நடத்த வந்து ஒரு வாரமாகி விட்டது. அன்று லீவு நாள். என் தாயார் கொஞ்சம் விவேகம் உள்ளவள்; சிறிசுகள் சிறிது சல்லாபமாய் இருக்கட்டும் என்று மூன்று மணிக்கே பக்கத்து ஊரில் நடந்த ராமாயண நாடகம் ஒன்றைப் பார்க்கப் போய் விட்டாள். அத்துடன் இரவு வர முடியாது; ஜாக்கிரதையாய் இருங்கள் என்று தொல்லியும் சென்றாள் இளந் தம்பதிகளுக்குப் ''பயம்'' இடையூறு அல்லவா!

சாயந்திரம் ஏழு மணி இருக்கும். நான் குமட்டியில் வாணலியைப் போட்டுவிட்டு விசிறிக் கொண்டிருந்தேன். பக்கத்தில் கல்யாணி 'உப்புமா' கிளறுவ

நான்
விரும்பி வாங்குவது
உம்மிடியார்
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல்
பாத்திரங்களே
VUMMIDIARS Stainless Steel
வெள்ளி
ஸ்டெயின்
லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களை
ஷைனோ
வினால்
துலக்குங்கள்
உம்மிடியாரின் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களையே நான் பொறுக்கியெடுப்பதற்கு பலகாரணங்கள் உண்டு. உம்மிடியார், உடையாத, நொறுங்காத துரு ஏறாத முதல் தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே உபயோகிக்கிறார்கள். பெண்மணிகளால் பெரு மதிப்பைப் பெற்ற இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வெகு காலம் உழைக்கக் கூடியவை. ஆனாலும் மிக மலிவானவை.
உம்மிடியார்ஸ்
(மான்யுபாக்சரர்ஸ்) லிமிடெட்.
சென்னை-2.
V.R.Z-32

The

PENCILS

of The millions
you will love
its
smooth writing

MERCURY
BLACK LEAD

THE MADRAS
PENCIL
FACTORY

3. STRINGER'S ST
MADRAS-1

சென்னையில்
சிறந்து விளங்கும்

விநாயகர்

சுருட்டுகள்

ஷெல்
பிராண்டு

TRADE MARK REGISTERED
PROPRIETOR: V. ARUMUGA CHETTY

மணிலா
சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி
18. அண்ணு பிள்ளை தெரு, சென்னை-1.
N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலை
களும் எம்மிடம் கிடைக்கும்.

தற்கான ' டியூஷனை ' கற்பித்துக் கொண்டு, வாத்தியார் தோரணையில் என் கன்னத்தோடு உராய்ந்த படிச் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். அழுக்குத் தண்ணீரைக் கொட்டிவிட்டு, அதில் மாவு கரைப்பதற்காக, ''கல்யாணி! பிளீஸ்! இதைக் கொஞ்சம் 'பாத்ரூமில்' கொண்டுபோய்க் கொட்டிவிட்டுக் கொண்டாயேன்'' என்று அவளைக் கெஞ்சினேன்.

''சரி'' என்று எழுந்து அழுக்கு நீர்ப் பாத்திரத்துடன் 'பாத்ரூம்' சென்றவள் என்னைக் கூப்பிட்டாள். உடனே ஓடிப் போய்ப் பார்த்தேன்.

''ஒன்றுமில்லை. பயமாயிருந்தது. அதனாலே கூப்பிட்டேன். துணை இல்லாமல் இந்தப் 'பாத்ரூம்' பக்கம் சாயந்திரமானால் வரமாட்டேன்....'' என்றாள் கல்யாணி.

'' இங்கே என்ன பயம் ?''

''என்னவோ எனக்கு இந்தப் பாத்ரூம் பக்கம் போனாலே பயம் தான். இங்கே பார்த்துப் பயந்துட்டுத்தான் ஜுரமாக் கிடந்தேன். இத்தனைக்கும் நான்தான் எங்கள் அகத்திலே தைரியக்காரின்னு பேரு....''

''ஏன், கல்யாணி, இங்கேஎதைப் பார்த்து பயந்துட்டே? எப்போ?''

''அதுவா, உள்ளே வாங்கோ சொல்றேன்.'' கல்யாணி நேராகக் குமட்டி அடுப்பண்டை போய் உட்கார்ந்து கொண்டாள். எதனாலோ அவள் உடல் ஆடியது போல் இருந்தது.

''என்ன கல்யாணி சமாசாரம்? ''

''ஒன்று மில்லையே, உங்களுக்குப் பிடித்தமான வரட்டு உப்புமா கிளறப் போறேன். பாவம், உங்களைக் கிளரச் சொல்லிவிட்டு நான் உட்கார்ந்துண்டு இருக்கலாமா ?........''

''கல்யாணி, பேச்சை மாற்றாதே. எதைப் பார்த்துப் பயந்தே? அதைச் சொல்லுன்னா?''

புதுமை போல் இருக்கும் அழகு பெரிய அழகல்ல; நடக்கும் போதும் கைகளை அசைக்கும் போதும் கன்னத்தில் குமிழி விழச் சிரிக்கும் போதும் நாற்புறமும் பார்க்கும் போதும் தென்படும் அழகு அதிகம்.

— ரவீந்திரநாத தாகூர்

''எதுக்கு அதெல்லாம் இப்போ? இங்கே வந்த புதிசிலே உங்க அம்மாதான் எங்கம்மாவுக்குச் சிநேகிதம் ஆனது. ஜாகை வைச்ச ஆறு நாளைக்குப் பிறகு தான் நான் இங்கே வந்தேன். அப்போ எங்க அக்காவின் கைக் குழந்தைக்கு உடம்பு சரியில்லாமல் இசிவுமாதிரி இழுத்தது. உங்க அம்மா வேப்பங் கொழுந்தைப் பறித்து அரைத்துப் பத்துப் போட்டால் தேவலைன்னு சொன்னாராம். ஒரு நாள் விடியற்காலையிலே குழந்தைக்கு அதிகமாக இருந்தப்போ நானே தைரியமாய் வந்து கொழுந்து பறிச்சேன். இந்த 'பாத்ரூமிலே' நிழல் மாதிரி ஓர் உருவம் தெரிஞ்சுது. பயமாயிருந்தது. அவசர அவசரமாகப் பறிச்சுண்டு ஓடிப் போயிட்டேன். அவ்வளவு தான் ! அன்றைக்குப் படுத்தவள்தான் ! அப்புறமா மந்திரவாதி வந்து மந்திரிச்சு மூலைகை, மருந்தெல்லாம் காயவிட்டு குணமாச்சு.''

வேப்பமரத்து மோகினி ! ஆம், அதைப் பற்றி நான் கல்யாணியிடம் சொல்லவில்லை. 'நான்தான் பாத்ரூமில் நின்றது. உன்னைப் பார்த்து நான் பயந்தேன்; என்னைப் பார்த்து நீ பயந்தாய்' என்று சொல்ல அந்தச் சமயத்தில் என் நா மறுத்தது.

ஆனால் ''அட பயந்தாங் கொள்ளியே, இந்தா'' என்று என் வாய் சொல்ல, என் கை உப்புமாவில் ஒரு பிடியை அவள் வாயருகில் கொண்டு சென்றது. வேப்ப மரத்து மோகினி மந்தகாசம் புரிந்தாள் !

துயர்

☆

ஆற்றின் நீர்மிகையில்
ஆடிக் குளித்திட்டு
அரவக் கேலியிலே
ஆயிரம் மொழிபேசி,

காற்றின் வசப்பட்டுக்
கரையில் விளையாட,
"காலம் பறந்த" தெனக்
கூறக் கேட்டவுடன்,

வீட்டை நோக்கியொரு
வேக நடையிட்டு
வேலை மிகச் செய்யும்
தாயின் முகங்கண்டு

சீற்றம் தணித்து விட
நற்சொல் கூறியவள்
மாற்றம் கொளச் செய்யும்
அந்நாள் காண்பேனோ?

வாய்த்த வரன்வீடு
வடக்கே பட்டணமாம்
வாழ்க்கை கொள்ளற்கு
மறுவீ டுற்றக்கால்,

காய்த்துக் கனிகுலுங்கும்
கொல்லை மாமரமும்
கமழும் மணம் வீசும்
முல்லைப் பசுங் கொடியும்,

மேய்ந்து வீடேகும்
எங்கள் குணப் பசுவும்,
கன்றைக் கண்டவது
கறக்கும் குடப் பாலும்

தோய்த்த நறுந் தயிரும்
திரண்ட மணநெய்யும்
கொழிக்கும் என்னகத்தை
எந்நாள் காண்பேனோ?

முன்னர் கண்டறியா
மனிதர் ஒருவருடன்
தன்னைப் பிணைப்பித்து
வாழத் தொடங்கிடு முன்,

அன்னை சுற்றமெலாம்
மறக்க முயலுமொரு
பெண்ணின் பெருந்துயரைப்
பெண்ணே யறிந்திடுவாள்!

— ஸ்ரீ. வேணுகோபாலன்

வே. [illegible]

அந்திவானச் செம்மை மெல்ல மங்கிய நேரம் அது. தென்றல் இலேசாக வீசிக் கொண்டிருந்தது. சிறு சிறு அன்னப் படகுகளென வானத்தில் மேக ராசிகள் மிதந்து சென்றன.

ராஜக் கிரகத்திற்கே பெருமை அளிக்கக் கூடியது அந்தக் கிரிதர கூட மலை. பிம்பிசார மன்னனின் பெருமை உயர்ந்து பரவ நின்றது அது.

கிரிதரகூட மலையின் இந்தச் சிறந்த ராஜ சேவைக்குப் பிரதியாகத்தானோ என்னவோ பிம்பிசார மன்னன் அதன் பெயர் அழியாது நிலவும் ஒரு காரியம் செய்தான். தேவநந்த பிக்ஷு தன் வாழ்வின் அஸ்தமன காலத்திலே கிரிதரகூட மலையின் சாரலில் ஆசிரமம் அமைத்ததற்குப் பிம்பிசார மன்னனே காரணமாவான்.

....சன்னியாசியாக வந்த சிற்பி பிக்ஷுவின் பாதத்தில் வீழ்ந்தான்; பாசம் துறந்த பிக்ஷு சிலையானார்....

மலைவாயில் விழவிருக்கும் கதிரவனை நோக்கிய வண்ணம் மோனத்திருந்தார் தேவநந்தர். பிறகு எழுந்து நடக்கலானார். ஆசிரமத்தை நெருங்கி வந்தபோது அவர் வதனத்தில் ஒரு ஒளி ரேகை மின்னி மறைந்தது.

யாரோ ஒருவர் திடீரென தேவநந்தரின் பாதங்களில் விழுந்து கண்ணீர் வடிக்கத் தொடங்கிவிட்டார். இதைக் கண்டு ஆசிரமத்தில் தவம் செய்யும் பல இளம் சாதுக்களும் சூழ்ந்தனர்.

தன் இதயத்தைச் சூழ்ந்த மாசு முழுவதும் நெக்குருகிக் கண்ணீர் வழியே வெளியேறி, தேவநந்தரின் பாதங்களில் விரவி நசித்துப் போகட்டும் என்று நினைத்தாரோ அந்த அதிதி!

தேவநந்தர் அங்கேயே பத்மாசனமிட்டு அமர்ந்தார். அதிதியும் முன்னே உட்கார்ந்தார்.

"அப்பனே, நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?"

"தேவரே நான் ஒரு சிற்பி. சாவகத் தீவிலிருந்து வருகிறேன். துறவு பூணவேண்டுமென்ற ஆர்வத்துடன் தங்களைத் தேடி வந்தேன்."

"உன் பூர்வாசிரமம்?"

"தேவரே, எனது பூர்வாசிரமப் பெயர்,

197211

பாரவி. 'சிற்பி பாரவி' என்றால் தென் குமரிப்பிராந்தியத்திலே பலருக்குத் தெரியும். தென்னாட்டின் முடிவேந்தர் பலரும் என்னை அறிவர். என்னை எப்போதும் அவர்கள் தம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய அபூர்வ சிற்பப் பொருள்கள் அவர் வசமுள்ளன. ஆகவே இந்த உடல் இவ்வாசிரமச் சாரலின் மண்குழியிலே நசித்துவிட்டாலும் சிற்பி பாரவியின் பெயர் நிலைத்து நிற்கும்....''

அந்தி வானத்துச்செம்மை திடீரென மறைந்து கரு நீலம் படர்ந்ததால் ஆசிரமக் குடிசையுள் இருள் சூழ்ந்து வந்தது. அங்கு வீற்றிருந்த சிஷ்டர்களுள் ஒருவரைக் குறிப்பாக நோக்கினார் குரு. அதை உணர்ந்த அவன் எழுந்து சென்றான். ஆசிரமத்தின் ஒரு மூலையில் இலேசாகப் புகைந்து கொண்டிருந்த அக்கினி குண்டத்தைக் கிளறிவிட்டு உலர்ந்த சமித்துக்களைப் பரப்பினான். நெய் வார்த்துத் திரியிட்ட நந்தா விளக்கை ஏற்றி வைத்து வந்து அமர்ந்தான்.

''பாரவி!....மேலே சொல்!''

''ஆமாம்!.... நிலைத்து நிற்கும் என்றல்லவா சொன்னேன்! ஆனால் அதை எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியும்? உலகில் நிலையான வஸ்துக்கள் எவ்வளவோ அழிந்து போகின்

றன. குமரிக்குத் தெற்கே நிலவிய தமிழ் வளர்த்த நல்லுலகம் கடலுக் கிரையாகி விட்டதே! எத்தனைச் சிற்பிகள், ஓவியர், புலவர் சிருஷ்டித்த கலைப் பொருள்கள், காவியக் கருவூலங்கள் கடலுக் கிரையாகி விட்டன!

"ஆம், தேவரே, ஆம்!.... எல்லாம் அநித்தியம் என்ற ஞானம் வருவதற்கு இவ்வளவு நாட்கள் ஆயின. இது முன்னமே வந்திருந்தால் இந்தக் கைகளால் உளி பிடித்து இவ்வளவு நாட்களை வீணாக்கி யிருக்க மாட்டேன்.

"ஆ!... என் இவ்விரு கரங்களால் ஒப்பு, உவமை யற்று உருவாக்கிய ஜீவ சிற்பங்கள்தான் எத்தனை! கேரள மன்னன் அவ்வப்போது நான் விரும்பும் தந்த ராசியை எனக்கு அளித்து உதவுவான். நானும் அதற்குப் பிரதியாக வருஷம் ஒரு அரிய சிற்பத்தை அவனுக்கு அளித்து மகிழ்வேன்.

"என் கண்கள் நீண்ட நாட்களாகத் தந்தத்தில் கடைந்தெடுக்கும் அழகுள்ள பெண் ஒருத்தி உண்டோ எனத் தேடித்திரிந்தன.

"தேவரே, மன்னரது சினத்திற்குக் கலைஞர் இலக்காவது எப்போதும் நிகழ்ந்து வரும் காரியமாக இருக்கிறது. மலர்ச் செடிகளுக்குக் கண்ணும் காதும் இருந்தால் தன்னுடைய

விருப்பத்திற்குகந்த மலரை மலர்விக்க வேண்டும் என்று அரசன் அவற்றுக்கும் கட்டளை இடக் கூடு மல்லவா?

"ஆனால் காதும் கண்ணும் அத்துடன் தனக்கே தனக்கென மன

மும் உள்ள கலைஞன்தான் துர்பாக்கியசாலி!

"ஒரு நாள்... ஆம்!.... அன்று விஜய தசமி! கேரள மன்னன் என்னைத் தன் மனைக்கு அழைத்தான். வெண்தாமரை மலரமர்ந்த கலைவாணி சிற்பத்தை முழு உருவில் முதல் நாள்தான் முடித்திருந்தேன். அதை முடித்தேன் என்ருலும் எனக்குப் போதிய திருப்தி இல்லை. இன்னும் ஏதோ சிறு சிறு திருத்தங்களைச் செயய வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. இருந்தும் அரசன் நிர்ப்பந்திக்கவே சிலையை அரண்மனைக்கு அனுப்பிவிட்டேன்; அரசன் அவசரத்தைக் குறித்துச் சில சுடு சொற்களை என்னுல் சொல்லாமல் இருக்கக் கூடவில்லை!

"முப்பழ வகையும் நவதானியங்களும் கரும் பொன் எனப்படும் மிளகும் விளையும் நாடு எங்களுடையது. தென்னையும் கமுகும் அக்காவும் தங்கையும் போல் தழுவி வளர்ந்திருக்கும் தோப்புக்களிலே, மிளகுக் கொடி படர்ந்தோடும் அழகைப் பார்த்துக் கொண்டே நாட்களைக் கழித்து விடலாம். அங்கு நிலவிய அமைதிதான் என் கைகளுக்குத் தெம்பைக் கொடுத்தது.

"இச் சூழ்நிலையிலே உருவான கலைவாணியின் சிலையைப் பெற்ற அரசன் விஜய தசமித் திருவிழாவைக் கொண்டாட எவினுன்; கேரள மன்னர் திருவிழாக்களிலே விஜயதசமியே அதி முக்கியமானது.

"விழாவுக்கென அரசர் என்னை அழைப்பார்; அப்போது சிலையின் குறைகளைச் சீர் செய்யலாம் என்று இருந்தேன். சினத்தின் மிகுதியால் ஏவலாளரிடம் சிலையைக்கொடுத்தனுப்பிவிட்டபோதிலும் என் நினைவு முழுவதும் அதன் மீதே இருந்தது.

"ஏவலாளர் சிலை எடுத்துச் செல்லுகையில் என்னையும் உடன் அழைத்தனர்; அது அரசர் கட்டளை என்றும் சொல்லினர். ஆனுல் என் மனம் அப்போது இருந்த நிலையில் 'எனக்கு உடல் நலமில்லை; பின்னர் வருகிறேன்!' என்று மழுப்பி அனுப்பிவிட்டேன்.

"எனக்கு உடல் நலமில்லை என்று கேள்வியுற்றும் மன்னர் என்னை அழைக்கப் பல்லக்கு அனுப்பக் கூடும் என்று நான் எதிர்நோக்கினேன். நான் முன்பு ஒரு முறை நோய்வாய்ப்பட்டபொழுது அரசர் பல்லக்கு அனுப்புவித்து அரண்மனை வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்வித்தார்.

"என் சுடு சொற்கள் அவருள் சினத்தை எழுப்பியிருக்க வேண்டும்! ஆகவேதான் என் நோயையோ என் வரவையோ குறித்து அவர் அக்கறை காட்டவில்லை! சிலையை என் மனக்கண் முன்னேயே இருக்க வைத்து, படுத்து ஓய்வெடுத்துக் கொண்டேன் நான்.

"அன்று விஜயதசமி. உஷையின் வரவுக்கு இரு நாழிகை இருக்கும்பொழுது மன்னர் மனையிலிருந்து ஏவலாளர் வந்தனர். அவர்களுடன் பல்லக்கும் வந்தது. எதிர்பாராத இந்த வரவேற்பு என்னைத் திகைக்க வைத்தது.

"துயிலுணர்ந்த நான் தலைமுழுகி நல்லுடை தரித்துப் புறப்பட்டேன். நான் எவ்வளவு துரிதமாகக் கிளம்பிய போதிலும் சற்றே நேரம் கடந்து விட்டது. நான் மன்னர் மனையை அணுகும் சமயம் உதயமாகிக் கொண்டிருந்தது.

"மன்னன் தன் பூசையை முடித்து விட்டதாகக் கேள்வியுற்றேன்.

"சிவிகையுள் இருந்த நான் சிந்தித்தேன். என்னை மக்கள் முன்னிலையில் அவமதிக்கவா மன்னன் அழைத்தான்? பூசை நேரத்தை முதல் நாளே எனக்கு அறிவித்திருந்தால் நான் நேரத்தில் வந்திருக்க மாட்டேனே?

"திருப்புங்கள் பல்லக்கை!... பூசை நேரம் கடந்த பின் அரண்

மனையிலே எனக்கென்ன வேலை? என்னை என் குடிசையுள் விட்டுச் செல்லுங்கள்!' என்றேன் பணியாட்களிடம்.

''என்னை என் குடிசையுள் இறக்கி விட்டுத் திரும்பிய ஏவலாளர் அரசரிடம் என்ன புனைமொழிகள் பகன்றனரோ தெரியவில்லை!

''நான் மன்னர் குறித்த நாட்களுக்குள் சிலையை முடிக்காதது குற்றம். பிறகு நான் நேரில் ஏவலாளருடன் சென்று சிலையை மன்னவர் வசம் சேர்ப்பிக்காதது மற்றொரு குற்றம்!

''புதிய, கலைவாணியின் சிலை நிறுவி, விஜய தசமி அன்று கதிரெழுகடிகைக்குள் அரசன் விசேஷ பூசை செய்ய விருக்கிறான் என முரசம் கொட்டினார்களாம்! இம்முரசொலி என் செவிவரை எட்டவில்லை! இது வேறொரு குற்றம்!

''விதி என்ற ஒரு அதீத சக்தி தன்னுடைய செயலைத் தொடங்கி விட்டது, தேவரே! விதி என்பதில் இப்போது எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டாகி விட்டது. ஏனென்றால் அதன் கூரான நகங்களில் சிக்குண்டு, திக்கு முக்காடி, ஓரளவு கடைசியில் விடுபட்டுத் தங்கள் முன் வந்துள்ளேன். தங்களை அரச போகங்களினின்றும் விரட்டி யனுப்பியது அந்த விதி என்னும் அபார சக்திதானே!

''விஜயதசமி யன்று பிற்பகல் நேரத்தில் சற்றுத் துயின்று எழுந்து, தந்தமொன்றை சீர்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில் அரசரது ஏவலன் ஒருவன் வந்து அரசரது முத்திரை பொறித்த ஒரு ஓலைச் சுருளைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

''நான் அந்த ஓலைச் சுருளை வைத்துக் கொண்டு திண்டாடினேன். சிற்பக் கலையில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்த எனக்குப் படிக்கக் கூடத் தெரியாது.

''ஆகவே ஓலையில் குறித்துள்ள அரசரது கட்டளை என்னவோ என நான் பதறிப் போனேன். எனது பதட்டத்தைக் கண்ட வயதான என் தாய் பெரும் பீதிக்குள்ளாகிக் கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டாள்.

''ஓலையும் கையுமாக நான் குடிலை விட்டு ஓடினேன், கிராமக் கணக்கரிடம். மனத்துள் ஓலையைப் படித்த அவர் பிரமித்து விட்டார். கலங்கிய விழிகளுடன் என்னை நோக்கி 'என்ன இது? பாரவி சிற்பியாரே, அரச நிந்தனைக்குரிய என்ன காரியத்தைச் செய்தீர்? அரசர் உம்மை நாடு கடத்தியுள்ளாரே? அவரது அரண்மனை சென்று அரசரை அவமதித்ததற்குப் பிரதியாக மன்னிப்பைப் பெறுவதுடன், உமது சிலைக்கான சம்மானத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுமாம். இல்லையேல் ஒரு திங்களுள் இச் சேர நாட்டை விட்டு நீங்கள் அகல வேண்டுமாம்!' என்று சொன்னார்.

''அதன் பிறகு நான் அரசரிடம் சென்று மன்னிப்பைக் கோர விரும்பவில்லை; சம்மானம் பெற்று வரவும் எனக்கு அவசியம் இருக்கவில்லை.

''இந்நிலையில் சாவகத் தீவிற்குக் கப்பல் ஒன்று புறப்படுவதாகக் கேள்வியுற்றேன். மிளகு ஏற்றிச் சென்ற அந்த வியாபாரக் கப்பலில் என் வசமிருந்த சில தந்த ராசிகளையும் ஏற்றிக் கொண்டு என் சிற்பக் கருவிகளுடன் புறப்பட்டு விட்டேன்.

''கப்பலிலிருந்து வானத்தை நோக்கும்போது சுடலைப் பொடி பூசிய நீல கண்டனின் நினைவு எனக்கு உண்டாயிற்று. விண்ணையும் கடலையும் கவ்விக் கொண்டு இருள் சூழ்ந்த இரவுக் காலத்திலே, விண்மீன்கள் தெய்வ உண்மைகளை என் இதய நாளங்களிலே புகுத்தி விட்டன. என் கர்வமெல்லாம் தலை குனிந்ததைப் போலிருந்தது அப்போது.

''கப்பல் சாவகத் தீவை வந்தடைந்ததும் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக் கரை சேர்ந்தேன். சாவக மன்னனது அரண்மனைக் கலா மண்டபத்திலே, என்னுடைய கற்பனையிலே பதிந்து விட்ட ஆனந்த நடனத் திருவுருவத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கி விட்டேன்.

''சாவக மன்னன் சிறந்த கலா ரசிகன். எனக்கு வேண்டிய சௌகரியங்கள் அனைத்தும் செய்து கொடுத்தான். ஜீவனற்றுக் கிடந்த மண்ணிலே வித்து வெடித்து முளை கீறிக் கிளம்பி வளர்வதைப் போலே, தந்த ராசியிலே ஜீவத் துடிப்புடன் சிலை உருவத்தைக் காணக் காண மன்னன் பேருவகை பூண்டான். தானே பழுத்து உதிரும் கனியின் சுவையை உணர்ந்தவன் போலச் சிலையின் சிருஷ்டியினுடைய பூர்த்திக்கு அவன் காத்திருந்தான்.

''என் சிலை முழுமை பெற்றது. என்னுடைய கற்பனையிலே கண்ட அதே உருவம்! தில்லையிலே, பத்மாகாசனத்திலே நடமாடும் ஆனந்த நடனத் திருக்கோலம்!

''ஏனோ அதன் பிறகு என் கைகள் உளியையும் தந்த ராசிகளையும் தொட மறுத்து விட்டன! என்னையும் இவ்வுலகையும் அண்ட பிரம்மாண்ட கோளங்களையும் சிருஷ்டிக்கும் அந்தப் பெரிய சிற்பியைக் காண வேண்டும், அவனுடன் இரண்டறக் கலக்க வேண்டும் எனப் புறப்பட்டேன்.

''இந்த உடம்பு எங்கு எங்கோ அலைந்து இப்போது உங்கள் ஆசிரமம் வந்துள்ளது!''

தேவ நந்தர் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டுத் தன் கண்களைச் சற்றே மூடினார். 'உஸ்ஸ்....' என்ற சப்தத்துடன் ஆசிரமத்துள் நுழைந்த வாடைக்காற்று நெய் விளக்கை சற்றே அலைக்கழித்தது.

பிக்ஷு தேவநந்தர் சிற்பி பாரவியை உற்று நோக்கினார்; சிற்பியும் பிக்ஷுவை உற்று நோக்கினார். வாழ்க்கை இனியும் தனக்குத் தேவையில்லை என்ற நிலை பிக்ஷுவுக்கு ஏற்பட்டிருந்ததைப் போலவே, சிற்பி பாரவிக்கும் ஏற்பட்டிருந்ததை அவர் நன்கு உணர்ந்தார். நெய் விளக்கின் ஒளியும் அகிற் புகையும் இரண்டறக் கலந்தன. சிற்பியை ஆசிரமத்துக்குள் அழைத்துச் சென்றார் தேவநந்தர். இருவர் மனங்களுக்கும் ஒரே கதவு அமைந்தது.

அழகுக்கு அழகு செய்யும்

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும் பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள், வாசனைத் திரவியங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அழகுள்ள 2 சைஸுகளுள்ள டப்பிகளில் கிடைக்கும்.
உங்கள் வியாபாரிகளிடம் விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், மதராஸ்-7.

When ASTHMA attack is imminent use

MULTIMIX

Indo-French Pharmaceutical Co.,

P. B. No. 1542. MADRAS-1.

ஏ. ஸி. ஸி.

"நீலகிரி" பிராண்டு

போர்ட்லண்டு சிமெண்டு

பிரிட்டிஷ் ஸ்டேன்டர்டு தரத்தைவிட சிறந்தது

கீழ்கண்ட எங்கள் டிபோக்களில் கிடைக்கும்

ராயப்பேட்டை : சிமெண்டு கான்கிரீட் ஒர்க்ஸ்,
11-A, வெஸ்ட்காட் ரோடு.

திருவல்லிக்கேணி : 131, பைகிராப்ட்ஸ் ரோடு.
283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு.
173, பார்பர்ஸ் பிரிட்ஜ் ரோடு.

மயிலாப்பூர் : 14, கச்சேரி ரோடு.

புதுப்பேட்டை : 73, ஹாரிஸ் ரோடு.

பெரியமெட் : "ஜயாமான்ஷன்" பூந்தமல்லி ஹைரோடு.

சூளை : 139, சூளை ஹைரோடு.
40, காலத்திய முதலி தெரு, புதிய மார்கட்.

புரசவாக்கம் : 139/2 புரசவாக்கம் ஹைரோடு.

பார்க் டவுன் : 20-B, வெங்கடாசல முதலி தெரு, (அய்யா பிள்ளை தெரு)

வண்ணாரபேட்டை : 105, ஹைரோடு திருவொற்றியூர்.

கீழ்க்கண்ட வெளியூர் டிப்போக்களிலும் கிடைக்கும்.

ஆற்காடு (வ. ஆ. ஜில்லா) "கஸ்தூரி பில்டிங்ஸ்"

காஞ்சீபுரம் : (செங்கல்பட்டு ஜில்லா) 99, ராஜா தெரு.

15, செம்புதாஸ் தெருவிலுள்ள எங்கள் ஆபீஸிலும் கிடைக்கும்

எம். குப்புஸ்வாமி நாய்க்கர்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

போன் : 2489.

மனப்புயல்

யோகி சுத்தானந்த பாரதியார்

முன் கதைச் சுருக்கம்

சிவகங்கைச் சந்தை; சிறுமி **வீராயி** வழி தவறி சந்தைக் கூட்டத்தில் சிக்கித் தாயைத் தேடி அழுகிறாள். **தேனீக்** கங்காணி, அவளை நயமாக ஏமாற்றித் தொண்டிக்குக் கொண்டுவந்து கப்பலேற்றுகிறான். கப்பலில் ஒப்பந்தக் கூலிகள் கண்டிக்குப் போகிறார்கள். கண்டித் தேயிலைத் தோட்டத்தில் ஏராளமான தமிழ்க் கூலிகள் வேலை செய்கிறார்கள். அவர்களைக் கங்காணிகள் ஆட்டி வைக்கிறார்கள். தேனீக் கங்காணியிடம் பல கூலிகள் வேலை பார்க்கிறார்கள் — எல்லாரும் அவன் சுயேச்சாதிகாரத்திற்கு அடிமைகளே.

அவருள் **முத்தம்மாள், நாகப்பன்** என்ற இருவரும் தேனீயின் தொத்தடிமைகள். தேனீ வீராயியை முத்தம்மாளிடம் விடுகிறான். முத்தம்மாள் கொடிய விபசாரி; கல்நெஞ்சக் கள்ளி. அவள் வீராயியைக் கடுமையாக வேலை வாங்குகிறாள். அவள்கூலிப் பணத்தைக் கூடப் பறித்துக் கொள்ளுகிறாள். வீராயி தன் மனப் புயலை ஆண்டவனிடமே சொல்லி அழுகிறாள்.

வீராயி பதினெட்டு வயது யுவதி யாகிறாள். தேனி அவளை நாகப்பனுக்குக் கட்டிக் கொடுக்கிறான். நாகப்பன் மடாக்குடியன், நடத்தை கெட்ட மடையன். முத்தம்மாள் அவன் மனத்தைக் கெடுக்கிறாள். அவள் வீட்டைப் பொட்டலாக்குகிறாள். அவள் வலையிற் சிக்கிய நாகப்பன் வீராயியைக் கொடுமை செய்கிறான்.

துன்பக் கண்ணீரில் தத்தளிக்கும் அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன — ஒன்று **கருப்பாயி** — மற்றொன்று **முருகன்**. இந்தக் குழந்தைகள் தப்பு வழியில் பிறந்ததாக முத்தம்மாள் கட்டிவிடுகிறாள். நாகப்பன் கொடுமை அதிகமாகிறது: வீராயி துயரம் பொறுக்க மாட்டாமல் இரவில் தனியாகச் சென்று தன் குழந்தைகளை ஒரு மலைப் பாறையில் கடவுளே கதியாக விட்டு விட்டு நீர் வீழ்ச்சியில் விழப் போகிறாள்—அப்போது அருவியில் நாகப்பன் தத்தளிக்கும் குரல் கேட்கிறது. வீராயி ''முருகா'' என்று குதித்து விடுகிறாள். வீராயி போன பிறகு நாகப்பனுக்குப் புத்தி வந்தது. பணமெல்லாம் கரைந்ததால் முத்தம்மாளும் ''போடா கழுதை'' என்று துரத்துகிறாள். தான் மனைவி மக்களுக்குச் செய்த கொடுமைகளை எண்ணிப் புண்ணான நாகப்பன் அருவியில் குதித்து விடுகிறான். அவன் குரலைக் கேட்டே வீராயியும் குதிக்கிறாள். இருவரும் கால வெள்ளத்தில் மறைகிறார்கள்.

அனாதைக் குழந்தைகள் பாறையில் திகைத்து அழுகின்றன. கருப்பாயி முருகனைச் சுமந்து கொண்டு காட்டு வழியே நடந்து ஒரு ரப்பர் தோட்டத்திற்கு வருகிருள்; குழந்தைக்குப் பால் கேட்கிருள்; ரப்பர் பால் வடித்த **சீலையா** இரக்கங் கொண்டு குழந்தைகளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிருன். அவன் மனைவி பெரிய வாயாடி; அவள் கடுமையாகப் பேசி ஏசி, முடிவில் சிறிது கஞ்சி தருகிருள். அதைக் குடித்துவிட்டு, வீட்டுக் குழந்தைகளுடன் கருப்பாயி விளையாடும் போது தோட்டத் தலைவன் **தங்கவேலு** வருகிருன். அவன் இரண்டு அனாதைக் குழந்தைகளையும் எடுத்துச் சென்று தன் மனைவியிடம் தருகிருன். மக்களை இழந்த மனைவி அனாதைக் குழத்தைகளைத் தன் குழந்தைகளாகக் கருதி வளர்க்கிருள்.

தங்கவேலு உலகாயதன்; நவீன நாகரிகத்தில் மோகங் கொண்டவன். அவன் முருகனை **ஸிம்ஸன்** துரையிடம் விட்டு ஆங்கிலப் பண்பில் பழக்கினுன். ஸிம்ஸன் நாஸ்திகன், உலக சுகபோகி. அவன் மகன் கேம்பிரிட்ஜில் படித்தான். ஸிம்ஸன் முருகனையும் அங்கே மகனுடன் அனுப்பினுன். தங்கவேலு, முருகனைக் காப்பாற்ற ஆங்கில நாகரிகத்தில் பழக்கவே விரும்பினுன்.

கருப்பாயி **லக்ஷ்மி** என்ற பெயரால் வளர்ந்து பெரியவளானுள். அவளுக்கு ஆடல் பாடலில் புலமையிருந்தது. தங்கவேலு அவளை அடிக்கடி ஸினிமாவுக்கு அழைத்துச் சென்ருன். **மாயா தேவி** என்ற ஸினிமா நடிகை அவனைப் பலமாக வசீகரித்தாள். அவளைக் காணத் தங்கவேலு சென்னை சென்ருன்; லக்ஷ்மியும் உடன் சென்ருள்.

மாயா தேவி சிதம்பரம் பள்ளியாசிரியர் **கங்காதரனு**டைய மகள் **மீனுட்சியே**. கங்காதரன் பரமசாது, குடும்பத் தொல்லை தாங்காமல் ரமணரிஷியைத் தரிசித்துத் துறவியாகி மறைந்தான். அவன் மனைவி கனகாம்பாள் வெகுபாடுபட்டு சாப்பாட்டுக் கடை நடத்தி நான்கு குழந்தைகளை வளர்த்தாள். மூன்று ஆண் குழந்தைகள்; மீனுட்சி ஒரே பெண். அவள் வயதானதும் **சங்கீத பூஷணம் சங்கரனைக்** காதலித்தாள். அவனிடம் இசை பயின்ருள். கனகாம்பாளுக்கு இந்தக் காதல் பிடிக்கவில்லை; மகளைக் கண்டித்து வீட்டில் சிறை வைத்தாள். காதலை யார் சிறையிட முடியும்? ஆருத்ரா தரிசனத்தன்று இருவரும் தப்பி ரயிலேறிச் சென்னைக்குச் சென்று விட்டனர்.

சங்கீத பூஷணம், மீனுட்சியை 'மாயா தேவி' என்ற படத்தில் மாயாதேவியாக நடிக்க ஏற்பாடு செய்தான். மீனுட்சி வெகு இனிமையாகப் பாடினுள், ஆடினுள், நடித்தாள். அவள் பெயரே **மாயாதேவியாய்** விட்டது. படாதிபதிகள் அவள் நடிப்புக்குப் போட்டி போட்டனர். மாயாதேவி முதலில் ஆனந்தா ஸ்டுடியோவில் அமர்ந்தாள். **ஆனந்தாவை** ஜிந்தாலால் மோசம் செய்கிருன். ஆனந்தா மாயாவின் வலையிற் சிக்கித் திவாலாகிருன். அவன் சூழ்ச்சியால் **சங்கீத பூஷணம் சங்கரனும்** மனமுடைந்து மாயாவை வெறுத்து விரக்தனுகக் கிளம்புகிருன். ஜிந்தாலால் ஆனந்தா ஸ்டுடியோவையும் வாங்கித் தனது **லீலா ஸ்டுடியோவை** விசாலமாக்கினுன். இந்தச் சமயமே **தங்கவேலு** கண்டியிலிருந்து லக்ஷ்மியுடன் வந்து ஜிந்தாலாலுடன் பங்கு சேர்ந்து படவுலகில் புகுந்தான்.

சென்னையில் **ரங்கவிலாஸ்** ஒரு நட்சத்திர விலாசமாக விளங்கியது. அதிலேதான் மாயா தேவியும் தங்கவேலுவும் லக்ஷ்மியும் தங்கினர். மாயா வலையிற்பட்ட தங்கவேலு கை யிளைத்தும் பையிளைத்தும் மனமிளைத்தும் உலகின் வறுமையை வருந்தி நல்வழி தேடி ஓடிப்போனுன். மாயா ஜிந்தாலாலிடம் வசப்பட்டிருந்தாள்.

அவள் லக்ஷ்மியைத் தன் குழந்தை போல் பேணி ஆடல் பாடல் கற்பித்து அரங்கேற்றித் திரை ஒளியிலும் மின்னவைத்தாள். **'இன்பவுலகம்'** என்ற படத்தில் லக்ஷ்மி, ரம்பாவாக நடித்துப் புகழ் பெற்றாள். அது முதல் அவள் **ரம்பா** ஆனாள். படவுலகில் அவள் செல்வாக்கு ஓங்கியது. அவளுக்கும் ரங்க விலாஸ் முதலாளி ரங்காச்சாரி மகன் **ராஜனுக்**கும் காதல் ஏற்பட்டது.

இதற்குள் மாயா தேவிக்கு உடல் மெலிந்தது. குரல் கரகரத்துப் போனது. அழகும் குரலும் போன பிறகு படவுலகில் என்ன வேலை? அவள் தன் தமயனரிடம் சென்றாள். 'படியேறாதே விபசாரி' என்று அண்ணன் துரத்தினான்-உறவினர் வைதனர். பணத்தால் மானத்தை மாற்ற முடியவில்லை. அவமானம் பொறுக்காமல் மாயா தேவி எங்காவது ஓடிப்போய் உயிர் விடத் தீர்மானித்தாள். இந்தச் சமயமே ரங்காச்சாரி ஓட்டல் கடனுக்குள்ளானது. மகன் நடத்தை பிடிக்காமல் ரங்காச்சாரி தன் மனைவியுடன் திருப்பதிக்குச் சென்று விட்டார். பிறகுதான் பிள்ளைக்குப் புத்தி வந்தது. அவன் மாயா தேவியைச் சரண் புகுந்தான். மாயா **ரங்கவிலாஸை** வாங்கிக் கொண்டு கடனைத் தீர்த்தாள். ரம்பாவை ராஜன் கையில் பிடித்துக் கொடுத்தாள். ரங்க விலாஸை **ரம்பா விலாஸ**மாக்கி, ரம்பா பெயருக்கு எழுதி வைத்தாள். காசி யாத்திரை சென்றாள். இப்படி நமது கதாபாத்திரங்கள் அனைவரும் விதி வசத்தால் எங்கெங்கோ பிரிந்து எப்படியெப்படியோ மறைந்து போயினர். பிரிந்தவர் கூடுவாரோ — மனப் புயல் எப்படியடிக்கிற தென்று இனித் தெரியும்.

* * *

இப்போது 'நம் முன் மனப் புயலில்' சிக்கியிருப்பவர் மூவர். (1) ரம்பா; (2) ராஜம்; (3) ஜிந்தாலால். ஜிந்தாலால் பிடிக்கும் படத்திற்கு உயிர் ரம்பாதான். ரம்பாவை

'வாக்கிங் ஸ்டிக்' வைத்திருப்பவர்:- அந்தக் காலத்தில் நாலணாவை வைத்துக் கொண்டு இரண்டு வேளை சாப்பிட்டு விடலாம். ஆனால் இந்தக் காலத்தில்...

மற்றவர்:- உண்மை! நாலு ரூபாய் வைத்துக் கொண்டு ஒரு வேளை சாப்பிட்டாலும் வயிறு நிரம்பாதே!

ராஜம் உயிர் போல நேசிக்கிறான்; இடையே ஜிந்தாலால் வலை விரிக்கிறான். மனப்புயல் கிளம்புகிறது. ஒரு நாள் ரம்பா – ராஜம் மோட்டாரில் கடற்கரைக்குச் செல்கின்றனர். மரீனாவில் உல்லாசமாயிருந்து சிரித்து விளையாடிய போது தூற்றல் வந்தது; இருவரும் மோட்டாருக்கு வந்தனர். அங்கே ஒரு கிழவி படுத்திருந்தாள். ரம்பா மோட்டார் ஓட்டி **கந்தன்** மேல்சிறிவிழுந்தாள்; கிழவி மேல் பாய்ந்தாள். கிழவி பசிக்கு ஏதாவது கேட்டாள். ரம்பா அவளை வைது விரட்டினாள். கந்தன் ஓட்டலிலிருந்து பலகாரம் வாங்கி வந்து தந்தான். ரம்பாவுக்கு வெளியே சினம், உள்ளே குத்தல்.

கிழவியை மீண்டும் எரிந்து விழுந்துவிரட்டினாள். ''பழையகருப்பாயிக்கு இவ்வளவு வேண்டாமம்மா? நானும் உன்னைவிட அழகாயிருந்தேன். காலம் மாறியது; உன் காலமும் மாறும்'' என்ற கிழவி மரீனா பெஞ்சில் மற்றொரு கிழவனுடன் அமர்ந்தாள். மோட்டார் போகிறது. ''சிவப்பு கறுப்பியானாள். இந்தக்

கழுதைக்குப் புத்திவரும்" என்று கிழவி கிழவனுடன் சொன்னது காதில்பட்டது. ராஜம் "ரம்பா நீ பழைய கறுப்பாயி தானா" என்றொரு கேள்வியும் போட்டான் – உடனே மனப்புயல்! ரம்பா விலாசத்திற்கு மோட்டார் வந்து நின்றதுமே ரம்பா மூன்றாம் படிக்கு லிப்டில் சென்று டப்பென்று கதவைத் தாளிட்டு "யாரும் வரக்கூடாது" என்ற உத்தரவையும் வெளியே தொங்க விட்டாள்.

ராஜன் கீழேயிருந்து வியக்கிறான். அவன் மனதில் "ஐயையோ கறுப்பாயியா நமது காதலி" என்ற புயல் வீசுகிறது. மேலே ரம்பா மனதில் பழைய கறுப்பாயி கதை படலம்படலமாக ஓடுகிறது. பவுடர் அழகெல்லாம் கலைந்து, பட்டுச் சேலை கலைந்து அலங்கோலமாக ஒரு பழம் பாவாடையணிந்து ரம்பா விம்மி விம்மி யழுகிறாள்.

இதற்குள் ஜிந்தாலால் ஷூட்டிங்கிற்கு ரம்பாவைத் தேடுகிறான். மின்மினி அழைக்கிறது. புன்னகை – கில்லாடி ஆகிய இரண்டு படங்களில் ரம்பா தலைவியாக நடிக்க வேண்டும். அவளுக்காகவே எல்லாரும் காத்திருக்கிறார்கள். ராஜம் போனில் அழைக்கிறான்- 'ஒரு மணி நேரம் பொறு' என்று பதில் வருகிறது. ஜிந்தாலால் வந்தான்; போனில் அழைத்தான். அதே பதில்; ஒரு மணி நேரத்தில் இருபதாண்டுக் கதை ஓடுகிறது.

இரண்டாம் பாகம்

1. ரம்பாவின் சிந்தனை

அந்தி மாலையில் வசந்த மோகினி போலக் காட்சியளித்தாள் ரம்பா. அந்தப் பட்டும் பகட்டும், பொன்னும் வைரமும், மினுக்குச் சாயமும் ஒய்யார நடையும் திமிர் பிடித்த அதிகாரக் குரலும் பணம் பணம் என்று குலுங்கும் சிலம்பொலியும் எங்கே? இந்த மினுக்கழகில் எத்தனை மூடர் மனம் பறிகொடுத்து அலைந்தனர்?

இப்போது தனியே கறுப்பாயி மயமாயிருக்கிறாள் ரம்பா. எதிரே நிலைக்கண்ணாடி. அதில் முழுவுருவமும் படிந்துள்ளது. ரம்பா தன் 'மேக்கப்' அழகைக் களைந்தெறிந்து விட்டாள். ரோஜா நிறம் காட்டிய அவள் முகம், மாந்தளிர் நிறமாயிருக்கிறது. அதில் வாலிபப் பொலிவு துள்ளிக் குதிக்கிறது; எனினும் ஒரு விசனத் திரை அழகைக் கவர்ந்துவிட்டது. சிவத்த உதடுகள் வெண்கறுப்பாயின. மலர் விழிகள் பனித்து முத்து முத்தாகக் கண்ணீர் வடிகிறது.

பட்டுச் சரிகை அணிந்த உடல் ஒரு பழம் பாவாடையும் கிழிந்த கண்டாங்கியும் அணிந்துள்ளது. — இவையே பழைய கறுப்பாயி. மாநிற அழகி. இருகன்னங்களிலும் அதிர்ஷ்ட மச்சம் உண்டு. விசாலமான கண்கள்; கூரான மூக்கு, பூரித்த கன்னங்கள்; முல்லையரும்பு போன்ற பற்கள்— எல்லாம் பெண்ணழகைப் பொலியச் செய்தன. அப்படியே இருந்தாலும் அவள் தோற்றத்திற்கு அழகுலகில் மதிப்புண்டு. ஆனால் ரம்பாவின் அழகெங்கே, கருப்பாயி வடிவெங்கே! அந்தப் பூச்சுக்கும் இந்த இயற்கைக்கும் முற்றிலும் மாறுதலே. ஸினிமா ராணி, பாடகி, நடிகை, நாட்டியக்காரி என்றால் பவுடரும் பட்டுச் சேலையுமே கண் முன் வரும்.

ரம்பாவின் மனச்சாட்சி வேலை செய்யத் தொடங்கியது. அவள் நிலைக் கண்ணாடி முன் நீண்ட கனவு

காண்கிறாள். "கண்டித் தேயிலைத் தோட்டக் கூலி வீராயி மகளான நான், எப்படியெப்படியெல்லாம் மாறிப் போனேன்! ஆண்டவன் என்னை எங்கெல்லாம் கொண்டு சென்று, இந்த நிலையில் வைத்தான்! எனக்கு இன்று பெயர் புகழ் செல்வம், செல்வாக்கு, பல ஆண்களின் அன்பு, ராஜத்தின் காதல், ஜிந்தாலாலின் பிரியம் எல்லாம் உண்டு.

இதே மாதிரி என்னை வளர்த்த மாயா தேவிக்கும் இருந்தது. அவள் அழகு குலைந்ததும், குரல் கம்மியானதும் — எல்லாம் மாயமாயின. அவள் மனம் வெறுத்து உலகைத் துறந்து சென்றாள். அவளை உறவினர்கூட மதிக்கவில்லை. அதே மாதிரி என் அழகு குலையவும் நேரிடுமே. இன்று நான் போலி மினுக்கினால் பெறும் போலிப் புகழெல்லாம் 'பூ' என்று ஓடிப் போகுமே— கருப்பாயி கதை கேட்டாலே ரங்காச்சாரி மகன் என்ன செய்வாரோ? ஜிந்தாலால் என்ன நினைப்பாரோ? தன்னைப் பொறாமை விழிகளால் நோக்கும் நடிகைகள் தன் வீழ்ச்சிக்கு என்ன சூழ்ச்சி செய்யாரோ? புகழின் பாதை பூமெத்தையல்லவே. அதில் பொறாமை முட்களும் வஞ்சப் புதர்களும் சூழ்ச்சிப் பாம்புகளும் அடிக்கடிக் குறுக்கிடும்!

என்ன வாழ்வு — நடிகை வாழ்வு —நான் பல விழிகள் வியந்து பார்க்கும் நடி! என் மனதில் விழுவது விசன இடி! இவ்வளவு செல்வமும் நகை நட்டும் நான் பெற்ற பயன் என்ன? ராஜத்தை மணந்தேன் — ஜிந்தாலாலைப் பணிந்தேன். இவன் பக்கத்திலிருக்க வேண்டிய நான் அவன் பக்கத்தில் இருக்கிறேன்.

ஒருவனை மணந்து பத்தினியாக வாழ்வதே உலகில் உத்தமப் பெண்ணுக்கு அழகு. அந்தத் தூய வாழ்விற்கும் இந்த மாய வாழ்விற்கும் எவ்வளவு வேற்றுமை! அந்த இயற்கைக்கும் இந்தப் போலிச் சாய வாழ்வுக்கும் எவ்வளவு வேறுபாடு! எத்தனையோ கண்கள் என்னைப் பார்க்கின்றன — ஆனால் என்னை மனதாரக் காதலிப்பவன் யார்? நான் மனதார யாரையாவது காதலித்தேனா? என் காதலும் பச்சோந்தி போல நிறம் மாறும் மாயந்தானே? 'ராஜம் என் கணவர் என்றே நினைக்கிறேன். இனி அவன் மனம் எப்படி மாறுமோ. காதல் மணத்திலும் கலப்பு மணம் என்னவாகுமோ? ஆனால் ஒன்று மட்டும் உறுதி. நான் இனிப் பலர் கையைத் தொடப் போவதில்லை. என்னை மகள் போல நேசித்த மாயா தந்த மணாளனை உயிர்போல நேசிப்பேன்.

மறுபடி ரம்பா கண்ணாடியைப் பார்க்கிறாள்: 'பழைய கறுப்பாயி....' என்று தன்னை அழைத்த கிழவி யாராயிருக்கலாம்? அவளுடன் ஒரு கிழவன் இருந்தானே அவன் யார்? ஐயோ அந்தக் கிழவியிடம் அவ்வளவு கடுமையாக நடந்தேனே. எனக்குப் பணமிருந்தென்ன, பசித்தவர் முகம் பாராத பணத்தால் என்ன பயன்? நாளையே அந்தக் கிழவியைக் கண்டுபிடிப்பேன் — அவளை என்

தாயெனக் கருதிப் பணி செய்வேன்.

'ட்ரங் ட்ரங் ட்ரங்.......' — டெலிபோன்! ''ஹல்லோ, ஜிந்தாலால் சேட்ஜீயா? எனக்காகவா காத்திருக்கிறீர்கள், மன்னிக்கவும். இதோ ராஜனுடன் வருகிறேன்.... ஆம், அவருடனேதான் வருவேன். தங்கள் மோட்டார் தேவை யில்லை. என் காரிலேயே வந்து என் கடமையைச் செய்து திரும்புவேன் — அச்சா சேட்ஜீ— அபி ஆவும்....''

கறுப்பாயி தன் கந்தல் பாவாடையை ஒரு முத்த மிட்டாள் — இரண்டையும் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள். பழைய கந்தலான உம்மை வணங்குகிறேன். 'உம்மால் என் செல்வச் செருக்கும் கலைத் திமிரும் ஒழிந்தன — இனி நான் எளிமையும் பரோபகாரமுமாக வாழ்வேன் —' என்றெழுந்தாள் ரம்பா! 'சட்புட்டென்று முகத்தைக் சோப்பால் கழுவித் துடைத்தாள் — வாசனைத் தைலம் தடவிக் கொண்டாள். உயர்ந்த பட்டாலும் சரிகையாலும் கருப்பாயி உடலை மறைத்துப் புதிய ரம்பாவானாள். முகத்தில் மினுக்குச் சாயம் பூசினாள். உதட்டில் சிகப்பிட்டாள் — கை விரல்களில் கூழ் தடவிக் கொண்டாள். வைரத்தோடும் புல்லாக்கும், வைர மாலைகளும், அணிந்தாள். இடையில் வைர அட்டிகை பூட்டினாள். காலில் சிலம்பு கலீர் கலீர் என நடந்து 'லிப்டை' அழுத்தினாள். அது 'குர்' என்று வந்தது. ஜில் என்று ஏறினாள். 'டுர்' என்று லிப்டு இறங்கியது.

ராஜன் ஆவலாக ''என்ன ரம்பா, இவ்வளவு தாமதம்'' என்ருன். ''எல்லாம் நமது நேசத்திற்கே ஆதாயம் — ராஜம், இனி உயிர்போல வாழ்வோம்'' என்று கை குவித்தாள் ரம்பா. ராஜன் வியந்து புன்னகைத்தான். இருவரும் மோட்டார் ஏறி ஏதேதோ மனக்கனவுடன் நேராக லீலா ஸ்டுடியோ சென்றனர்.

லீலா ஸ்டுடியோ உலக நாடகமே உருக்கொண்ட நாடக வுலகம். அது ஜிந்தாலாலின் ஆயுள் சிருஷ்டி. பத்து வயதில் சென்னைக்கு ஓடிவந்த ஜிந்தாலால் இந்த அற்புதமான ஸ்டுடியோவை நிர்மாணித்தான்.

(தொடரும்)

நாட்டு நடப்பில்...

கற்பனைதான்;
கட்டுக் கதையல்ல.

"பத்திரிகை ஏஜண்டாக இருப்பது, பத்திரிகை ஆசிரியராக இருப்பதை விட எத்தனையோ விதத்தில் சிறந்தது" என்று ஒரு நாள் முருகேசம் சொன்னார். முருகேசம் ஒரு ஏஜண்டு.

"அதெப்படி?" என்று கேட்டார் அவர் நண்பர் நமசிவாயம்.

"பத்திரிகை இல்லாவிட்டால் ஆசிரியர் பிழைப்புத்தான் திணறும். ஏஜண்டு எப்படியாவது பிழைத்துக் கொள்வார். தகுந்த ஆதாரம் இல்லாவிட்டால், நான் இப்படிச் சொல்லவே மாட்டேன். என் அனுபவத்தைச் சொல்லுகிறேன்: கொஞ்சம் கேட்கிறீர்களா?" என்று சொல்லி, ஏஜண்டு முருகேசம் தம் அனுபவத்தைச் சொன்னார்.

'கலையகம்' மாத மிரு முறைப் பத்திரிகை வெளிவருவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே, பத்திரிகையின் சிறப்பைப் பற்றி அமோகமாக வர்ணித்து விளம்பரங்கள் வெளிவந்தன. பத்திரிகையின் இலக்கிய நயத்தைவிடவும், ஏஜண்டுகளுக்குத் தரப்படும் சலுகையைப்பற்றி விளம்பரங்களில் விஷயங்கள் பிரமாதப்பட்டன.

பத்திரிகையின் முதல் இதழ் உருவாகி வந்தது; தொடர்ந்து இரண்டாவது இதழும் உரிய காலத்தில் வெளிவந்தது; மூன்றாவது இதழ் சற்றுத் தாமதப்பட்டு வெளிவந்தது.

முருகேசம் 'கலையகத்'துக்கு ஏஜன்ஸி எடுத்திருந்தார். ஒரு நாள் பத்திரிகாலயத்தி லிருந்து வந்த கடிதம், "கலையகம் பிரதிகளை அதிகமாக விற்பனை செய்தால், பத்துப் பிரதிகளுக்கு ஒரு ரூபாய்ப் பரிசு வீதம் தனியே ஏஜண்டுகளுக்குத் தரப்படும்!" என்றது.

ஏஜண்டு யோசித்தார். என்னதான் முண்டினாலும் பிரதிகள் விற்பனையை அதிகப்படுத்த முடியாது. முருகேசம் பையனைக் கூப்பிட்டார். பத்துக் 'கலையகம்' பிரதிகளை எடுத்துவரச் சொன்னார். கூடவே தராசுத் தட்டையும் எடுத்து வரச் சொன்னார். அந்தப் பத்துப் பிரதிகளையும் நிறுத்தார். அன்றைய பேப்பர் விலைப்படி, ஒரு ரூபாய் நாலணா கிடைக்கும்! சபாஷ்! பத்துப் பிரதிகளுக்கு அவர்கள் கொடுக்கும் ஒரு ரூபாய்ப் பரிசு தவிர, விற்பனை ஆகாவிட்டாலும் நிலுவையில் வந்து ஆகக் கூடிய ஒரு ரூபாய் நாலணா வேறே! எப்படியும் பிரதிகளுக்குரிய பணம் அவர்களுக்குப் போய்விடும்!

முருகேசம் பத்துப் பத்துப் பிரதிகளாகக் 'கலையகத்துக்கு' அதிக ஆர்டர்கள் கொடுத்துக் கொண்டே வந்தார்! இதில் எத்தனைப் பேருக்கு மகிழ்வு! ஆசிரியருக்கு மகிழ்வு; பத்திரிகை அதிபருக்கு மகிழ்வு; ஏஜண்டுக்கும் மகிழ்வு!



"எப்படி நம்ம திறமை?" என்று கேட்டு நிறுத்தினார் முருகேசம். "ரொம்ப சரி. 'கலையகம்' இப்போது உயிரோடு..." – நண்பர்.

"எப்படி இருக்கும்? போய்விட்டது!" என்றார் முருகேசம்.

— 'பிரணதார்த்தி'

உலகப் பிரசித்திப் பெற்ற

பனாமா

பிளேடுகள்

ஒரு பிளேடு விலை ஒரு அணா.

இப்போது நீங்கள் உபயோகிக்கும் "பனாமா பிளேடுகள்"

இந்தியாவிலேயே தயாராகுபவை

பாரத்

பிளேடுகள்

5 அணாவுக்கு
10 பிளேடுகள்

★

"பாரத்" புளு ஸ்டீல்
பிளேடுகள் 10
விலை 8 அணா.

சோல் ஏஜண்ட் :-

லாலா கோபிகிருஷ்ண கோகுல்தாஸ்,

119, தங்கசாலைத் தெரு, சென்னை - 1.

போன் : 3275.

தந்தி : 'ஜாவர்'

ஒரு கவிஞருக்கு மரியாதை அளிப்பதென்றால் இப்படியல்லவா அளிக்க வேண்டும்! ''இனி பாரதியின் நூல்கள் பொது மக்களின் உபயோகத்திற்குத் தங்கு தடையின்றி வழங்கப்படும்'' — கல்வி அமைச்சர் அசெம்பளியில் இப்படிச் சொல்லிவிட்டார்.

தங்களுடைய சொந்த சௌகரியத்துக்காகவோ அல்லது தங்கள் மூலம் பொது மக்களுக்குப் பரவட்டுமே என்பதற்காகவோ கவிஞர் பாரதியின் நூல்கள் ஒரு சில தனிப்பட்டோரிடம் இருந்தது. அவற்றுக்கு விடுதலை வாங்கித் தரும் நோக்கத்துடன், அரசாங்கத்தார் பாரதியின் நூல்களுக்குத் தனிப்பட்டோரிடமிருந்து விடுதலை தந்து தங்கள் கோட்டைக்குள் அதைச் சிறைப்படுத்தினார்கள். இப்போது பாரதியின் நூல்களுக்குப் பொது மக்கள் பட்சத்தில் பூரண விடுதலை தரப்பட்டிருக்கிறது.

தனிப்பட்டோரிடம் இருந்த போதும் சரி, அரசாங்கத்தாரிடம் இருந்த போதும் சரி, பாரதியின் கவிதைகளை உபயோகப்படுத்துவதில் பொதுமக்கள் சற்றும் தளர்ந்ததில்லை. ஆதலால் தனிப்பட்டோர், அரசினர், பொதுமக்கள் யாவருக்கும் அபிமானியாக ஒரு கவிஞர் ஒளி வீசுகிறார் என்றால், அது பாரதிக்கு அளிக்கப்படும் நிகரற்ற மரியாதை என்பதில் சந்தேகமில்லை. இனி தனிப்பட்டோரும் அரசாங்கத்தாரும் பாரதியை மறந்தாலும், பொதுமக்கள் அவரை நிச்சயம் மறக்கமாட்டார்கள்.

★

பிரெஞ்சு இலக்கியம் வளமுள்ள இலக்கியம். பிரபல பிரெஞ்சு ஆசிரியர்களும் கவிஞர்களும் எழுதிய நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தே அநேகமொழி பெயர்ப்பாசிரியர்கள் ஆங்கில இலக்கியத்துக்கு நல்ல வளம் தந்திருக்கிறார்கள்.

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்க வேண்டும்' என்கிற ஆர்வத்தின்படி, இப்போது பிரெஞ்சு ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றிருக்கும் புதுவையில் நல்ல முறையில் ஒரு கலாசார ஸ்தாபனம் நிறுவப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதுதான். பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் சென்ற மூன்று நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கும் சரித்திரத் தொடர்பை இன்னும் கலாசார ரீதியில் தொடர்வதற்குத்தான் 'பிரெஞ்சு இன்ஸ்டிடியூட்' என்ற ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறது.

இதில் பிரெஞ்சு மொழி, பண்பாடு ஆகிய இரண்டையும் ஒரு பகுதி ஆராய்ந்து வளமுறச் செய்யும். இந்தியாவின் சரித்திரம், இலக்கியம், பண்பாடு பற்றிய பல ஆராய்ச்சிகளை பிரெஞ்சு ஆசிரியர்கள் இதற்கு முன் வெளியிட்டிருப்பதைப் போல இனியும் அந்தத் தொண்டு நீடித்து நடைபெற இன்னொரு பகுதி ஆராயும். இவையெல்லாம் மிகவும் வரவேற்கப்பட வேண்டிய அம்சங்கள்தான்.

சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் தேசபக்தர்களுக்குத் தஞ்சம் அளித்த பெருமை புதுச்சேரியைச் சேரும். நம் அருமைத் தமிழ்மொழியிலுள்ள செல்வங்களைப் பிரெஞ்சு பாஷையில் மொழி பெயர்த்து அளிக்கும் தொண்டுக்கு இந்த ஸ்தாபனம் உதவி செய்யுமானால், பாரதி, சுப்பிரமணிய சிவா, வ. வே. ஸு ஐயர், வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆகியோரின் தேசபக்தி நிறைந்த தமிழார்வத்துக்குப் பெருமை தந்ததைப் போலாகும்.

ஆலைக் கரும்பு

"தமிழ் இலக்கியத்தில் கடவுள் உணர்ச்சியை எடுத்து விட்டால் அது உயிரற்ற உடல் போலத் தான் இருக்கும்'' என்று இந் நூலின் ஆசிரியர் கூறுகிறார். எந்த ஒரு மொழிக்கும் 'கடவுள் உணர்வு' என்பது அழகு தரும் அடிப்படையாகவும் ஒரு பண்பாகவும் அமைந்துவிட்டது. ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அதில் அமைந்திருக்கும் காவியங்கள் எத்தனையோ ஆக்கம் தருகின்றன. காவிய நூல்கள் யாவற்றிலும் காவிய நாயகர்கள் அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்பு, முதன் முதலில், 'கடவுள் வணக்கமும்' 'அவையடக்கமும்' சிறப்பான இடங்கள் பெறுகின்றன.

சங்க காலத்தையும் அதை அடுத்தும் தமிழில் உதித்த காவியங்கள் யாவற்றிலும் இந்தச் சிறப்புக் காணக் கிடக்கிறது கண்கூடு. தம்முடைய 'ஆலைக் கரும்பு' முதலிய பத்தொன்பது கட்டுரைகளில், ஆசிரியர் இத்தகைய அழகிய பாடல்கள் சிலவற்றை இவ் வகையில் தாம் சுவைத்த தோடன்றி, வாசகர்களுக்கும் அளித்திருக்கிறார். கணபதி, கலைமகள், புத்தர் ஆகியவர்களைப் பற்றிய பாடல்களுக்கு விளக்கங்கள் தந்திருக்கிறார்.

'அம்பிகையின் திருமஞ்சனம்,' 'இயற்கையான அன்பு,' 'கலை மடந்தை' ஆகிய கட்டுரைகள் உள்ளத்தை உருக்குவதாக இருக்கின்றன. ஆழப் புதைந்து கிடக்கும் தத்துவங்களுக்கான எளிய விளக்கங்கள், வளரும் இலக்கியத்துக்கு மிகவும் தேவை. இந்தத் தேவையை இந் நூலின் மூலம் ஆசிரியர் செவ்வனே பூர்த்தி செய்திருக்கிறார்.

எழுதியவர்: கி. வா. ஜகந்நாதன்; வெளியீடு: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை 18. 124 பக்கங்கள். விலை ரூ. 1-6-0.

நல்ல புத்தகம் நவின்றது: **சிறுகதை இலக்கியம்**

"சிற்பம், ஓவியம், கவிதை ஆகிய எல்லாக் கலைகளுக்குமே சிஷ்ய பரம்பரை உண்டுதான். ஒரு சிற்பி தன்னுடைய கலையை அப்படியே கல்லில் பொதிந்து வைத்து விட்டுப் போகிறான். ஓவியன், தன் திறமைகளை எல்லாம் வர்ணங்களிலே கொட்டி வைத்து விட்டுப் போகிறான். ஒரு கவிஞன், தன்னுடைய ஆன்மாவையே ஏடுகளில் பொறித்து வைத்து விட்டுப் போகிறான்; சிஷ்ய பரம்பரையை மட்டுமே நம்பி, இவர்கள் உயிர் வாழ்வதில்லை. ஆனால் சங்கீதக்காரன் காரியம் அப்படியில்லை! காற்றோடு காற்றாகப் போய் விடுகிற அவசர அநித்தியம் அது! இதில் பரம்பரையை — சில சமயங்களில் அதன் விபரீதமான கோணல்களையும் — நம்பித்தான் அவன் வாழவேண்டும்! அதனாலே தான் நம்முடைய தொன்மையான சங்கீதத்துக்கு ஆதாரமான வடிவமே இல்லாது போய் விட்டது!''

—'சோமு' எழுதிய '**கேளாத கானம்**' சிறு கதைத் தொகுதியில்.

நல்ல புத்தகம் நவின்றது:
('ஞானோதயம்')

"கீழ்த் திசையில் உள்ளவர்கள் இந்த உலகில் தங்களுக்குக் கிடைத்துள்ள இடம், அல்லது முயற்சியினால் அடையச் சாத்தியமான இடத்தைவிட பரத்தில்—அடுத்த உலகில்—கிடைக்க வேண்டிய இடத்தைப் பற்றித்தான் அதிகமாக எண்ணுகிறார்கள். அங்கே எந்த மாதிரி இடம் கிடைக்க வேண்டும் என்பதை ஒரு லட்சியமாகக் கொண்டு சுதந்திரமாக வாழ முயலுகிறார்கள்."

—*பி. எஸ். ராமையா*

உவகை உள்ளம்
(கவிதைகள்)

பாரதியார், 'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்' இயற்கை அன்னை நேர்ப்பட வைத்திருப்பது மனிதனுடைய மனம் கவிதையுணர்வைப் பெறுவதற்காகத்தான் என்று தம்முடைய ஒருகவிதையில் கூறுகிறார். கவிஞர் சுவாமி மொராய்ஸ் இந்த உண்மையான கவிதை மனம் படைத்திருக்கிறார் என்பதை அவருடைய இக்கவிதைகள் நன்கு தெளிவுபடுத்துகின்றன. அதனால் தான்,

'சொல்லினில், மேலெழுந்த
உணர்ச்சியில் மிதந்து
சென்றேன்;
எல்லையில் அறிவே! வாழ்க்கை
இதுவென உணர்த்துவாயே'

என்று அவரால் இத்தனை அழகாகப் பாடியிருக்க முடிகிறது. எளிமையும் நயமும் கொண்ட இந்தக் கவிதைகளில் பலவற்றைக் குரல் விட்டுப் பாடவும் தகுதியாகச்செய்திருக்கிறார் கவிஞர்.

இயற்றியவர்: சுவாமி பிரான்சிஸ் மொராய்ஸ்; வெளியீடு: கஸ்தூரிப் பதிப்பகம், உறையூர், திருச்சிராப்பள்ளி. 89 பக்கங்கள். விலை ரூ. 1-8-0.

நிவேதனம்
(கவிதைகள்)

இது ஓர் நீண்ட காவியம். நவீன தமிழ் இலக்கியத்தில் இம்மாதிரியாக அத்தி பூத்தாற்போல வெளி வருகிற எந்த முயற்சியும் வரவேற்கப்பட வேண்டியதுதான். வசனத்தைப் போலல்ல கவிதை. கவிதை என்று எழுத வந்து விட்டால், ஆற்றொழுக்கான கற்பனையின்றிக் காரியம் ஒரு போதும் நடக்காது. இந்த 'நிவேதனத்தில்' கவிஞர் கலைவாணனின் கற்பனை அபாரமாக இருக்கிறது. இந்த நீண்ட கவிதைக்காக அவர் எடுத்துக் கொண்டிருக்கும் பொருள் எத்தகையதாக இருந்தாலும், உவமை நயங்களுடன் கற்பனை ததும்பத் தம்முடைய கோயிலைச் சிருஷ்டிக்க அவர் முற்பட்டிருப்பதால், இந்தக் கவிதைச் சோலைக்குள் புகுந்து ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் வர வேண்டும்.

இயற்றியவர்: 'கலைவாணன்'; கிடைக்குமிடம்: 107, பெரிய தெரு, சென்னை 5. 50 பக்கங்கள். விலை ரூ. 1-0-0.

அறிவுத் திரள்

உலகத்தில்மனிதனுடைய எண்ணங்கள் இன்றளவுக்கு உயர்ந்து இருக்கும் வளர்ச்சியைப் பெற்றதற்குக் காரணம் அவனடைந்த அறிவுச் செல்வம்தான். இந்த அறிவுச் செல்வத்துக்குக் காரணமான கவிகளும் புலவர்களும் அறிஞர்களும் பல்லோராயிருக்கிறார்கள். இவர்கள் விட்டுச் சென்றிருக்கும் அறிவுச் செல்வமான நூல்களும் எழுத்துக்களும் அகண்டாகாரமாயிருக்கின்றன. அவர்களுடைய மணிமொழிகளை ஆங்காங்கு துருவி எடுத்து, தொடர்பானதொரு வடிவில் 'அறிவுத்திரள்' என்ற இந்தப் புத்தகத்தின் மூலம் தருவது எளிதான காரியமில்லை.

தொகுத்தவர்: எஸ். குமரேசன்; கிடைக்குமிடம்: நேஷனல் புக் ஸ்டோர், 114, திண்டுக்கல் ரோடு, மதுரை. 211 பக்கங்கள்.

கறுப்புப் பூனை

வி. ஆர். பாலன்

காலை மணி எட்டு இருக்கும். ராஜா படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அறை பங்களாத் தோட்டத்தை ஒட்டி இருந்தது. திடீரென்று தோட்டத்தில் 'மியாவ் மியாவ்' என்னும் சப்தம் கேட்டது. ராஜா புத்தகத்தை அப்படியே மூடி வைத்து விட்டு ஜன்னல் வழியாகப் பங்களாத் தோட்டத்தைப் பார்த்தான். கறுப்பு நிற பூனைக்குட்டி ஒன்று தோட்டத்திலிருந்த குரோட்டன்ஸ் செடியின் அருகில் நின்றபடியே ஜன்னலைப் பார்த்து 'மியாவ்-மியாவ்' என்று கத்திக் கொண்டிருந்தது. பாவம்! அது பசியினால் அப்படிக் கத்துகிறதோ என்னவோ?

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மேஜை மீது வைத்த ராஜா அறைக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்தைநோக்கி ஓடினான். ராஜாவைக் கண்டதும் அந்தக் கறுப்புப் பூனைக் குட்டி பயந்த படியே குரோட்டன்ஸ் செடிக்குள்ளேயே பதுங்கியது. ஆனால் அப்போதும் 'மியாவ்-மியாவ்' என்றேதான் கத்திக் கொண்டிருந்தது. ராஜா மெல்ல குனிந்து அந்தப்பூனைகுட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான். அதனுடைய உடல் 'வெல்வெட்'டைப் போல வழுக்கி விழுந்து விடுமோ என்று எண்ணும் படியாக இருந்தது. ராஜா பூனைக் குட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான். பூனைக் குட்டியை எடுத்துக் கொண்டு அவன் உள்ளே நுழைவதை எதிர் வீட்டு அம்பிகா பார்த்து விட்டாள். பத்து வயது ஆன அம்பிகா ஐந்தாவது வகுப்பில் படிக்கிறாள்.

"டேய் ராஜா! ஏதுடா பூனை?" என்று கேட்டபடியே ராஜாவின் அறையை நோக்கி ஓடி வந்தாள். அம்பிகாவைக் கண்டாலே ராஜாவுக்குப் பிடிக்காது. அதுவும் நேற்று அவன் கணக்குப் போடாமல் போய் விட்டான். கணக்கு வாத்தியார் அவன் காதைத் திருகி ஒரு பீரியட் முழுவதும் பெஞ்சியில் நிற்க வைத்துவிட்டார். அம்பிகாவும் அவன் வகுப்பிலேயே



பாப்பா உமா

படித்து வந்தவள் இதை ராஜா அம்மாவிடம் சொல்லி விட்டாள். அம்மா அப்பாவிடம் சொல்ல அப்பா ராஜாவை அடித்து விட்டார். 'பயலே! இனிமேல் ஒழுங்காகப் பள்ளிக்கூட வேலையைக் கவனி! இல்லாவிட்டால் எங்கேயாவது ஹோட்டலில் காப்பி ஆற்றப் போ' என்று வேறே கூறிவிட்டார். அதனால் அம்பிகா மீது ராஜாவுக்கு அசாத்திய கோபம்!

அம்பிகா ஓடி வருவதைக் கண்டதும் ராஜா திடீரென்று அறைக் கதவை சாத்தி மூடினான். அதை கண்ட அவளுக்கு ஏமாற்றமாயிருந்தது. கண்களிலே நீர்திரையிட்டது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த ராஜா 'களுக்' கென்று சிரித்தான். அம்பிகா ஏமாற்றத்தோடு வீட்டுக்குச் சென்றாள்.

மணி பத்து. ராஜா குளித்துச் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டான். பூனைக் குட்டியை அறையிலேயே விட்டு விட்டு ஒரு கிண்ணம் நிறையப் பாலையும் வைத்தான். பூனைக்குட்டி பாலைக் குடித்து விட்டு' மியாவ்' என்று மெல்லக் கத்திக் கொண்டே கட்டில் அடியில் படுத்துக் கொண்டது. அன்று பள்ளியில் ராஜாவுக்குப் பாடத்தின் மேலேயே மனம் இல்லை. பூனைக் குட்டியின் மீது தான் அவன் முழுக் கவனமும் இருந்தது. நாலு மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதுமே நேராகப் பங்களாவுக்குச் சென்ற ராஜா

ஆசையுடன் அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலுக் கடியில் பூனைக்குட்டியைக் காணவில்லை. ஏமாற்றத்துடன் வீடு முழுவதும் தேடினன். எங்குமே காணவில்லை.

பாவம்! ராஜாவின் முகம் வாடி விட்டது. வாசலில் வந்து நின்று எதிர் வீட்டை நோக்கினன்.

எதிர் வீட்டு மாடியில் அம்பிகா நின்று கொண்டிருந்தாள். என்ன ஆச்சரியம்! அவள் கையிலே கறுப்புப் பூனைக்குட்டி இருந்தது.

ராஜாவைக் கண்ட அம்பிகா "ராஜா! இதோஉன்னுடையகறுப்புப் பூனை! நீ காலையிலே பாலை வைத்து விட்டு போனல்போதுமா? மத்தியானம்பூனைக்குட்டிபசி தாங்காமல் எங்க வீட்டுக்கு ஓடிவந்தது. பூனைக்குட்டிக்குஎங்கள் வீட்டுபால் வார்த்தேன். இந்தா உன் பூனைக்குட்டி!" — என்று சொன்னள். ஆகா! அம்பிகாவின் பெருந்தன்மையான குணம் என்ன!

கறுப்புப் பூனைக்குட்டி 'மியாவ்-மியாவ்' என்று கத்தியது.

தட்டப்பாவைக் கேளுங்கள்!

ஆர். கல்யாணம், மருதாலம்.

கேள்வி :- தட்டப்பா அவர்களே! 'திரை' போட்ட ஓர் எழுத்து வேகமாக ஓடுமா? சொல்லுங்கள் பார்க்கலாம்!

தட்டப்பா :- ஏன் தம்பி ஓடாது? கு'திரை' வேகமாக ஓடாமல் பின் வெகு மெதுவாகவா ஓடும்?

ஸி. கோபாலகிருஷ்ணன், போலகம்.

கே :- தட்டப்பா! இப்போது கால் தட்டி விழப் போகிறீர்கள்! ஆண்டவனுக்கு அடுத்தபடி உயர்ந்தது எது?

த :- ஆண்டவனுக்கு அடுத்தபடி உயர்ந்தது அம்மா ஆசையுடன் கொடுக்கும் முத்தம், தம்பி!

அம்பிகா, ரங்கூன்.

கே :- ஊசி முனையில் தவமிருக்கும் தட்டப்பா அவர்களே! உங்களை யார் தட்டி விட்டது?

த :- தங்கையே! ஒரு நாள் நடக்கும் போது பார்க்கில் 'புல்' தட்டி விட்டது. அது முதல் தட்டப்பா ஆனேன்!

எம். கே. தாயுமானவன், திருவள்ளூர்.

கே :- தட்டப்பா அவர்களே! எங்கும் நிறைந்தது எது? யாவற்றிலும் சிறந்தது எது?

த :- எங்கும் நிறைந்தது பொய்; யாவற்றிலும் சிறந்தது மெய்!

(நீங்களும் தட்டப்பாவை விசித்திரமாய்க் கேளுங்களேன்!)

பிரதிபலிப்புகள்

1. டாக்ஸியில்

சென்னைக்கு வெளியூர்ப் பிரமுகர் ஒருவர் வந்திருந்தார். வியாபார நிமித்தம் வந்தவர், அவசர வேலையாக டாக்ஸி ஒன்று அமர்த்திக்கொண்டார்.

சென்னையின் பிரதான வீதிகளில் ஜனத்திரளுக்கு நடுவில் கொஞ்சம் கூட வேகம் குறையாமல் பாய்ந்து சென்று கொண்டிருந்தது டாக்ஸி. முன் ஸீட்டில் டிரைவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த பிரமுகருக்குப் பயமாய்த்தான் இருந்தது.

எதிரே வந்த இன்னொரு 'பிளஷர் காரின்' டிரைவரைப் பற்றி டாக்ஸி டிரைவர் சொன்னார்:

"அந்தக் காரின் டிரைவர் வெளியூரிலிருந்து வந்திருப்பார் போலிருக்கிறது!"

"ஏனப்பா அப்படிச் சொல்லுகிறாய்?" என்று பிரமுகர் கேட்டார்.

"பின்னே பாருங்களேன்! பட்டணத்து வீதிகளில், எதிரே ஜனங்கள் வருகிறார்கள் என்ற நினைப்பே இல்லாமல் காரை அலட்சியமாக ஓட்டத் தெரியவில்லையே அவருக்கு!" என்றார் டாக்ஸி டிரைவர்.

2 ஹோட்டலில்

மூன்று ஸ்திரீகள் தனியே ஹோட்டலுக்குச் சாப்பிடச் சென்றார்கள். மேஜை மேல் சிற்றுண்டிப் பட்டியல் சீட்டு இருந்தது.

முதல் ஸ்திரீ அந்தச் சீட்டைக் கையில் எடுத்துக்கொண்டு, "மூக்குக் கண்ணாடி இல்லாமல் என்னால் படிக்க முடியாது" என்றாள்.

'எனக்குப் படிக்கும் போதுதான் மூக்குக் கண்ணாடி அவசியம்!' என்றாள் இரண்டாவது ஸ்திரீ.

மூன்றாவது ஸ்திரீயோ "கண்ணாடியை வீட்டில் மறந்து வைத்துவிட்டேன். அத்தனைப் பசி எனக்கு!" என்றாள்.

சிற்றுண்டிச் சீட்டை மேஜையின் மற்றொரு மூலைக்கு மெதுவாக நகர்த்தி விட்டார்கள் அவர்கள். உண்மை இது தான்: அந்த மூன்று பேருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது!

3. வீட்டில்

சுவரில் பெரிய கெடியாரம் மாட்டியிருக்கிறது. அறையில் உட்கார்ந்திருக்கும் இரு நபர்களின் கைகளிலும் 'ரிஸ்ட் வாட்சுகள்' இருக்கின்றன. மூன்றாது நபர் நுழைந்தார்.

"இப்போது மணி என்ன?" என்று கேட்டார்.

மற்ற இருவரும் தம் கைக்கெடியாரங்களை மட்டுமல்லாமல் சுவர்க் கடியாரத்தையும் பார்த்து விட்டே பதில் சொன்னார்கள்.

"நீங்கள் எப்போது சாப்பிடுவீர்கள்?"

"இன்னும் ஒரு மணி நேரத்தில்"

"சாப்பிடுவதற்கு எத்தனை நேரம் பிடிக்கும்?"

"பதினைந்து நிமிஷங்கள்."

அப்போது இருந்த மணியிலிருந்து சாப்பிடப் போகும் நேரத்தையும், சாப்பிட்டு முடியும் நேரத்தையும் கைக்கெடியாரம் கையிலிருந்தும் அவர்களால் சொல்ல முடியவில்லை. அந்த மூன்றாவது நபர் அறையை விட்டுச் செல்லும் போது "இப்போது மணி என்ன ஆகியிருக்கிறது?" என்று கேட்டார்.

மற்ற இருவரும் தம் கைக்கெடியாரங்களைப் பார்த்தார்கள்; சுவர்க் கெடியாரத்தையும் பார்த்தார்கள். அப்புறம் தான் மணி சொன்னார்கள்! கெடியாரம் வைத்திருக்கிறவர்கள் பாடெல்லாம் இப்படித்தான்!

இரு ஆண்டுகளின் அருமையான இலக்கிய
வளர்ச்சிக்கு உரைகல்லாக

உமா

ஆண்டு மலர் வெளிவருகிறது

இந்த மலரில் வரப் போகும் அம்சங்களைப்பற்றி ஒரு வார்த்தையில் சொல்ல விரும்புகிறோம். மலர் முழுவதும் இலக்கியத்தின் கஸ்தூரி மணம் கமழும்.

★ தமிழகத்தின் தனிக் குரல் **திரு. ம. பொ. சிவஞானம்**

★ சிறுகதைச் செல்வமும் 'கல்கி' ஆசிரியருமான **திரு. 'சோமு'**

★ தமிழிலக்கிய வளம் செறிந்த **திரு. கி. வா. ஜகந்நாதன்**

★ 'கம்பன் தமிழ்' அன்பர் பேராசிரியர் **அ. சீனிவாச ராகவன்**

★ இலக்கியத்தின் இளந் தென்றல் **திரு. ந. சஞ்சீவி**

★ **திரு. ஜி. உமாபதி, திரு. க. பஞ்சாபகேசன்**

ஆகியோரின் அருமையான கட்டுரைகளுடன்,

ஜீவனுள்ள தமிழ் எழுத வேண்டும் என்ற ஆர்வமுள்ள எழுத்தாளர்களான,

'ஆர்வி,' 'சுகி,' கே. ஆர். கௌசல்யா,
டி. ஆர். குருஸ்வாமி, டி. எஸ். கோதண்டராமன்
ஆர். சூடாமணி, நா. ராமச்சந்திரன்

ஆகியோரின் சுவையுள்ள சிறுகதைகள்—

தனியொரு 'கவியரங்கப் பகுதி' யில், கவிஞர்களான,

'சுரபி,' டி. வி. சுவாமிநாதன்

ஆகியோரின் அற்புதமான கவிதைகள்—

இவற்றுடனும் இன்னும் பல சுவையான அம்சங்களுடனும் **மே மாத 'உமா'** ஆண்டு மலராக வெளிவருகிறது. வாசகர்கள் தங்கள் பிரதிகளுக்கு முன்னமேயே ஏஜண்டுகளிடம் சொல்லி வைத்துவிட வேண்டுகிறோம்.

அதிக பக்கங்களுடன் விலை 4 அணா

பட உலகம்

விளம்பரப் படங்கள் வாழ்க !

விலைவாசிகள் ஏறியும் இறங்கியும் நிலையில்லாமல் இருக்கும் இந்தக்காலத்தில், வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லாரும் தத்தம் பொருள்களை எந்தப் புது மாதிரியான வகையில் விளம்பரம் செய்யலாம் என்ற முயற்சிகளில் ஈடுபடுவது சகஜமே. பத்திரிகைகள்தான் விளம்பரங்களுக்குச் சாதனம் என்ற நிலைமை போய், இப்போது திரைப்படம் மூலமாக விளம்பரம் செய்வது வரை விளம்பர யுகம் வளர்ந்து விட்டிருக்கிறது.

இப்போதெல்லாம் தியேட்டரில் முக்கியமான படம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்த விளம்பரப் படங்களைப் பார்க்கிறோம். சினிமாவை ஒரு பொழுது போக்குச் சாதனமாகக் கொண்டு 'எத்தனை அதிகமான துண்டுப் படங்களை எத்தனை அதிக நேரத்துக்குப் பார்க்கிறோமோ' அத்தனைக்கு இன்பம்' என்று எண்ணும் பொது மக்களின் சார்பில் இந்த விளம்பரப் படங்கள் வரவேற்கப்பட வேண்டியவைதாம்.

நம்முடைய தினசரித் தேவைகளை, அவசியப் பொருள்களைப் பற்றிய முக்கியத்துவத்தை வற்புறுத்தி, அதற்காகச் சூழ்நிலை அமைத்துச் சம்பவங்களை உண்டாக்கி விளம்பரப் படங்களைத் தயாரிக்கிறார்கள்.

ஆனால் ஒன்று. தமிழில் 'டப்பிங்' செய்யப்பட்டு வரும் இந்த விளம்பரப் படங்களில் நமக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காததொரு அம்சம் இருந்தே தீருகிறது. பல்லைக் கடித்துக்கொண்டு விளம்பரப் படங்களில் தமிழ் பேசப்படுகிறது. பேசப்படும் வார்த்தைகளுக்கும் பேசுகிறவர்களின் வாயசைவுகளுக்கும் துளியளவு கூடச் சம்பந்தமில்லாமலிருக்கிறது. செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டிய முறையில் இந்தப் படங்களின் மூலம் விளம்பரம் செய்பவர்கள் மறந்துவிடுவதாகத்தான் தோன்றுகிறது. இதற்கு முக்கிய காரணம் இந்தப் படங்கள் முதலில் ஹிந்தியில் தயாரிக்கப்பட்டு அப்புறம் அப்படியே தமிழில் 'டப்பிங்' செய்யப்படுகின்றன என்பதே.

எதற்காக இவ்வளவுக்கு இப்படங்களைப்பற்றி சொல்லவேண்டியிருக்கிறது என்றால், தமிழ்ப் படம் பார்க்கச் செல்பவர்களுக்கு முதல் முதலில் இந்தப் படங்களைப் பார்க்கும் போது, 'நமது இனிய தமிழ் மொழி இவர்கள் கையில் என்ன பாடு படுகிறது!' என்று தோன்றுவதால்தான்.

'ஆப்பீஸ் நேரம்!' என்று உரத்த குரலில் திடீரென்று ஒரு படம் ஆரம்பிக்கும்! அதற்கு அடுத்த பேச்சு தாழ்ந்த கதியில் இருக்கும். சுத்தமான வசனமா, வேற்று மொழி கலந்த வசனமா என்று நிர்ணயிக்க முடியாதபடி 'டப்பிங்' முறையும் இருக்கும். சின்னத் துண்டுப் படங்களில் இத்தகைய குறைகளைப் பாராட்ட முடியாதுதான்.

ஆனால் நமது இனிய தமிழ் மொழியின் நினைவு நம்மையும் அறியாமல் தோன்றி விடுகிறதே!

விளம்பரப் படங்கள் வாழட்டும் ஆனால் முக்கியமாக நம்முடைய அருமைத் தமிழ் மொழியின் இனிமை இந்தப் படங்களின் மூலம் பிரகாசம் குன்றாமல் வாழட்டும்!

ஏ. வி. எம். செல்லப் பிள்ளையில்
'சாவித்ரி' நடனமாடும் ஒரு காட்சி

முதல் தேதி

(பட விமர்சனம்)

சென்ற இதழில் 'திரைக்கதையில் இருவகை' என்ற கட்டுரையில், திரைக் கதாசிரியரின் சொந்தக் கற்பனையை அப்படியே பின்பற்றி எடுக்கப்பட்ட படத்தைப் பற்றியும், வேறொரு மொழியின் படக் கதையைப் பின்பற்றி எடுக்கப்பட்ட படத்தைப் பற்றியும் விமர்சித்திருந்தோம். இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த படம் தான் மதராஸ் வெளியீடான **'முதல் தேதி'**.

அன்றாட வாழ்க்கைப் பிரசினைகளைப் பெரிதுபடுத்திக் காட்டும் ரீதியில் இப்போதெல்லாம் தமிழ் படங்களில் அநேக சம்பவங்கள் புகுத்தப் படுகின்றன. பொது மக்களின் கண்களில் கண்ணீர் வந்தால்தான் அவர்கள் உணர்ச்சி வசப் பட்டவர்களாகிறார்கள் பட வசூலும் நல்ல மாதிரியில் இருக்கும் என்ற எண்ணம்தான் இதற்கு அடிப்படை.

'முதல் தேதி'யில் இந்த அடிப்படை தான் பிரதான இடம் வகிக்கிறது. ஆனால் ''கண்ணீரைப் பெருக்க வேண்டும்'' என்ற எண்ணத்தோடு படம் எடுக்கப் பட்டிருக்கவில்லை. நடு நடுவே சுத்தமான ஹாஸ்யங்களைக் கொண்டு நடுத்தரர் வாழ்க்கைப் பிரசினைகளை அருமையான கற்பனையோட்டத்தின் பின்னணியில் காட்டிக் கொண்டு போயிருக்கிறார் டைரக்டர் ப. நீலகண்டன். அவருடைய எழுத்தாளத்துவ சக்தி படத்தில் அநேக சம்பவங்களில் நன்கு தெரிகிறது.

பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கும் பெரிய பணக்காரர்களின் முன்னே, 'முதல் தேதி வருகிறதே, அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது' என்று விழிக்கும் நடுத்தரர்களின் பிரசினை படத்தில் நன்கு சித்திரிக்கப் பட்டிருக்கிறது. இந்த வகையில் வெளியாகும் முதல் படமும் 'முதல் தேதியே' என்று சொல்ல வேண்டும். இதுவரை இளைஞனும் யுவதியுமாகவே நடித்து வந்த பெரிய நட்சத்திரங்கள் இந்தப் படத்தில்

நடுத்தர வயதினர்களாக நடித்திருப்பது, அந்தப் பாத்திரங்களுக்கு அலாதியானதொரு குணச்சித்திரம் அளித்திருப்பதைப் போலிருக்கிறது.

'முதல் தேதி'யின் கதை இதுதான்: முதல் தேதியன்று பாங்கிக்கு வேலைக்குப் போன சிவஞானம் பாங்கி மூடப்பட்டிருப்பதைக் கண்டு திகைத்தான். அவன் குடும்பத்தின் நிலை அதற்குப் பிறகு தத்தளிக்கிறது; சிவஞானம் எங்கெங்கோ வேலை தேடி அலைகிறான். குமாஸ்தாவாகவே இருந்து பழக்கப்பட்ட சிவஞானத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாரும் ஏதாவதொரு கைத்தொழிலின் அருமையைப் பற்றியே சொல்லுகிறார்களே தவிர, ஒருவராவது வேலை தர முன் வரவில்லை. நிர்ப்பந்தவசத்தில் சிவஞானம் தான் ஒரு குறிப்பிட்ட வேலையிலிருப்பதாகச் சொல்லி வருகிறான். முப்பத்தோராந் தேதியன்று அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. படுத்த நிலையிலேயே கனவு காண்கிறான். அந்தக் கனவில், தான் தற்கொலை செய்து அதற்குப் பிறகு தன் குடும்பம் நிர்மூலமாகும் கோரத்தைக் கண்டு திடுக்கிட்டு விழிக்கிறான். பிறகு அவனுக்கு நல்ல வேலை கிடைக்கிறது. நடுத்தரர்களின் கஷ்டங்களுக்காக அவர்கள் தங்களை முழுவதும் பலியிட்டுக் கொண்டு விடக்கூடாது என்பதை உணர்ந்து சந்தோஷ வாழ்க்கை நடத்துகிறான் சிவஞானம்.

ஆபீஸுக்குப் 'போவதாக' சிவஞானம் போகும் சமயத்தில் வழியில் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருக்கும் தன் குழந்தைகளைப் பார்ப்பது அருமையான கட்டம். சிவஞானம் ஆவியாகச் சுற்றி அலைவது, தன் குடும்பத்தின் துயரங்களைத் தானே அருகில் இருந்து பார்ப்பது ஆகிய கட்டங்கள் நன்றாக எடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கட்டங்களை விரசமாகவோ, விகாரமாகவோ காட்டாமல் அளவறிந்து காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

படத்தில் நடிகர்கள் யாவரும் சர்வ சகஜமாக வந்து போவதைப் போல்தான் இருக்கிறதேயொழிய ஒருவராவது தங்கள் முக்கியத்துவத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள அதிகப் படியாக நடித்ததாகத் தெரியவில்லை. சிவாஜி கணேசன் தம்முடைய புதிய நடிக உருவில் நன்றாகச் சோபித்திருக்கிறார்; அஞ்சலிதேவி அருமையாக நடித்திருக்கிறார். சிவஞானத்துக்கு வேலை அளிக்க முன் வரும் 'எஸ்டேட்' பிரமுகராக நடித்திருப்பவர் மிக இயற்கையாக நடித்திருக்கிறார். கம்பீரம், கருணை, தீவிரம் ஆகிய பல குணங்களை முகத்தில் பிரதிபலித்திருக்கிறார் அவர்.

சில வாழ்க்கைப் பிரசினைகளை அடிப்படையாக வைத்துச் சமீபத்தில் வெளியான படங்களுக்குள் 'முதல் தேதி'யில் இயற்கையையொட்டிய சூழ்நிலைகள் நிறைய இருக்கின்றன. ஹாஸ்யமும் சோகமும் கலந்து பரிணமித்திருக்கும் 'முதல் தேதி' முதல்தரமான படம்.

முன்னு

(பட விமர்சனம்)

மோஹன் பாலி என்பவரின் கதையான 'முன்னு'வைப் பிரசித்திப் பெற்ற உருதுக் கதாசிரிய குவாஜா முஹமத் அப்பாஸ் திரைக்கதை வசனமாக அமைத்து படமாய் அவரே டைரக்ட் செய்து வெற்றியும் கண்டு விட்டார். இந்தக் கதை பிரதமர் ஜவஹரின் பாராட்டுதலையும் சினிமா விசிறிகளின் பாராட்டுதல்களையும் பெற்றதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. பாடல்களே இல்லாத இந்தப் படம் அபாரமாக அமைந்துள்ளது. சார்லஸ் டிக்கன்ஸனின் கதையான 'ஆலிவர் ட்விஸ்டில் வரும் பன்னிரண்டு வயதுப் பையனைப் போலவே 'முன்னு'விலும் ஒரு பையன் வருகிறான். அவன் பெயர்தான் ரோமி. கதையின் தரத்தையே இந்தப் பையன் தன் நடிப்பினல் உயர்த்திக் காட்டுகிறான்!

அனாதைச் சிறுவனான ரோமி தன் தாயைக் காணுவதற்காக வீதி வீதியாகத் தெருத்தெருவாகச் சுற்றிக் கொண்டு வரும் காட்சி, நம் மனத்தையெல்லாம் உருக்கி விடுகிறது. இது குழந்தைக்குத் தாயிடம் உள்ளப் பாசத்தைக் காட்டுகிறது. 'தான் அனாதையாக வாழ்வதா? கூடாது' என்ற வீரலட்சியத்துடன் யாருடைய பேச்சையும் கேட்காமல் 'கண்டே பிடித்துத் தீருவது' என்ற பிடிவாதத்துடனும் அந்த ரோமி என்ற சிறுவன் நேரமெல்லாம், நாளெல்லாம் தன் தாய்க்காகச் சுற்றி சுற்றி அலைகிறான்; அலைந்து கொண்டேயிருக்கிறான் கண்டு பிடிக்காமலேயே இறந்தும் விடுகிறான்!....

அனைவரும் பார்த்து இன்புற வேண்டிய ஹிந்திப் படம் 'முன்னா.'

ரேடியோவில் சினிமா சங்கீதம்

அகில இந்திய ரேடியோவில் மீண்டும் சினிமா இசைத் தட்டு சங்கீதம் கேட்கலாம் என்ற செய்தியை ரேடியோ ரசிகர்கள்விரும்பி வரவேற்றார்கள். இது சம்பந்தத்தில் சர்க்காருடைய பிடி தளர்ந்திருப்பது நல்லதே.

ஆனால் சர்க்கார் அறிக்கையிலிருந்து பார்த்தால், தற்போது ரேடியோவில் சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படாமல் இருப்பதற்குச் சினிமாப் பட முதலாளிகளே காரணம் என்று ஏற்படுகிறது. அ. இ. ரே.வுடன் பட முதலாளிகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் திடீரென்று அவர்கள் ரத்துச் செய்து கொண்டார்கள் என்பதே அரசாங்கத்தார் வாதம்.

சரி; அப்படியே இருக்கட்டும். ரேடியோவுடன் தங்கள் ஒப்பந்தங்களை ரத்துச்செய்து கொள்ளாத படத் தயாரிப்பாளர்களின் படங்களைத் தொடர்ந்து ஒலிபரப்பி வருவதாகச் சொல்லப்படுகிறதே இதில் என்ன தர நிர்ணயம் இருந்தது என்று ஒரு ரேடியோ ரசிகர் கேட்கிறார். நல்ல பாட்டுகளாகக் கேட்டோமோ, தொடர்ந்து கேட்க முடிகிறதா என்றெல்லாம் சர்ச்சைக்குள் நாம் புக வேண்டிய அவசியமில்லை. ரசிகர்கள் அனைவரும் இதை நன்றாய் அறிவார்கள்.

ஆகவே இந்தச் சூழ்நிலையில், ''ரேடியோவில் இனி சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படும்'' என்று சென்ற மாதம் வெளியாகிய செய்தி மகிழ்ச்சியளிக்கக் கூடியதே. அரசாங்கத்தாரும் பட முதலாளிகளும் இது சம்பந்தத்தில் மனம் விட்டுப் பேசியிருப்பது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் அ. இ. ரே. விஷயத்தில் இது இன்னும் நடை முறையில் பரிபூரணமாக அமுலாகி வராதிருப்பது ரேடியோ ரஸிகர்களுக்கு ஏமாற்றமளிக்கக் கூடியதாக இருக்கிறது.

படச் செய்திகள்

* அமரர் 'கல்கி'யின் 'கள்வனின் காதலியை' ரேவதி ஸ்டுடியோஸார் துரிதமாகப் படமாக்குகின்றனர். சிவாஜி கணேசன், சாரங்கபாணி, குசலகுமாரி, பானுமதி, பி. டி. சம்பந்தம், துரைராஜ் ஆகியோர் நடிக்கிறார்கள். எஸ். டி. சுந்தரம் வசனம் எழுதியிருக்கிறார்.

* எம். ஏ. வி. பிக்சர்ஸார் தயாரிக்கும் 'பெண்ணரசி' ஒரு பெண்ணின் வீரத்தை எடுத்துக் காட்டும் அருமையான படமாயிருக்கும். இதில் பி. கண்ணாம்பா, ராஜசுலோசனா, ஏ. பி. நாகராஜன், எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா முதலியோர் நடிக்கின்றனர். படத்தில் கத்திச் சண்டைகள் நிறைய இருந்து பாமரரஞ்சகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* டைரக்டர் ராமண்ணா டைரக்ட் செய்யும் ஆர். ஆர். பிக்சரின் 'குலேபகாவலிக்குத்' தஞ்சை ராமையாதாஸ் வசனம், பாடல்களை எழுதி இருக்கிறார். படம் தமிழ் வருஷப் பிறப்பன்று வெளிவரும் என்று தெரிகிறது. நடிகர்

கள் எம். ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி, ஜி. வரலட்சுமி, தங்கவேலு, குசலகுமாரி முதலியோர்.

* பங்கிம் சந்திர சட்டோபாத்யாயரின் 'தேவி செளதுராணி' யைப்படித்து மகிழாதவர் களில்லை. அவருடைய இந்த நாவலைத் தழுவி ஏ. எஸ். ஏ. சாமி எழுதிய 'மகேஸ்வரியை' கே. ராமனுத் டைரக்ஷனில் மாடர்ன் தியேட்டர்ஸார் படம் எடுக்கப் போகிருர்கள். வசனம் ஏ. எஸ். ஏ. சாமியும் ஸ்ரீதரும் சேர்ந்து எழுதுவார்களாம்.

* டி. ஆர். மகாலிங்கத்தின் சுகுமார் புரொடக்ஷன்ஸ் விரைவில் ஒரு சமூகப் படத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. புதுமுகம் மீனுட்சி கதா நாயகியாக இதில் அறிமுகப் படுத்தப் படுகிருராம். ஐந்து பாடல்கள் சியாமா ஸ்டுடியோவில் பதிவாகி விட்டனவாம். ஆனுல் இன்னும் இந்தப் படத்திற்கு பெயர் வைக்கப்படவில்லை.

உட்கார்ந்திருக்கும் தினுசைப் பார்த்தாலே **'பெண்ணரசி'** என்று தெரியவில்லையா?

* ஏ. வி. எம். ஸ்டுடியோவின் நீண்ட நாள் தயாரிப்பான 'செல்லப் பிள்ளை' வளர்ந்து விட்டான். தமிழ் வருடப் பிறப்பன்றே திரைக்கு வந்து விடுவான் என்று நம்பப் படுகிறது. ஒழுக்கத்தின் மேன்மையை வாலிபர்களுக்கு வற்புறுத்தும் இந்தக் கதையில் கே. ஆர். ராமசாமி, பி. ஆர். பந்துலு, பி. டி. சம்பந்தம் பாலையா, தங்கவேலு, சாவித்திரி, பண்டரிபாய் ஆகியோர் நடிக்கின்றனர். எம். வி. ராமன் டைரக்ட் செய்கிருர்.

* நாராயணன் கம்பெனியாரின் தயாரிப்பான ''கணவனே கண்கண்ட தெய்வத்'தில் பானுமதியின் நடனங்கள் 'கேவா கலரில்' பம்பாய் மெஹ்பூப் ஸ்டுடியோவில் படமாகிறது. நடிகர்கள் ஜெமினி கணேசன், அஞ்சலி, பானுமதி, நம்பியார், 'ப்ரண்ட்' ராமசாமி ஆகியோர். டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்கிருர்.

* சேலம் மாடர்ன் தியேட்டர்ஸாரின் முழு நீளப்படமான 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' பரிசோதனை எல்லாம் முடிந்து விட்டதாம். கே. ராமனுத்தே டைரக்ட் செய்கிருராம்.

கமலா லீலா

நடன மணிகள்

எம்பிஎஸ்

1950 இறுதியில் ஒரு நாள் வாணி மஹாலில் 'கேரள சகோதரிகள்' கச்சேரி என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நானும் மற்றொரு நண்பரும் அந்தப் பக்கமாகச்செல்லுகையில் 'உள்ளே நுழைந்துதான் பார்க்கலாமே, என்று டிக்கட்டுடன் நுழைந்தோம். நுழைந்தது தான் தெரியும். பிறகு ஏ. எஸ். பி. அய்யர் கடைசியில் பேச ஆரம்பித்தது வரை என்ன நடந்தது என்றே தெரியவில்லை. சகோதரிகளின் நடனத்தில் இருந்த கவர்ச்சியும் வேகமும் இரண்டு மணிநேரம் கழிந்ததுகூடத் தெரியவில்லை, நடனத்தின் நுட்பங்களை நன்குணர்ந்த ஸ்ரீ ஈ. கிருஷ்ணய்யரும் சகோதரர்களின் எதிர் காலத்தைப் பற்றி அன்றே திட்ட வட்டமாகப் பேசியது இன்றுநினைக்கும் போது ஆச்சர்யமாகத் தான் இருக்கிறது.

கேரள சகோதரிகள் முறையே ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரிகள், ஸ்ரீ ஷண்முக சுந்தரம் பிள்ளை, ஸ்ரீ கோபால கிருஷ்ணன் இவர்களிடம் நடனம் பயின்று ரசிகர்களின் வரவேற்புக்குத் தகுந்த வகையில் நடனமாடி வருகிறார்கள்.

சகோதரிகள் பரதநாட்டியம் மட்டுமின்றி ஓரியண்டல் நடனங்களையும் பிரமாதமாக ஆடுகிறார்கள். கமலா ஆடும் அராபிய, எகிப்து நடனங்களும், லீலாவின் பர்மிய நடனமும் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றது என்றே சொல்லலாம்.

வரிசையில்...

ஹைதராபாத்தில் ஆடிட்டராக இருந்து வருகிறார் இவர்களது தகப்பனார் ஸ்ரீ ராமஸ்வாமி. குழந்தைகளின் நடன வளர்ச்சியில் சிரத்தை காட்டி நன்றாக பரதம் பயிலுவித்திருக்கிறார். திறமையும் ஆர்வமும் கொண்ட சகோதரிகள் பல படங்களிலும் நடித்து ஆடி புகழ் அடைந்துள்ளனர்.

சாதாரணமாக ரசிகர்களுக்கு "ஒருவர்" நடனமாடுவதை விட இருவர் அல்லது மூவர் நடனமாடுகிறார்கள் என்றால் உற்சாகம் நிறைய இருக்கிறது. சகோதரிகளுடைய நடனக் கச்சேரிக்கு செல்லும் ரசிகர்கள் நடனம் முடிந்தவுடன் 'இவரை விட அவர் தேவலை; அவரை விட இவருக்கு லய சுத்தம் அதிகம்' என்று சொல்வதுண்டு. ஆனால் கமல குமாரி, கஸ்தூரி சகோதரிகள் கச்சேரிக்குச் சென்றால், "யாரை விட யார் நன்கு ஆடுகிறார்கள்" என்று சொல்லத் திணறுவதுண்டு. ஒருவருக்கு ஒருவர் தாழ்ந்தவரல்ல என்று பிரமாதமாக ஆடுகின்றனர் சகோதரிகள். இவர்கள் திருச்சி ஸ்ரீ டி. வி. சௌந்தரராஜனிடம் முறைப்படி நடனம் பயின்றவர்கள்.

இவர்கள் திறம்பட ஆடுவதைப் பார்த்தால் இவர்களுக்கு நடனத்தில் பிறப்புரிமையே உண்டு என்று தெரிகிறது. நல்ல அழகும் நடனத்திற் கேற்ற உடல் கட்டும் உள்ள சகோதரிகளுக்குச் சிறந்த எதிர்காலம் ஏற்பட 'உமா' ஆசீர்வதிக்கிறாள்.

கமல குமாரி கஸ்தூரி

இலவசம்

ஹேர் ஆயில் நெ. 501 நரை மயிர் கறுக்கவும், ரோமம் உதிர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு புட்டி விலை ரூ. 1-15-0
3 புட்டி விலை ரூ. 5-0-0

எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் கம்பெனி ஹேர் ஆயிலை உபயோகிப்பவர்களுக்கு அழகான கைக்கடிகாரம் ஒன்றும் தங்க மோதிரம் ஒன்றும் இனமாகத் தருகிறோம். ஒரே சமயத்தில் மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 6 கைக்கடிகாரங்களும் 6 மோதிரங்களும் இலவசமாகத் தருகிறோம். திருப்திகரமாயிராவிடில் பணம் திரும்பப் பெறலாம்.

JAI HIND WATCH Co.,
P. B. 97, (UM) AMRITSAR.

உயர்ந்து வளருங்கள்

15 தினங்களில் 2 முதல் 6 அங்குலம் வரை வளர ஒய்ட் பில்ஸ் இன்றே சாப்பிடுங்கள் பலன் உத்திரவாதம் இல்லாவிடில் முழுதுகையும் திருப்பப்படும். மணியார்டர் மூலம் ரூ. 6 அனுப்புங்கள்.

சிறுவர் முதல் வயதானவர் வரை

வீரியம், பலம், ஆண்மை, ஆரோக்கியம், உற்சாகம் அதிகரிக்க 'கிரீன்டானிக்' உபயோகியுங்கள். பூரண மருந்துக்கு ரூ 10/- பாதி பாகம் ரூ. 5/- தபால் சிலவு ரூ. 1-2-0 தனி.

Dr. K. K. Narula (YM) Kingsway
DELHI-9.

ஆப்டோன், லைன், கலர் பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள், எங்கிரேவிங் வேலைகள், செய்யப்படும்.

ஜீதா அண் கோ,
17, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, மதராஸ்-1.

உமா

சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ. 3
வெளி நாடுகள்	ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

❀

உமா,
4/32, தாதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1.

19721

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் ஜி. உமாபதி, எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

Phone: 2200
UMA UP PRINTERS
TRADE MARK
PRINTERS &
CARDBOARD BOX MAKERS
Specialists in
CARTONS & CARDBOARD BOXES
4/32, THATHAMUTHIAPPAN ST, MADRAS-1.
எல்லாரக அட்டைப்பெட்டிகள் தயாரிப்பதில் சிறந்தது
உமா பிரிண்டர்ஸ்
போன்: 2200
4/32, தாதாமுத்தியப்பன் தெரு, மதராஸ்-1.

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers, "Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone: 2200